GOKULAM • செப்டம்பர் '94 • ரூ. 3.00

கோகுலம்





இப்போது

காயம் ஏற்பட்டாலும் மிக மிக வேடிக்கையானதாக

இருக்கும்!



புதிய

பேன்ட்-எய்ட்®

ஜங்கிள் புக் சீரீஸ்

மற்றும்

மிக்கி & டொனால்ட்

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

5019 TAM



கோகுலம்

கோகுலம் 1994
செப்டெம்பர்
மாத இதழ்
மலர் : 12
இதழ் : 8

உயிர்களிடத்தில்
அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

புதிய தொடர்கதையான 'இரண்டாவது சாவி' உங்கள் உள்ளங்களைத் தொட்டு விட்டது என்பதைக் கடிதங்கள்காட்டுகின்றன.

வள்ளியப்பா நினைவுப் போட்டியை அறிவித்ததற்கு ஏகப்பட்ட பாராட்டுக் கடிதங்கள் ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டிக் கடித மழை பொழிந்திருக்கிறார்கள். வெறும் பாராட்டு மட்டும் போதாது. மாணவர்களை ஊக்குவித்து எழுத வைத்து, போட்டியில் பங்கு கொள்ள வைத்துச் சிறுவர்களில் புதிய மாணவ எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து ஊக்கமளிக்க உதவ வேண்டும்.

இந்த மாதம் 5 - ஆம் தேதி ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிறது. மாணவர்கள் தங்கள் பழைய புதிய ஆசிரியர்களை மறந்துவிடாது. அவர்களுக்கு வணக்கம் கூறி, வாழ்த்து அனுப்பி தொடர்பு வைத்துக் கொள்ள இந்த நாளைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்களைக் கௌரவிக்கத் தவறும் சமூகம் உப்பில்லாத உணவைப் போன்றது. ஆசிரியர் - மாணவர் உறவை வைத்து இந்த இதழில் ஒரு நாடகம் வெளியாகியுள்ளது.





உங்களை இதுவரை மகிழ்வித்து வந்த புயா இந்த இதழில் விடைபெறுகிறார்.

'என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்' பகுதிக்கு எழுதாதவர்கள் உடனே எழுதி அனுப்புங்கள். நாங்கள் கேட்டால் புகைப்படம் அனுப்பினால் போதுமானது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

கோகுலம் செப்டெம்பர் 1994

இந்த இதழில்...

நாடகம்

தொடர்கதை






கதைகள்

கலைப்பொருள் செய்வோம்

மற்றவை



ஐஸ்கிரீம் ஆசை!

ஓர் ஊரில் இரண்டு ஆமைகள் இருந்தன. ஒன்று பெரியது, அண்ணா ஆமை. மற்றொன்று சிறியது, தம்பி ஆமை. இரண்டுமே பலே ஆமைகள். யாரையுமே நம்பாது.

ஒருநாள், இரண்டு ஆமைகளுக்கும் ஐஸ்கிரீம் தின்ன வேண்டும் என்ற ஆசை பிறந்தது. இரண்டும் கூடிப் பேசின. கடைத் தெருவில் இரண்டு ஐஸ்கிரீம் கடைகள் இருந்தன. எதில் விலை மலிவாகவும், சுவையாகவும், அதிகமாகவும் இருக்கும் என்பதைப் பற்றி இரு ஆமைகளும் வாரக்கணக்கில் விவாதித்தன. ஆமையூரில் உள்ள எல்லா ஆமைகளை யும் சந்தித்து, புள்ளி விவரங்களைச் சேர்த்தன. புள்ளி விவரங்களின் அடிப் படையில் எந்தக் கடைக்குச் சென்று ஐஸ்கிரீம் சாப்பிடுவது என்பதைப் பற்றி விவாதித்தன. ஆழ்ந்து பரிசீலனை செய் தன. ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. அண்ணா ஆமை ஒன்று கூறினால், அதை மறுத்துத் தம்பி ஆமை இன்னொன்று கூறும்.

ஒருநாள் இவை இரண்டும் இப்படி வாரக் கணக்கில் விவாதித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் வியந்து போன குரங்கு ஒன்று "என்னது! இப்படி வாரக் கணக்கில் விவாதித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டது.

இரண்டு ஆமைகளும் நடந்தவற்றைக் கூறின.

"இத்தனை புள்ளி விவரங்களைச் சேகரித்தும் உங்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்றால் ஐஸ்கிரீம் ஆசையை விட்டு விடுவதுதானே?" என்று கேட்டது குரங்கு.

"அதெப்படி குரங்காரே! நீங்களெல்லாம் மாதத்திற்கு ஒரு முறை ஐஸ்கிரீம் சாப்பிடுவதாக நாங்கள் எடுத்த புள்ளி விவரங்கள் கூறுகின்றன. நீங்கள் மாதத்திற்கு ஒரு முறை சாப்பிடுவதை நாங்கள் எப்பவாவது ஒரு முறையாவது சாப்பிட்டுச் சுவைக்க வேண்டாமா? எங்களுக்கு மட்டும் ஆசை இருக்காதா?" என்று கேட்டன இரு ஆமைகளும்.

"நீங்கள் கூறும் விவரங்களை எல்லாம் பார்த்தால் இப்போதைக்கு நீங்கள் ஐஸ்கிரீம் தின்னப் போகிறவர்களாக எனக்குத் தோன்றவில்லை" என்றது குரங்கு.

"அப்ப, நீங்களே எங்களுக்கு உதவி பண்ணுங்களேன். எந்தக் கடையில் சாப்பிடுவது என்பதை நீங்களே முடிவு பண்ணுங்களேன்" என்றது அண்ணா ஆமை.


"ஆமாம் ஆமாம். நீங்களே முடிவு பண்ணுங்கள். நானும் அதற்குக் கட்டுப்படுகிறேன்" என்றது தம்பி ஆமை.

"சரி, பூ விழுந்தால் வடகோடி ஐஸ் கிரீம் கடை. தலை விழுந்தால் தென் கோடி ஐஸ் கிரீம் கடை. சரிதானா? பூவா . தலையா போடட்டுமா?" என்று கேட்டது குரங்கு.

அண்ணனும் தம்பியும் ஒப்புக் கொண்டன. குரங்கு ஐம்பது காசு நாணயத்தை வாங்கி, கைவிரலில் வைத்துச் சுண்டிப் போட்டது. "ணிங்..." என்ற சத்தத்துடன் காசின் தலைப்பக்கம் தரையில் விழுந்தது. "தென்கோடி ஐஸ்கிரீம் கடைக்குப் போங்கள்" என்று வழிகாட்டிவிட்டு ஓடியது குரங்கு.

இரு ஆமைகளும் கடைத் தெருவுக்கு நகர்ந்து போய்த் தென்கோடிக் கடையில் நுழைந்து, நாற்காலியில் அமர்ந்து கொண்டன. இரண்டும் வனிலா ஐஸ்கிரீமுக்கு ஆர்டர் தந்தன.

"அடடா, என் குடையை பூவா தலையா



போட்டுப் பார்த்த இடத்திலேயே வைத்து விட்டேனே! நான் பொடி நடையா போயி, நொடியில் கொண்டு வந்துடறேன். அதுவரை நீ தின்னாமல் இரு" என்று கிளம்பியது



அண்ணன் ஆமை.

"ஐஸ்கிரீமுக்குக் காசு கொடுத்து, டோக்கன் வாங்கியிருக்கோம். ஆர்டர் பண்ணியாச்சு. வேண்டாம்னா காசைத் திருப்பித் தர மாட்டாங்க. அதனால நீ சீக்கிரமா வா," என்றது தம்பி.

"நான் வரும் வரை நீ ஐஸ்கிரீமைச் சாப்பிடக் கூடாது" என்று கூறிவிட்டு நகர்ந்தது அண்ணன்.

ஐஸ்கிரீம் வந்தது. நேரம் ஓடியது. அண்ணனை இன்னும் காணவில்லை. இரண்டு ஐஸ்கிரீமும் கரைந்து உருகி ஓடிவர ஆரம்பித்தன.

சரி, நாமாவது ஒழுகி வருவதைச் சாப்பிடலாம் என்று ஸ்பூனை எடுத்தது தம்பி.

"நீ இப்படிப் பண்ணுவேன்னு எனக்குத் தெரியும். அதான் நான் இன்னும் போகவே இல்லே! இங்கேயே ஒளிஞ்சுக்கிட்டு இருக்கேன்" என்று மறைவில் இருந்து வெளியே வந்தது அண்ணன் ஆமை.

"இந்த நூற்றாண்டில் நீங்கள் ஐஸ்கிரீம் சாப்பிடப் போவதில்லை!" என்று கூறியபடி உள்ளே நுழைந்தது குரங்கு.

- எஸ். பார்த்தசாரதி,

பெயரைக் கொடுத்தியா?

"வினோத்...., வினோத்..." என்று அழைத்துக் கொண்டே வந்தான் கபிலன்.

"என்னடா...கபிலா?"

"ஓட்டப்பந்தயத்துல சேர விருப்பப்படுறவங்க இன்னிக்குப் பேர் குடுக்கணும்னு சொன்னாங்கல்ல. நான் இன்னிக்கு ஸ்கூலுக்கு வரல. அதனால நீ பேர் குடுக்கறப்போ என்னோட பேரையும் சேர்த்துக் குடுத்துடுடா."

"ஏன்டா...இன்னிக்கு ஸ்கூலுக்கு வரமாட்டியா?"

"ஆமாம் வினோத். எங்க பாட்டிக்கு உடம்பு சரியில்லன்னு தகவல் வந்திருக்கு. எங்கம்மா மட்டும் தனியா போக மாட்டாங்க. அவங்களுக்குத் துணையா நானும் போகப் போறேன். வரதுக்கு ரெண்டு நாளாவது ஆகும்டா. ரேஸுக்குத் தான் இன்னும் பத்துநாள் இருக்கே."

கபிலனும், வினோத்தும் ஒரே பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படிப்பவர்கள். ஒரே தெருவில் வசிப்பவர்களும் கூட.

கபிலன் புத்திசாலி. படிப்பில் துடியாக இருப்பான். வகுப்பில் எப்பொழுதும் முதல் ரேங்க்தான். வினோத் எப்பொழுதுமே இருபது ரேங்குக்குள்தான் வருவான். இருவரும் ஒரே தெருவில்வசிப்பதால் பாடத்தில் தனக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கபிலனிடம் கேட்டுத் திருத்திக் கொள்வான். அதனால், இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள்.

பள்ளியில் வருடா வருடம் நடைபெறும் ஓட்டப்பந்தயத்தில் இருவரும் கலந்து கொண்டு முதல் இரண்டு இடத்தைப் பிடித்து விடுவார்கள்.

வினோத், கபிலனுடன் நட்புப் பாராட்டினாலும், அவனிடத்தில் கொஞ்சம் பொறாமை இருக்கவே செய்தது. அதற்குக் காரணம். "வினோத்...கபிலாவும் உன் வயசுப் பையன் தானே? ரெண்டு பேரும் ஒரே வகுப்புத்தானே? அவன் அவனுக்குப் பாடம் எடுக்கும் அதே ஆசிரியர்கள் தானே உனக்கும் எடுக்கறாங்க? அவன் மட்டும் எப்படி நல்லா படிக்கிறான். நீயும் இருக்கியே" என்று அவன் தந்தை அவனை மட்டம் தட்டுவதுதான்.

ஓட்டப் பந்தயத்துல கலந்து கொள்ளப் பெயர் தர உடற்பயிற்சி ஆசிரியரின் அறைக்குச் சென்றான் வினோத்.

"என்ன வினோத், நீ மட்டும் வந்திருக்கிறே! கபிலா வரவில்லையா?" என்று கேட்டார் ஆசிரியர் வியப்புடன்.

"கபிலாவுக்கு உடல் நிலை சரியில்லை சார். அவனால் இந்த முறை பந்தயத்தில் கலந்து கொள்ள முடியாதாம்."

வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்ட மகிழ்ச்சியில் தன் பெயரை மட்டும் கொடுத்துவிட்டு வந்தான் வினோத்.

ஊரிலிருந்து திரும்பிய கபிலன் வினோதத் தேடிச் சென்றான்.

"என்னடா.ஓட்டப் பந்தயத்துக்கு என் பேரையும் குடுத்துட்டியா?"

"அது வந்து..கபிலா..ரேஸுக்குத் தேவையான ஆள் சேர்ந்துட்டதால ஸ்கூலுக்கு வந்தவங்களோட பேரை மட்டும் தான் எடுத்துப்பேன்னு, சார் சொல்லிட்டாருடா"- வாய் கூசாமல் பொய் கூறினான் வினோத்.

"அப்படியா! சரி பரவாயில்ல," -ஏமாற்றத்துடன் விடை பெற்றுச் சென்றான் கபிலன். நண்பன் நம்மிடம் பொய்யா சொல்லப் போகிறான் என்ற நம்பிக்கை அவனுக்கு.

மறுநாள் பள்ளி மைதானத்தில்



கபிலனைப் பார்த்து அழைத்த உடற்பயிற்சி ஆசிரியர், "கபிலா...வினோத் எல்லாவற்றையும் கூறினான். கவலைப்படாதே. அடுத்த வருடம் கலந்துக்கலாம். உடல் நலம்தான் முக்கியம்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

குழப்பமடைந்த கபிலன் ஊகித்து ஓரளவு உண்மையைப் புரிந்து கொண்டான். பிறகு, அதை அடியோடு மறந்தான்.

பள்ளி ஆண்டு விழா. சிறப்பு விருந்தினரும், தலைமை ஆசிரியரும், ஆசிரியர்களும், பெற்றோரும், மாணவர்களும் நாற்காலிகளை ஆக்கிரமித்திருந்தனர். விழா மேடையில் கரவொலி எதிரொலிக்க வினோத் ஓட்டப் பந்தயத்தில் முதல் இடத்தைப் பெற்றதற்காக பரிசுக் கோப்பையையும், சான்றிதழையும் பெற்றான்.

விழா முடிந்து வீடு திரும்பியவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், அவன் மனத்தின் ஓர் இடத்தில் வலி இருக்கவே இருந்தது. விறுவிறுவென்று கபிலாவின் வீட்டிற்குச் சென்றான்.

"வாடா வினோத்..." பாராட்டுகள்! என்று வரவேற்றான் கபிலன்.

"என்ன மன்னிச்சுடுடா. உம்பேர நான்தான்டா வேணும்னே குடுக்காம இருந்திட்டேன்."

"எனக்குத் நல்லாத் தெரியும் வினோத். பி.டி.சாரே எங்கிட்ட வந்து கேட்டாரு. எனக்குப் புரிஞ்சுப் போச்சு. ஆனாலும் நல்லவேளை நான் வாயைத் தொறக்கல."

"நீ எனக்கு எவ்வளவோ உதவிகள் செஞ்சிருந்தும் நீ என்னைவிட நல்லா படிக்கிறியேங்கர காரணத்துனால உனக்கு, துணிஞ்சு துரோகம் பண்ணிட்டேன்" என்று அழுதான் வினோத்.

"வினோத். போட்டியும், பொறாமையும் படிப்புலதான் இருக்கணுமே தவிர மற்றவங்க மேல இருக்கக்கூடாது. இனிமே இந்த மாதிரி யாருக்குமே செய்யாதடா."

"கபிலா..நீ நெனச்சிருந்தா என்ன அப்பவே மாட்டி விட்டிருக்கலாம். ஆனா, நீ அப்படிச் செய்யல. இந்தப் பரிசுக் கோப்பையை எனக்குக் கிடைச்சதாவே நினைக்கலேடா. உன்னுடைய பெருந்தன்மைக்குக் கிடைச்சது தான்டா இந்தக் கோப்பை" என்றான் வினோத் மனநிறைவுடன்.

எம். அனிஸா



திருடன் திணறினான்!

திருத்தணிக் கோவிலில் தேரோட்டத் திருவிழா. தேர் ஏறி வரும் முருகனைக் காண, மக்கள் கூட்டம், கடலெனத் திரண்டிருந்தது.

நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் கூட்டத்தின் நடுவே இருந்தார். அவரது இடுப்பில், செருக்குடன் அமர்ந்திருந் தான், சின்னஞ்சிறு குழந்தை ஒருவன்.

பையனை வெகு நேரம் சுமந்ததால் உண்டான சோர்வு அம்மாவை வாட்டியது. அதனால், அவனை இடுப்பினின்றும் இறக்கி விட்டுத் தரையில் சற்று நடந்து வரச் சொன்னார். கீழே விடப் பட்டதும், தன்னை மீண்டும் தூக்கிக் கொள்ளச் சொல்லி, அழுது அடம்பிடித்து, மண்ணில் விழுந்து புரளத் தொடங்கினான் சிறுவன்.

தாய்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மனம் குழம்பியது. அவருக்கு ஒத்தாசை புரிகிற மாதிரி அங்கு வந்து சேர்ந்தான் ஒரு புது மனிதன். அவன் சிறுவனை ஆசையாகத் தூக்கிக் கொண் டான். தின்பண்டங்கள் வாங்கித் தந்து, அவனைக் குதூகலப்படுத்தினான். அம்மாவும் ஆறுதல் பெற்றார்.

மூவரும் மெல்ல முன் நோக்கி நடக்கலாயினர். கூட்டம் நெருக்கியடித்தது. அந்தப் பரபரப்பில், தாயும் மகனும் வெவ்வேறு பக்கமாகத் திசை மாறி விட்டனர். பையனைத் தனி இடம் ஒன்றுக்கு அழைத்துப் போனான் புது மனிதன். அவனது விழிகள், சிறுவன் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை வெறித்து நோக்கின.

பையன் மகா புத்திசாலி. மனிதனின் கள்ளப் பார்வையிலிருந்து அவனது கெட்ட எண்ணத்தைப் புரிந்து கொண் டான். உடனே, கழுத்துச் சங்கிலியைக் கையால் இறுகப் பற்றிக் கொண்டு, பெருங்குரல் எடுத்து அழத் தொடங்கினான். புதியவனோ, ஏதேதோ கூறி அவனை அமைதிப்படுத்தப் பார்த்தான். ஆனால், பையனின் அழுகை மேன் மேலும் கூடியதே தவிர, ஒரு சிறிதும் குறையவில்லை!

கூக்குரல் கேட் டுப் பலர் அங்கே கூடி விட்டனர். தனது தந்திரம் பலிக்காமல் போனதால் ஏமாற்றமடைந்த திருடன், பையனைப் பற்றியிருந்த பிடியை உதறிவிட்டு, 'தப்பித் தோம், பிழைத்தோம்' என்று ஓட்டமாய் ஓடி மறைந்தான்.

அங்கு வந்தவர்கள், "ஏன் தம்பி, அழுகிறாய்? உன் அருகே நின்றிருந்தவன் எதற்காக அப்படித் தலை தெறிக்க ஓடி ஒளிந்தான்?" என்று கேட்டான்.

பையன் பதில் கூறுவதற்குள், அவன் அம்மாவும் அங்கே வந்து விட்டார். மகனை வாரியணைத்து உச்சி மோந்தார். "களவாணிப் பயல்! பிள்ளையின் செயினைத் திருடிக் கொள்ளத்தான் கூட்டம் இல்லாத இடமாகப் பார்த்துத் தூக்கி வந்திருக்கிறான். நல்ல வேளை, குழந்தை உண்மையைப் புரிந்து கொண்டு, கூச்சல் போட்டு நம்மையெல்லாம் வரவழைத்து விட்டான்!" என்றார்.

பையனின் சமயோசித அறிவு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சின்னஞ் சிறு வயதில் சாமர்த்தியமாகத் திருடனிடமிருந்து தப்பியதுடன், தங்கச் சங்கிலியையும் பறி போகாமல் தவிர்த்துக் கொண்ட அந்தச் சிறுவன் யார் தெரியுமா? அவர்தான் பேரறிஞர் என்று போற்றப்படும் அறிஞர் அண்ணா.

— புவனை கலைச்செழியன்

டைனோசார் உண்மையா?


டைனோசார் என்ற பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் அடிபடுவதைக் கவனித்திருப்பீர்கள். இந்த டைனோசார் என்பவை என்ன?


நீங்கள் முதலைகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த முதலைகளின் மூதாதையரே டைனோசார் என்ற பயங்கரமான பல்லி இனம். 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்த பூமியில் வசித்தவை இவை. ஒரு மில்லியன் என்பது பத்து நூறாயிரம். பெருக்கிக் கொள்ளுங்கள்! இவை 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே மறைந்து விட்டன. அதாவது முதல் மனிதன் தோன்றுவதற்குப் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இவை மறைந்து விட்டன.

இவை மனிதன் தோன்று முன்பே தோன்றி மறைந்து விட்டவை என்பதால் இவைகளைப் பற்றி எழுதப்பட்ட தகவல்கள் எதுவும் கிடைக்காது. அப்படியானால், இவை இருந்த செய்தி எப்படிக் கண்டறியப்பட்டது?

பல காரணங்களுக்காக பூமியைத் தோண்டிய போது, உலகத்தில் பல நாடுகளிலும் பிரும்மாண்டமான இராட்சத எலும்புக் கூடுகள் கிடைக்க ஆரம்பித்தன. புதை படிவங்களும் (FOSSILS) கிடைக்க ஆரம்பித்தன. கட்டுக்கதை கட்டுபவர்களுக்கு அரிய வாய்ப்பு. இஷ்டத்திற்குக் கற்பனையை ஓட்டி இவை பற்றி அளக்க ஆரம்பித்தார்கள். விஞ்ஞானிகள் இந்தக் கதைகளைப் புறக்கணித்தாலும் அவ்வப்பொழுது கண்டெடுக்கப்படும் இராட்சத எலும்புக்









கூடுகளும், புதை படிவங்களும் இத் துறையில் அவர்கள் செய்ய வேண்டிய பணிகளை நினைவூட்டின.

ரோமானியர்கள் ஆண்ட காலத்திலேயே இத்தகைய இராட்சத எலும்புக் கூடுகளையும், புதை படிவங்களையும் சேகரித்து வைப்பவர்கள் இருந்தனர். 1677ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் பிளாட் என்பவர் தனக்குக் கிடைத்த ஒரு இராட்சத விலங்கின் தொடை எலும்பை வைத்து THE NATURAL HISTORY OF OXFORD SHIRE என்ற புத்தகத்தை எழுதினார். ஆனால் அவர் இதை ஒரு இராட்சத மனிதனின் எலும்பு என்று தவறாக ஊகித்தார். டைனோசர்களைப் பற்றி அறிவியல் அடிப்படையில் வெளியிடப்பட்ட முதல் முயற்சி இதுதான். 1818ல் இதே பல்கலையைச் சேர்ந்த வில்லியம் பக்லேண்ட் (WILLIAM BUCKLAND) என்பவர், கல்லுடைக்கும் குன்றுப் பகுதியில் சில இராட்சத எலும்புகளைக் கண்டு பிடித்தார். அவர் ஆராய்ச்சி செய்து இவை இராட்சத மனிதனின் எலும்புகள் அல்ல. விலங்கின் எலும்புகளே என்பதை உறுதிப் படுத்தி இவைகளை மெகலோ சார்ஸ் (MEGALOSAURUS) என்று குறிப்பிட்டார். இதற்கு 'இராட்சதப் பல்லி இனங்கள்' என்று பொருள். 1820ல் புவிஇயல் வல்லுனரான கைடன் மான்டில் GIDEON MANTELL என்பவரின் மனைவிக்கு தற்செயலாக ஓர் இராட்சப் பல் கிடைத்தது. அதை வைத்து ஆராய்ச்சி செய்தார். பல இடங்களில் அகழ்ந்து புதிய புதை படிவங்கள்,எலும்புகளைக் கண்டு பிடித்து இராட்சத பல்லியின் எலும்பே அது என்பதை உறுதிப் படுத்தி, அதன் உருவத்தையும் வரைந்து தந்தார். இதற்கு அவர் இட்ட பெயர் ஹைலோ சார்ஸ் (Hylo saurus) இவருக்குப் பின் வந்த சர் ரிச்சர்ட் ஓவன் (SIR RICHARD OWEN) இவை எல்லாமே டைனா






சார்ஸ் என்ற பொதுத் தொகுப்பு இராட்சதப் பல்லிகளே என்பதை நிரூபித்து இவைகளுக்கு டைனோ சார்ஸ் என்ற பெயரை முதன் முதலில் சூட்டினார். அரசாங்கங்கள் வேண்டிய உதவிகளைச் செய்ய, ஓவன் 1851ல் லண்டன் மாநகரில் டைனோ சார்ஸ் பற்றிய ஒரு கண்காட்சியை நடத்தினார். இதில் டைனாசார்களின் முழு உருவ மாதிரிகள், வரை படங்கள் வைக்கப்பட்டன. இவை இன்றும் பாது காப்பாக உள்ளன!.


இதற்குப் பிறகு டைனாசர்களைப் பற்றியும் அவை தங்கள் பகுதியில் வாழ்ந்திருக்கின்றனவா என்பதை அறியவும் உலகெங்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எலும்புக் கூடுகளும், புதை படிவங்களும், கால் அடிகளும், தொடை எலும்புகளும் முட்டைகளும் கூடக் கண்டு பிடிக்கப் பட்டன. நமது நாட்டில் கங்கைச் சமவெளிப் படுகைகளிலும், பிரும்ம புத்திரா பள்ளத்தாக்குகளிலும் கூட MEGALOSAURUS என்ற டைனாசரஸ் இனப் பிரிவின் புதை படிவங்கள் கிடைத்துள்ளன என்பது விந்தையான செய்தி.

இந்த இராட்சதப் பல்லிகள் பொது வாக டைனோசார்ஸ் என்ற பொதுப் பெயரால் குறிக்கப் பட்டாலும் இவை களுள் பல பிரிவுகள் பல்வகை உருவம் கொண்டவை



யாய் இருக்கின்றன. பறக்கும் இனமும் உள்ளன!

இவைகளில் சைவ டைனோசார் களும் இருக்கின்றன. இதன் பெயர் பிராக்கியோசீரஸ் (BRACHIOSAURUS) இதன் உயரம் 39 அடி (இரண்டு யானை) எடை 85 டன்கள்! தாவர உண்ணி டைனோ சார்களில் இதுவே மிகப் பெரியது. மிலிட்டரி (அசைவ) டைனோசார் களில் மிகப் பெரியது டைரன்னோ சார்ரெஸ் (TYRANNO-SAURUS) பார்க்கவே மிக பயங்கரமான தோற்ற முடையது இது. டைனோ சார்ஸ் என்றாலே இதன் பயங்கர உருவம்தான் நினைவுக்கு வரும். ஆறு மீட்டர் உயரம் கொண்ட இதன்



எடை 17டன்கள். பதினைந்து மீட்டர் நீளம் உடைய இதன் தலை மட்டும் 5 அடி நீளம். அகன்றவாய். கத்தி போல் நீண்ட 60 பற்கள். இதன் உணவு என்ன தெரியுமா? தாவர உண்ணியான பிராக்கியோ சாரஸ்தான்! நீண்ட பின் கால்கள் இரண்டும் பயங் கரமான வலு வுடையவை. முன் கால்கள் சிறியவை, வலுவற்றவை.

மிகச் சிறிய டைனோசார்களும் இருந்திருக்கின்றன. கோழி அளவில் இருந்த வகையின் பெயர் காம்ஸ்


சோக்நாத்ஸ் (COMPSOGNATHUS). ஆக பறப்பவை, ஊர்வை, நீந்துபவை என்று சுமார் 30 பெரிய பிரிவுகள் இவைகளில் உள்ளன.


பூமியை நடுங்க வைத்து அரசாண்ட இந்த பயங்கரமான டைனோசார்கள் எப்படி ஒன்று கூட மாதிரிக்கு மிஞ்சாது மறைந்தன என்பது பெரிய மர்மமாகவே இருக்கிறது. ஜுபிடர் என்ற வியாழன் கோளுடன் வால் நட்சத்திரத்தின் துண்டுகள் மோதியது போல், பூமியின் மீது ஏற்பட்ட வால் வட்சத்திர மோதலால் ஏற்பட்ட இயற்கை மாறுதல்களால் இவைகளுக்கு வாழத்தக்க தட்ப வெப்ப நிலை குலைந்து இவை மொத்தமாக அழிந்து போயின என்பதே அறிவியலாரின் ஊகம். இதை யாரும் மறுக்க வில்லை.

டைனோசார்கள் இன்று உலகெங்கும் பிரபலமாகி விட்டன. புவி அகழ்வாய்வு இயலில் இவை இன்று முக்கிய பங்கு வகிக்கின்றன. தங்கள் நாட்டிலும் டைனோசார்களின் புதைபடிவமோ, எலும்புகளோ கிடைக்காதா என்று ஆர்வமாக உலக நாடுகள் எல்லாம் ஆராய்ச்சி செய்து வருகின்றன.

டைனோசார்களின் உருவம் கொண்ட பனியன்கள், தபால் தலைகள், பொம்மைகள், புத்தகங்கள் வீடியோ பிலிம்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.

உறைந்து போன ஒரு கொசுவின் இரத்தத்தில் அழியாது உயிருடன் உறைந்து கிடந்த டைனோசாரின் உயிரணுவை எடுத்து, அந்த அணுவை கம்ப்யூட்டர் மூலம் முறைப்படி வளர வைத்து, டைனோசார் பண்ணை ஒன்றை ஆரம்பிப்பதாகப் பின்னப்பட்ட 'ஜுராசிக் பார்க்' என்ற ஆங்கில திரைப் படம் இன்று இந்தியாவில் சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 'ஜுராசிக்' என்பதற்கு என்ன பொருள்? 205-130 மிலியன் ஆண்டுகளுக்கு முன் வந்தவை என்று பொருள்.





அட்டையில் டைனோசார் பொம்மையுடன் கை குலுக்குவது **சிறுமி ரேணுகா. வண்ணப்படம்: யோகா.**



பாடும் பறவைகள்!

சென்னை நண்பருடன் புயா பேசிக் கொண்டு இருந்தார்.

"எத்தனை நாடுகளின் தபால் தலைகளிலும், நாணயங்களிலும் தமிழ் இடம்பெற்றிருக்கிறது என்பது தெரியுமா உங்களுக்கு?"

''எனக்குத் தெரிந்து ஸ்ரீலங்கா, மலேயா, சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளில் மட்டுமே'' என்றார் நண்பர்.

"சரிதான். சிங்கப்பூரை நாடு என்று அழைத்தாலும், இது பல தீவுகளின் இணைப்பே. இதன் பரப்பளவு சுமார் 570 சதுர கிலோ மீட்டர். சோழர் காலத்தில் இது ஸ்ரீ விஜயசாம்ராஜ்யத்துடன் இணைந்திருந்ததாக தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் குறிப்புக் காட்டினாலும், இதை மெய்ப்பிக்க இங்கே சான்றுகள் ஒன்று கூட இல்லை. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சிங்கப்பூர் ஒரு மீன் பிடித் துறைமுகமாகவே இருந்தது. ஆங்கிலேய கடற்படை தளபதி சர் ராபின்ஸ் (RAFFLES) என்பவர், இதன் முக்கியத்துவத்தை உணர்ந்தார். ஜோஹூர் சுல்தானிடம் இருந்து முதலில் ஆண்டுக்கு ரூ 75,000/- வாடகை என்ற ஒப்பந்தத்தில் இதை வாங்கி, நகரை வடிவமைத்து இதன் சிறப்புக்கு அடிகோலினார்."

"ஓகோ அதனால்தான் Raffles City என்று இதை அழைக்கிறார்களா!" என்று வியந்தார் நண்பர்.


"இவருடைய பெயரில் மிகப் பெரிய மாளிகை, பூங்கா, சாலை, நூலகம் எல்லாம் இங்கே இருக்கின்றன."

"சிங்கப்பூர் மக்கள் நன்றி மறவாதவர்கள்" என்று பாராட்டிய நண்பர், "ஆமாம், சிங்கப்பூர் அரசின் சின்னமாக ஒரு சிங்கமுகத்தைப் போட்டிருக்கிறார்களே... அது என்ன?" என்று கேட்டார்.

"அதற்குப் பெயர் மெர்லயன் (MERLION). இது புராண கால விலங்கு. சிங்கத்தலை, மீன் உடல். சிங்கப்பூர் நதி கடலோடு கலக்கும் இடத்தில் இதன் மிகப் பெரிய சிலை இருக்கிறது. சிங்க வாயில் இருந்து விழும் நீர், கடலில் கலப்பது போல அமைப்பு. இரவில் இங்கே மின்விளக்கு அலங்காரம் இருக்கும். இதற்கு அருகிலேயே ராபின்ஸின் அழகிய சிலை ஒன்றும் இருக்கிறது. தமிழ் மக்கள் இதை "செம்புத் துவான்"

என்கிறார்கள். மலாய் மொழியில் துவான் என்றால் துரை என்று பொருள். மாலையில் சென்று பார்ப்போம்."

சிங்கப்பூரில் பெரும்பான்மை சீனர்கள். ஆரம்ப காலத்தில் அதை செழிக்க வைத்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள் என்பதால் தமிழுக்கும், மண்ணின் மொழியான மலாய்க்கும், சீன மொழிக்கு உள்ள அதே சிறப்பைத் தந்து ஆங்கிலத்தோடு நான்கு மொழிகளுக்கும் "அரசு மொழி" கௌரவத்தைத் தந்திருக்கிறார்கள். ஆங்கில மொழியின் ஆதிக்கம் அதிக அளவில் பரவி வருவதால் பள்ளிகளில் ஆங்கிலத்திற்கு முதலிடமும், விருப்ப மொழியாக மற்ற மூன்றில் ஒன்றையும் எழுத்துப் படிக்க வகை செய்திருக்கிறார்கள். சிங்கப்பூர் (நான்யாங்) பல்கலை மூன்று மொழிகளின் வளர்ச்சிக்கும் சம அளவில் ஊக்கம் தருகிறது. தமிழ் எம். ஏ. பயிலவும், தமிழ்க் கல்வி புகட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரவும் தேசிய கல்விக் கழகம் பாடுபட்டு வருகிறது.



மூன்றாம் வகுப்பிலேயே மாணவர்கள் கேல்குலேட்டரைப் பயன்படுத்துவது கண்டு நண்பருக்கு ஒரே ஆச்சரியம். சென்னை நண்பர் ஓர் இலக்கியவாதி என்பதை அறிந்தவுடன், தேசிய கல்விக் கழகத்தின் தமிழ்த் துறை அவரை அழைத்துப் பேச வைத்து, கேள்விகள் கேட்டு சிறப்புச் செய்தது. உமறுப் புலவர் பெயரில் அமைந்திருந்த பள்ளி மண்டபத்தில் சிறுவர்களுக்காகக் கதை கூறுவதைப் பற்றி பெற்றோர்கள் எழுப்பிய வினாக்களுக்கு நண்பர் பதிலளித்து நிறைவு செய்தார்.

சிங்கப்பூரில் 'டி யான் பகு' என்ற ஓர் இடம். இதை எம்.ஆர்.டி. என்ற 'பாதாள ரயில்' மூலம் அடையலாம். இது ஓர் மே. டுப்பா ங்கான பகுதி. இதில் ஓர் அழகிய மினி பூங்கா இருக்கிறது. இதில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை எட்டு மணிக்கு ஓர் அதிசயம் நடக்கிறது. பெரும் பணக்காரர்களும் மற்றவர்களும் தாங்கள் வளர்க்கும் விதம் விதமான பறவைகளைக் கூண்டோடு கொண்டு வருகிறார்கள். வரிசை வரிசையாக அவைகளை மேலே தொங்க விடுகிறார்கள். கூண்டுகளில்தான் எத்தனை வகை! பிளாஸ்டிக், பிரம்பு, மூங்கில், கம்பி, ...ல், புற்கள், மரச்சிப்புகள், கண்ணாடி என்று பலவற்றாலும் செய்யப்பட்ட ...லைச் சிறப்புமிக்க கூண்டுகளின் வரிசையே பிரமிக்க வைக்கும். கூண்டுகளுக்குள் உள்ள வண்ணப் பறவைகள் பேசுகின்றன. பாடுகின்றன!


"சிக் சிக் சிக்....!"


"குலாங் குலாங் குலாங்"

"மிக் மிக் மிக்!"

"சிட் சிட் சிட்!"

"ட்ரகு ட்ரகு ட்ரகு!"





எல்லாம் சிட்டுகளும், மைனாக்களும், ஆஸ்திரேலியக் கிளிகளும் எழுப்பும் இனிமைக் குரல்தான்!

யாருடைய பறவை மிக அழகாகப் பாடுகிறதோ, யாருடைய பறவைக் கூண்டு மிக அழகாக கலைச்செறிவுடன் அமைந்திருக்கிறதோ அவர்களுக்குப் பாராட்டும் பரிசும் வழங்கிச் சிறப்புச் செய்கிறார்கள். அவர்களைப் பேட்டி கண்டு, கேள்வி கேட்டு, வழிகாட்டும் ஆலோசனைகளைப் பெறுகிறார்கள். உலகத்தில் இது மிகவும் அதிசயமாக நடைபெறும் நிகழ்ச்சியாதலால் இதைக் காண வெளிநாட்டினர் கூட்டம் அலைமோதுகிறது. இந்த நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வகையில் சிங்கப்பூர் அரசே "BIRD SINGING CONTEST" என்று வண்ணமிக்க ஒரு தபால் தலையை வெளியிட்டுள்ளது.

நண்பர் சென்னைக்குக் கிளம்ப வேண்டிய நாள் நெருங்கியது. அதற்கு முந்தின நாள், புயாவின் நண்பர்கள் சென்னை நண்பருக்கு ஒரு விருந்து கொடுத்தனர். இனிப்பு, முந்திரி வறுவல், காரம், காப்பி எல்லாம் இருந்தது. ஐஸ்கிரீம் மட்டும் இல்லை.

"என்னய்யா இது! ஐஸ்கிரீம் இல்லாம ஒரு விருந்தா?" என்று விருந்து கொடுத்தவர்களைக் கேட்டார் புயா.

"ஐஸ்கிரீம் கண்டிப்பாக இருக்கிறது. அது யார் செலவில் என்பதை இனிமேல்தான் முடிவு பண்ண வேண்டும்."

"என்னது! புதிரா?"


"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். நீங்கள் வெற்றி பெற்றால் ஐஸ்கிரீம் செலவு எங்களுடையது. நீங்கள் தோற்றால் செலவு உங்களுடையது."

"சரி, சொல்லுங்கள்?"

"நாற்பத்தி எட்டு மாடிக் கட்டடம் இருக்கிறதல்லவா?"

"ஆமாம். பேங்க் ஆஃப் ஹாங்காங் கட்டடம்தானே?"

"அதுலேதான். அதில் நடுவில் நான்கு லிஃப்டுகள் உண்டு. நான்கும் நாற்பத்தெட்டு மாடிக்கும் ஒரே தடவையில் போகும். ஓரத்தில் நான்கு மூலைகளில் நான்கு லிஃப்டுகள் உண்டு. இவை இருபத்தி நான்காம் மாடி வரை போகும். பிறகு அங்கிருந்து இன்னொரு நான்கு லிஃப்ட் இருபத்தைந்தாம் மாடியில் இருந்து நாற்பத்தெட்டு வரை போகும். என்னுடைய நண்பர் ஒருவர் நாற்பத்தெட்டாவது மாடியில் பணிபுரிகிறார். அவர் தினமும் ஓரத்தில் உள்ள லிஃப்டில் ஏறி இருபத்து நான்காவது மாடிக்கு வரு



அறிவியல் போட்டி - முடிவு

ஜூன் மாதத்தில் வெளியான அறிவியல் போட்டியில் ஏராளமானவர்கள் பங்குகொண்டுள்ள போதும் எல்லாம் சரியான விடையை ஒருவர் கூட எழுதவில்லை! "பாம்புத் தாரா" என்பதில்தான் எல்லோரும் தவறு செய்திருக் கிறார்கள். எனவே, ஒரு தவறு செய்தவர்களின் பட்டியலில் இருந்து குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. என். செந்தில்குமார், தருமபுரி. 2. வி.பி. காந்திமதி நாதன், மதுரை - 16. 3. பி. ஜீவகன், சென்னை - 116, 4. செ. செரீனா, திருவில்லிபுத்தூர், 5. ர. சிவலிங்கம், உதகை, 6. விசாலினி முத்துசாமி, ஈரோடு. 7. ஸ்ரீனிதா, புதுக்கோட்டை. 8. என். சண்முகம், ஈரோடு. 9. என். சிந்துஜா, தஞ்சை - 4. 10. கி. சரஸ்வதி, புதுவை - 8. 11. கே. என். நரேந்திரன், சின்னக்காஞ்சிபுரம். 12. என். சுபாஷிணி, சென்னை - 2. 13. ப. செண்பகமுருகன், சின்னாளபட்டி, 14. இ. அன்பழகன், புதுவை - 10. 15. உமையாள் முத்துசாமி, ஈரோடு.

சரியான விடை :

■	■	1 கொ	■	2, 10 கி	ளி	■	3 பா
4 தா	■	க்	■	ளி	■	■	ம்
11 க	ழு	கு	■	■	■	■	பு
ம்	■	■	12 கு	யி	ல்	■	த்
■	■	■	■	■	■	■	தா
13 பு	றா	■	14 வா	ன்	கோ	ழி	ரா
■	■	5 ஒ	■	■	■	■	■
6, 15 ம	ர	ங்	கொ	த்	தி	■	7 ஆ
யி	■	கு	■	■	■	■	ந்
ல்	■	வி	■	■	■	■	தை
■	16 மீ	ன்	கொ	த்	தி	■	■
8 தீ	■	■	■	9 க	■	■	■
க்	■	■	17 ப	ரு	ந்	து	■
கோ	■	■	■	ட	■	■	■
ழி	■	■	18 தே	ன்	சி	ட்	டு

வார். ஒரு மாடி ஏறி, இருபத்தைந்தாவது மாடியில் இன்னொரு லிஃப்டைப் பிடித்து நாற்பத்தி எட்டாவது மாடிக்குப் போவார். மாலையில் அலுவலகம் முடிந்து கீழே இறங்கும் போது மட்டும் மத்தியில் உள்ள லிஃப்டைப் பயன் படுத்தி நேராகத் தரைத் தளத்துக்கு வந்து விடுவார். இதற்கு என்ன காரண மாக இருக்கும் என்பதை நீங்கள் ஊகித் துக் கூற வேண்டும். அந்த நண்பருக்கு எண் ஜோசியத்திலோ, சகுனத்திலோ நம்பிக்கை இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதை நூறு எண்ணுவதற் குள் நீங்கள் கூற வேண்டும்" என்று கூறிய நண்பர் எண்ணத் தொடங்கினார்.

எல்லோரும் புயாவின் முகத்தையே ஆவலுடன் நோக்கினர். நண்பர் நாற் பதைத் தாண்டி விட்டார்.

"உங்கள் நண்பர் குள்ளமானவர். மத்திய லிஃப்டில் 48-வது மாடிக்குரிய பட்டன் உயரத்தில் இருக்கும். எட்டாது. அதனால் போகும் போது இரண்டு லிஃப்டில் ஏறிப் போகிறார். வரும் போது தரைத் தளத்திற்கு உரிய பட்டன் கைக் கெட்டும் உயரத்தில்தான் இருக்கும். அத னால் வந்து விடுகிறார்" என்றார் புயா அமைதியாக.

"உண்மையாகவே அற்புதம் புயா" என்று கைகுலுக்கிய நண்பர், உடனே ஐஸ்கிரீமுக்கு ஆர்டர் கொடுத்தார்.

"புயா, சிங்கப்பூர் மக்கள் எதைக் கண்டாவது பயப்படுகிறார்களா?" என்று கேட்டார் சென்னை நண்பர்.

"ஓ, பயப்படுகிறார்களே. உணவகங் களில் ஈ இருந்து விட்டால் அவர்களுக்கு நடுக்கம்தான். அந்த அளவுக்குத் தூய்மை யைக் காக்கிறார்கள். ஈ பறந்ததைக் கண்டதாக யாராவது போன் பண்ணி னால் கூடப் போதும், உடனே சுகாதாரத் துறையினர் வந்து அந்த உணவகத்தைப் பூட்டி சீல் வைத்து விடுவார்கள்."

"நீங்கள் பெருமையாக எண்ணுவது?"

"இங்குள்ள மக்களின் தூய்மை, நேர்மை, நாணயம், கட்டுப்பாடு, காலந் தவறாமை. சீன, தமிழ், மலாய் மக்களுக்கு இடையே உள்ள நட்புறவு; இணக்கமான மத உணர்வு."

சென்னை நண்பர் புயாவிடம் பிரியா விடைபெற்றார்.

அஸ்திவாரம்

கமலவேலன்



காட்சி - 1

(ஆசிரியர் சாமிநாதனின் வீட்டுக் கூடம். அவர், அவர் மனைவி சுசிலா, மகன் சேகர் ஆகியோர் இருக்க, வாசலில் ஏதோ சத்தம் கேட்கிறது)

சுசிலா : (எட்டிப் பார்த்து) அட வீட்டு வாசல்ல ஒரு கார்! தட்டுல மாலை, ஆப்பிள், ஸ்வீட் பெட்டி எல்லாம் இறங்குது!

சேகர் : கண்டிப்பா நம்ம வீட்டுக்கு இல்லே. வழி தப்பி இறங்கியிருப்பாங்க.

சுசிலா : உங்க அப்பாவைத் தேடிக்கிட்டு யார் வரப் போறாங்க.

சாமிநாதன் : என்னைத் தேடி கார்ல வரும் அளவுக்கு நான் பெரிய மனுஷன் இல்லேன்னு நானே ஒப்புக்கறேனே? ஏன் இப்படிக் குத்திக் குத்திக் காட்டி மனதைப் புண்படுத்தறீங்க? ஆரம்பப் பள்ளி ஆசிரியரைத் தேடி யார் வருவாங்க? பலப்பத்துல எழுதற பிள்ளைங்கதான் வருவாங்க. அதுகூட நான் வேலை பார்த்த வேலப்பட்டியில் இருக்கும் வரைதான். ஓய்வு பெற்று இங்கே இந்த சித்தூருக்கு வந்த பிறகு அதுவும் இல்லே.

சேகர் : என்னமோ ஆசிரியர் தொழில் கல்விக் கண்களைத் திறந்து வைக்கும் மகத்தான புனிதம் மிக்க தொழில்னு அடிக்கடி விவாதம் பண்ணுவீங்க. நீங்களே இந்த முடிவுக்கு வந்திட்டீங்களா?

சுசீலா : இன்னிக்குக் கல்வி அமைச்சராக இருப்பவர், அரசுச் செயலாளரா இருப்பவர், ஸ்ரீஹரி கோட்டாவில் முக்கிய விஞ்ஞானியாக இருப்பவர்கள் எல்லோருமே என்னிடம் படித்த மாணவர்கள்னு பெருமையா சொல்லிப்பீங்களே! அந்தப் பெருமை எல்லாம் என்னாச்சு?


சாமிநாதன் : (வருத்தத்துடன்) நான் மட்டும் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் பெருமை இல்லை. அது பைத்தியக்காரத்தனம் என்பதை இப்போ கொஞ்ச நாளா நான் உணர்ந்துக்கிட்டு வரேன்

சுசீலா : அரசாங்கத்துல பெரிய அதிகாரியா இருக்காரே... அவரா?

சாமிநாதன் : ஆமாம் அவரேதான். மழை பெஞ்சுக்கிட்டு இருந்தது. என்னைப் பார்த்ததும், வாங்க நானும் வீட்டுக்குத் தான் போறேன்னு கூப்பிட்டு ஏத்திக்கிட்டார்.

சேகர் : அப்ப ஜீப்புல வந்திங்களாப்பா! என்னிடம் சொல்லவே இல்லையே? அப்புறம் என்னவாச்சு?

சாமிநாதன் : அவருக்கு என்ன மரியாதை தெரியுமா? கடைவீதியில் அவரைத் தெரியாதவங்க இல்லே



சுசீலா. நீங்களெல்லாம் என்னைக் கேலி பண்ணினப்போ எனக்கு அது உறைக்கலே.

சுசீலா : இப்போ உங்க மனசு மாறும்படி என்ன ஆச்சு? நாங்க ஒன்னும் உங்களைப் புதுசாப் பேசலையே?

சாமிநாதன் : உங்க கேலியும் கிண்டலும்தான் வழக்கமாப் போச்சே. எனக்கு அதெல்லாம் பெரிசாவே படலே. போன வாரம், பக்கத்து வீட்டு ரமணியோட அப்பாவைக் கடை வீதியில் பார்த்தேன். ஜீப்புல வந்துக்கிட்டு இருந்தார்.

ம்போலிருக்கு. எத்தனை மரியாதையாய் அவரைப் பார்த்ததும் வணக்கம் போட்டு நடந்துக்கிட்டாங்க தெரியுமா? வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போனாரு. அன்னிக்கி அவர் கீழே வேலை பார்க்கும் அதிகாரிக்குப் பிறந்த நாளாம். அவர் தன் மனைவியோட வந்து, தட்டு நிறைய ஆப்பிள், ஸ்வீட் பாக்ஸ் எல்லாம் கொண்டு வந்து கொடுத்து வணங்கி விட்டுப் போனார்.

சேகர் : இதெல்லாம் ரொம்ப சகஜம்பா. தமிழ்ப் புத்தாண்டு தினம், ஆங்கிலப் புத்தாண்டு தினம், பொங்கல்,

தீபாவளி ஆகிய நாட்களில் இந்த மாதிரி வாழ்த்துக் கூற வரும் கூட்டம் அலை மோதும்.

சுசீலா : ஆமாம் ஆமாம். போன பொங்கலன்னிக்கி அவருக்கு வந்த ஆப்பிள் ஸ்வீட் எல்லாத்தையும் இந்தத் தெருவில் உள்ள எல்லா வீட்டுக்கும் கொடுத்தனுப்பினாங்க. நம்ம வீட்டுக்குக் கூட வந்ததே.

சாமிநாதன் : ஆசிரியர் தொழிலை என்னமோ மக்களுக்குப் பயன்படும் மகத்தான தொழில்; சமுதாயப்பணி. ஆசிரியர் என்பவர் தாய் தந்தையர்க்கு அடுத்ததாக வணங்கப்பட வேண்டியவர்னு சொல்லுவாங்களே தவிர, ஒரு சாதாரண அதிகாரிக்குக் கிடைக்கும் பெருமை, சிறப்பு, மரியாதை ஆகியவற்றில் நூற்றில் ஒரு பங்கு கூட அவருக்குக் கிடைப்பதில்லை என்பது கண்கூடு. ஆசிரியர் ஒரு ஏணி. இருந்த இடத்தில் நிலையாக இருப்பவர். அவரைக் கொண்டு மேலே ஏறி, உயர்ந்து சிறப்பான; உன்னத நிலைக்குப் போகின்றவர்கள், ஒருமுறை கூட அவரை மறுபடி எண்ணிப் பார்ப்பதில்லை.



சேகர் : நாங்க சொன்னப்போ, 'ஆசிரியர்களெல்லாம் லட்சியவாதிகள்னு குதிகுதின்னு குதிச்சீங்களே?

சாமிநாதன் : உண்மைதான். நான் இல்லேன்னு சொல்லலே. ஆனா, அனுபவப்பட அனுபவப்படத்தானே உறைக்குது? இப்படி ஏணியா இருந்து எண்ணற்ற மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திருக்கிறோமே... இவர்களில் ஒருத்தன் கூட ஒரு நல்ல நாள் பொல்லாத நாளில் நம்மைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேங்கறாங்களேன்னு ரொம்பத் தலை குனிவா இருக்கு. ஆசிரியனாக இல்லாமல், கோழிப் பண்ணை வைத்திருந்தால் கூட கோடீஸ்வரனாகி, மதிப்பும் மரியாதையும் பெற்று வாழ்ந்திருக்கலாமேன்னு தோணுது....

சுசீலா : இனிமே வருத்தப்பட்டு என்ன புண்ணியம்? உங்க பையனை யாவது படிச்சு வேற உத்தியோகம் பார்க்கத் தடை போடாதீங்க.

சேகர் : ரமணியோட அப்பா என்ன சொன்னார்?

சாமிநாதன் : அதைச் சொல்ல மறந்துட்டேனே? வர ஞாயிற்றுக்கிழமை அவர் திருப்பதிக்குப் போறாராம். யாரோ நண்பர் வேன் தரேன்னு சொல்லியிருக்கிறாராம். மூன்று பேருக்கு இன்னும் இடம் இருக்கும். நீங்களும் வாங்களேன்னு கேட்டார். சரின்னுட்டேன்.

சுசீலா : நாமும் குடும்பத்தோட திருப்பதி போகணும்னு எத்தனையோ வருஷமா பிளான் பண்ணினோம். எதுவும் நடக்கலே. ஏதோ, ரமணி அப்பா தயவுலயாவது அந்த வேங்கடேசப் பெருமாளைத் தரிசனம் பண்ண சான்ஸ் கிடைச்சிருக்கே. ஆமாம், எத்தனை மணிக்குக் கிளம்பணம்! நான் ஏதாவது பலகாரம் பண்ணி எடுத்துக்கிட்டு வரட்டுமா?



சாமிநாதன் : எதுவுமே தேவை இல்லை. எல்லாத்தையும் அந்த நண்பரே கவனிச்சுக்கறாராம். ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமணிக்கு சும்மா வந்தால் போதும்னுட்டார். கொடுத்து வைத்த புண்ணியவான்.

காட்சி 2

(ஞாயிற்றுக்கிழமை காலை. சாமி நாதனின் வீட்டுக் கூடம்.)

சாமிநாதன் : கொல்லைப் பக்கம் கதவைப் பூட்டினாயா?

சுசிலா : பூட்டிட்டேன்.

சேகர் : வாட்டர் பாட்டில்ல தண்ணி எடுத்துக் கிட்டேன் அப்பா.

சாமிநாதன் : என்னது! மணி ஆறேகால் ஆகப் போகுது! இன்னமும் ரமணி வீட்டுக்குக் கார் வரலையே! "வேன் வந்ததும் ஹார்ன் பண்றேன். வாங்கன்னு" ரமணி யோட அப்பா சொன்னாரே...

(ரமணியின் அப்பா உள்ளே வரு கிறார்.)

சாமிநாதன் : வாங்க சார் வாங்க... வேன் வந்ததும் ஹார்ன் அடிக்கச் சொல் றேன்னுட்டு நீங்களே வந்திட்டீங்களே...?

ரமணியின் அப்பா : சாமிநாதன் ஒரு தவறு நடந்து போச்சு. என்னை இந்த ஊரை விட்டு மதுரைக்கு திடீர்னு மாத்திட்டாங்க. வர முதல் தேதி அங்கே இருக்கணுமாம்.

சாமிநாதன் : அடடே! அப்படியா?

ரமணியின் அப்பா : ஆமாம். வேன் தரேன்னு சொன்னவர் என்னால் பயனடைந்து வருபவர். என்னை மாத் திட்டாங்கன்னு தெரிஞ்சதும் உடனே மனசு மாறிட்டாரு. போன் கூடப் பண்ணிக் கேட்டேன். ஊர்ல இல்லை யாம். அதனால கார் வராதுன்னு சொல் விட்டாங்க.. எல்லாம் பொய்ச்சாக்கு.

சாமிநாதன் : அட பாவமே!

ரமணியின் அப்பா : எனக்குக் கிடைத்து வரும் மாலை மரியாதையை எல்லாம் பார்த்து நீங்க மலைச்சுப் போயிருப்பீங்க. நாங்களெல்லாம் கறி வேப்பிலை மாதிரி. மணம் இறங்கியதும் தூக்கிப் போட்டுடுவாங்க.

சாமிநாதன் : என்னால் நம்பவே முடியலையே! இந்த சமுதாயம் என் மாதிரி ஆசிரியர்களை மட்டும்தான் மறந்து நன்றி கெட்டத்தனமா நடந்துக்கு தொன்னு ஆதங்கப்பட்டுக்கிட்டிருந்தேன்.

ரமணியின் அப்பா : உங்களைப் போன்ற ஆசிரியர்களையும் என் போன்ற அதிகாரிகளையும் சமமா எண்ணாதிங்க சாமிநாதன். என்னால் இனித் தங்களுக்குப் பயனில்லை என்றால் என்னைத் துதிபாடியவர்கள் விலகிக் கொண்டு விடுவார்கள். நாங்கள் மறக்கப்பட்டு விடுகிறோம். ஆனால் உங்களைப் போன்ற ஆசிரியர்கள் நிலை அப்படி இல்லை.

சாமிநாதன் : நீங்கள் எண்ணுவது தவறு. எங்களை ஏணியாகப் பயன்படுத்தி உயர்ந்த நிலைக்குப் போகிறவர்கள் எங்களை எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை. ஒரு நல்ல நாள் பொல்லாத நாளுக்கு எங்களை அழைப்பதும் இல்லை. அவர்கள் வருவதும் இல்லை.

ரமணியின் அப்பா : அதுதான் இல்லை. அவர்கள் உங்களிடம் பயின்ற காலத்திற்கும், அவர்கள் உயர்ந்து நிற்கும் காலத்திற்கும் இடையே எத்தனையோ ஆண்டு இடைவெளி விழுந்து விடுகிறது. வீட்டில் ஒரு நல்ல காரியம் நடைபெறும் போது முதல் பத்திரிகையை அனுப்ப எண்ணும் போது உங்களைப் போன்ற ஆசிரியர்களின் நினைப்பே அவர்களுக்கு முதலில் வரும். ஆனாலும் அவர்களிடம் சரியான முகவரி இருக்காது. இப்படித் தான் தொடர்பு விட்டுப் போகிறது. ஆனால் அதற்காக அவர்கள் உங்களை மறந்து விட்டார்கள் என்று எண்ணுவது தவறு. உங்களைப் போன்ற ஆசிரியர்களின் நினைப்பு என்றுமே பசுமரமாக உங்கள் மாணவர்களிடம் இருக்கும்.

சாமிநாதன் : *(உண்மையான மகிழ்ச்சியுடன்)* நீங்கள் சொல்வது உண்மைதானா? நான்தான் தவறாகக் கணக்குப் போட்டு விட்டேனா?

ரமணியின் அப்பா : இதில்லென்ன சந்தேகம். நம்மிடம் படித்து நல்ல உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் யாருமே நம்மை நினைப்பதில்லையே என்ற ஏக்கம் உங்களைப் போன்றவர்களுக்கு இருப்பது நியாயமே. இது எல்லா ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. இந்த ஏக்கம் வரும்படி, ஆசிரியர்களை விட்டு விடக்கூடாது என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் அடிக்கடி சொல்லுவார்.

சாமிநாதன் : எந்த இராதாகிருஷ்ணன்? நமது குடியரசுத் தலைவராக இருந்தாரே... அவரா?


ரமணியின் அப்பா : அவரேதான். அவருடைய பிறந்த நாளைத்தானே ஆசிரியர் நாளாகக் கொண்டாடுகிறோம்? அவர் குடியரசுத் தலைவராக இருந்த போது, அவருடைய பிறந்த நாளின் போது அதிகாரிகளும் பிரபலங்களும் அவரை வாழ்த்திப் பரிசளிக்க வருவார்களாம். அவர்களிடம், "எனக்கு வாழ்த்துக் கூறுவதை விட உங்களுக்கு ஆனா ஆவன்னா கற்றுக் கொடுத்த முதல் ஆசிரியருக்கு அவர்கள் பிறந்த நாளின் போதோ இல்லை புத்தாண்டு போன்ற பண்டிகை தினங்களின் போதோ வாழ்த்து அனுப்புங்கள். பரிசு அனுப்புங்கள். அதைக் கண்டு உண்மையான மகிழ்ச்சி அடைபவர்கள் அவர்களாகத்தான் இருக்க முடியும் என்பதை மறக்காதீர்கள்" என்பாராம்.


சாமிநாதன் : அப்படி யாரும் செய்து வருவதாகத் தெரியவில்லையே?

ரமணியின் அப்பா : காலம் மாறிக் கொண்டு வருகிறது. இன்றைய மாணவர்கள் தங்கள் ஆசிரியப் பெருமக்களை நினைவு கூர்ந்து வணங்கும் முறை வளரத் தொடங்கிவிட்டது. இதை நீங்களே பார்க்கப் போகிறீர்கள்.

சாமிநாதன் : சரி, திருப்பதிப் பயணத்தை என்ன பண்ணுவது?

ரமணியின் அப்பா : கிளம்பினது





"ஏன் டாக்டர், கிளினிக் வாசப்படியே கொஞ்சம் உயரமா வைச்சிருக்கக் கூடாது?"

— ஜெ அலி

கிளம்பினதுதான். நிறுத்த வேண்டாம். எல்லோருமே பஸ்ஸில் போய்விடலாம். நீங்க ரெடியா இருங்க.

(வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. கோட்டு அணிந்த ஒருவர் உள்ளே வருகிறார்.)

கோட்டு : *(சாமிநாதனைப் பார்த்து)* சார், என்னைத் தெரியவில்லையா? நான் உங்கள் பழைய மாணவன் சேது சார். மேற்படிப்பு, பயிற்சி எல்லாமே மேல் நாட்டில்தான். இப்போ இரண்டு மாதம் முன்புதான் இந்தியாவுக்கு வந்தேன். அகமதாபாத்தில் பெரிய மில்லின் மேனேஜரா வேலையில் சேர்ந்து இருக்கிறேன். எனக்கு ஆனா ஆவன்னா கற்றுக் கொடுத்த கல்வித் தெய்வம் தாங்கள்தான் சார். எனக்கு அடுத்த வாரம் திருப்பதியில் திருமணம். உங்களுக்கு நினைப்பு இருக்கோ இல்லையோ, என்னால் அதை மறக்க முடியாது. எனக்கு சீருடை தைக்கப் பணமில்லை. நீங்கள் திருப்பதி போக வைத்திருந்த பணத்தை எனக்குத் தந்து, சீருடை வாங்கிக் கொள்ளச் சொல்லித் தட்டிக் கொடுத்தீர்கள். நான் நல்ல நிலைக்கு வந்ததும் உங்களை நானே என் காரில் திருப்பதிக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். வெளிநாட்டில் இருந்து விட்டதால் என்னால முடிய வில்லை. வேலம்பட்டிக்குப் போய் உங் களைப் பற்றி விசாரித்தேன். அங்கே தகவல் தெரிந்து கொண்டு நேராக இங்க வருகிறேன்.

(பணியாள் ஒருவன் ஒரு பழக் கூடை யைக் கொண்டு வந்து வைக்கிறான்.)

சாமிநாதன் : இதெல்லாம் எதற்கு?

கோட்டு : ஆசிரியரையும் தெய்வத் தையும் பார்க்கப் போகும் போது சும்மா போகலாமா சார்? நான் இன்றைக்கு மிக உயர்ந்த நிலையில் இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம், வெளியே தெரியாத வலுவான அஸ்திவாரமாக நீங்கள் கற்றுக் கொடுத்த அடிப்படைக் கல்விதான்.

சாமிநாதன் : நான் கற்றுக் கொடுத் தது ஆரம்பக் கல்விதானே? அதற்கு பிறகு நீ எத்தனை பெரிய படிப்பெல்லாம் படிச்சு அயல்நாட்டுக்கும் போய் கல்விக் கற்று வந்திருக்கியே? இதெல்லாம் தானே உன் முன்னேற்றத்திற்குக் காரணம்?

கோட்டு : இருக்கலாம் சார். ஆனாலும் அந்த ஆரம்பக் கல்வியை அலுப்புத் தட்டாமல் வெறுப்பு விழாமல் கற்றுக் கொடுத்தது நீங்கள்தானே? அதை நான் எப்படி மறக்க முடியும்? நாளை காலை நான் வருகிறேன். என்னோடு கிளம்பி வரத் தயாராக இருங்கள். மூன்று நாள் திருப்பதியில் இருந்து திரு மணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது நானே உங்களை இங்கே கொண்டு வந்து விடுகிறேன் சார். என்னை வாழ்த் துங்கள்.

(கோட்டு, தரையில் விழுந்து வணங்கு கிறார்.)

ரமணியின் அப்பா : உங்கள் பழைய மாணவனை வாழ்த்துங்கள் சாமிநாதன். உண்மை அன்பு என்பது இதுதான். எனக்குக் கிடைத்தது எல்லாம் சுய நல அன்பும் மரியாதையுமே. இப்போ நீங்க மனசு வைச்சா நானும் உங்க மாணவ னோட திருப்பதிக்கு வரலாம். என்னை யும் கூட்டிக்கிட்டுப் போவீங்களா?

சாமிநாதன் : என்ன சார் இப்படி சொல்றீங்க. கண்டிப்பா நீங்களும் உண்டு.

சேகர் : அப்பா, இனிமேல் நான் உங்கள் ஆசிரியத் தொழிலைப் பற்றி கிண்டல் பண்ணமாட்டேன். நானும் படித்து முடித்ததும் உங்களைப் போல் ஆசிரியரா கத்தான் போகிறேன்.

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

காசு தராதே!

சி.ரமணன்

"ஹாய் வேந்தன்...இறங்குடா..." என்று வெளியே இருந்து குரல் கேட்டதும், தயக்கத்துடன் இருந்த வேந்தன் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கினான்.

"ஹாய் கதிர்"

கதிரேசன் வேந்தனின் பெட்டியை வாங்கிக் கொண்டான். சுற்று முற்றும் பார்வையைச் செலுத்திய வேந்தன், "என்னடா கதிர் இது! ஐஞ்சு வருஷத்துல மேலப்பட்டி இப்படி மாறிப் போச்சு! ஆகாசத்தை இடிக்கிற மாதிரி மரங்கள் உயர்ந்து நின்ற இடங்களில், கோட்டை மாதிரி தொகுப்பு வீடுகள்! கல் கட்டடங்கள்! இதுதானே சுமைதாங்கி இருந்த இடம்? இங்கதானே ஒரு பிரும்மாண்டமான பூவரசம் மரம் இருந்துது? அதையெல்லாம் என்ன பண்ணினாங்க? பார்க்கும்போதே மனதை என்னவோ பண்ணுதே?" என்று அரற்றினான் ஆற்றாமையோடு.

"இந்தியாவில் உள்ள எல்லாக் காடுகளுக்கும் என்ன கதி நேர்ந்ததோ அதே கதிதான் இந்த மேலப்பட்டிக் காட்டுக்கும் ஆகியிருக்கு. சுற்றுலாப் பயணிகளைக் கவர அழகழகா வீடு கட்டியிருக்காங்களே... இதெல்லாம் நம்ம பூவரச மரங்களையும் ஆலமரங்களையும் வெட்டித்தான் அவை இருந்த இடத்தில் கட்டியிருக்காங்க," என்றான் கதிரேசன்.

"ஏண்டா இதையெல்லாம் நீ கடிதத்தில் எழுதவே இல்லை?"

"ஆமாம், எழுதினா நீ வந்து என்ன பண்ணியிருப்பே? மரம் வெட்டறவங்களுக்கு எதிரா மறியல் போராட்டம் நடத்தித் தடுத்திருப்பியா?"

"ஏதாவது, முயற்சியாவது பண்ணியிருக்கலாம் இல்லே?"

"இப்பக்கூட நம்ம வீட்டுல ஒரு மிகப்பெரிய பூவரசமரம் இருக்குல்ல, அதை வெட்டணும்னு எங்க அப்பாவும் உங்க அத்தானுமான திருவாளர் வெள்ளையன் அவர்கள் திட்டம் போட்டு மரத்தை வெட்ட நாளும் பார்த்துட்டார்!"

"நாம ஓடிப் பிடிச்சு ஒளிஞ்சு ஆடுவோமே, அந்த மரத்தையா!"

"அதே மரத்தைத்தான். நான் என்ன சொன்னாலும், எங்கப்பா கேட்க மாட்டேன் என்கிறார். இதைத் தடுக்க நீதான் ஒரு வழி பண்ணணும். பார்ப்போம்?"

வேந்தன் யோசனையோடு கதிரைப் பார்த்தான்.

"வேந்தன், ஐஞ்சு வருஷத்துல இந்த மேலப்பட்டி தலைகீழா மாறிப் போச்சு. அதிக விலைக்கு ஆசைப்பட்டு, வயதான மரங்களை எல்லாம் வெட்டிட்டாங்க. ஊரின் பசுமை ஓடிப்போய் விட்டது. அதனால் மழை குறைஞ்சு போச்சு. மழை பெய்யாதற்குக் காரணம் மரங்களை



வெட்டியதுதான். இனிமே யாவது மரங்களை வெட்டாதீங்க" என்று எல்லோருமே மற்றவர்களுக்கு சொன்னார்களே ஒழிய யாருமே அதை கடைப்பிடிக்கலே. மழை எப்படிப் பொழியும்?"

சைக்கிள் வீட்டு வாசலில் நின்றது. வேந்தன் இறங்கிக் கொண்டு, பெட்டியைப் பின் சீட்டில் இருந்து எடுத்துக் கொண்டான். இருவரும் வீட்டுக்குள் வந்தார்கள்.

"வா வேந்தா" என்று அவனை வரவேற்றாள் கதிரின் அம்மா.

"ஐந்து வருஷத்துக்கப்புறம் இப்பவாவது வரத் தோணிச்சே" என்று அவனை வரவேற்றார் வேந்தனின் மாமா.

"என்ன மாமா! ஊரே காஞ்சு கிடக்கே?" என்று கேட்டான் வேந்தன்.

"மழை இல்லைன்னா காயத்தானே காயும்? படுபாவிங்க, எல்லா வயதான மரங்களையும் வெட்டி சாச்சுட்டாங்களே!"

"நம்ம வீட்டுல முன் பக்கம் இருந்த வேப்ப மரங்கள், மாமரம் எல்லாத்தையும் கூடக் காணோம்!"

"வேப்பம் புண்ணாக்கு, இயற்கை உரம் பண்ணறவங்க நல்ல விலைக்குக் கேட் டாங்க. விக்காம என்ன பண்றது?"

"இப்படித்தான் ஒவ்வொருத்தரும் எண்ணியிருப்பாங்க. மரம்கறது நம்ம வீட்டுக் கொல்லைப் பக்கம் இருந்தால் கூட, அது ஊர்ச் சமூதாயத்தின் சொத்து என்கிற எண்ணம் வேணும் மாமா. எங்க அப்பன் பாட்டன் வெச்ச மரம் தானே? எங்க வீட்டுல இருக்கிறதுனால எனக்குத் தான் உரிமை என்ற நினைப்புப் போகணும்"

மாமா தலை குனிந்து நின்றார்.

"நானும் கதிரும் எத்தனையோ சொல்லியாச்சு வேந்தா. அவர் கேட்கற வழியா இல்லை. கடைசில நம்ம வீட்டின் மூன்றாம் கட்டில் ஒரு பெரிய பூவரசு மரம் இருக்குதுல்ல. அதையும் வெட்ட ஏற்பாடு செய்திருக்கார்" – அம்மா திரும்பிப் பார்த்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நீயே நியாயத்தைச் சொல்லு வேந்தா. மழையோ அந்துப் போச்சு. குடிக்கிற தண்ணிக்குக்கூட கஷ்டம் வந்தாச்சு. நம்ம வீட்டுல இருக்கிற இரண்டு கிணற்றிலும் தண்ணி முழுக்க வரண்டு போச்சு. புதுசா



ஒரு கிணற்றைத் தோண்ட ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீரோட்டம் எங்குமே சரியா அமையலே, நம்ம வீட்டின் மூன்றாம் கட்டில் ஒரு பெரிய பூவரசம் மரம் இருக்கே தெரியுமில்லையா உனக்கு? எந்தக் கடுமையான வறட்சிக் காலத்திலும் கூட அதன் பசுமை குறையாது. அதுக்குக் கீழே நல்ல நீரோட்டம் இருக்கு. அங்கே கிணறு எடுத்தால் இருபது அடிக்குள்ளேயே நல்ல தண்ணி கிடைக்கும்னு நீரோட்டக்காரர் சொன்னார். அதனால, அந்த மரத்தை வெட்டிட்டு அதுக்குக் கீழே கிணறு வெட்ட போறேன். அதுக்குத் தான் உங்க அத்தையும், கதிரும் குறுக்கே நிக்கறாங்க" என்றார் மாமா.

"நம்ம வீட்டுக்குள்ளேயே ரெண்டு கிணறு இருக்கு. இப்ப மூணாவது கிணறு அவசியமா? அதுவும் கொள்ளுத் தாத்தா வயது ஆகிவிட்ட அந்தப் பழுத்த பூவரச மரத்தை வெட்டறது அவசியமா? இதைவிட, ஏற்கனவே இருக்கிற இரண்டு கிணறுகளையும் ஆழகுப் படுத்துங்க என்கிறேன். இதுதானே எளிது?" என்றாள் அத்தை.

"நான் முடிவு பண்ணிட்டேன். இனிமே மாத்த முடியாது. நாளை மறுநாள் நல்ல நாள். வெட்ட ஆரம்பிச்சுடு வாங்க. அந்த இடத்துல, கையோடு கிணறு



வெட்ட ஆரம்பிக்கிறாங்க'' என்றார் மாமா.

வாசலில் யாரோ அழைத்தார்கள்.

"வேந்தா. நீ குளிச்சு சாப்பிட்டுத் தூங்கு நான் ராத்திரி வந்து பார்க்கிறேன்" என்று விடை பெற்றார் மாமா.

வேந்தன் குளித்து விட்டு வந்தான்.. சாப்பாட்டு மேசையில் தட்டு வைத்திருந் தார்கள்.

"அத்தை. மூன்றாம் கட்டு பூவரச மரத்தடியிலேயே சாப்பிடறேன்" என் றான் வேந்தன்.

"நான் எதிர் பார்த்ததுதான்," என்று கூறிக் கொண்டே தட்டை எடுத்துக் கொண்டு வந்தான் கதிர்.

ஒவ்வொரு விடுமுறையின் போதும் வேந்தன் பட்டணத்திலிருந்து அத்தை வீட்டுக்கு வருவான். இரவு படுக்கை மட்டும்தான் வீட்டிற்குள். மற்றபடி பகல் நேரம் முழுக்க விளையாடுவது, படிப்பது, பாடி ஆடுவது எல்லாம் அந்தப் பெரிய பூவர மரத்தின் அடியில்தான். இப் பொழுது அதற்கு ஆபத்து வந்து விட்டது!

அது தன் நீண்ட கிளைகளை அசைத்த போது, ஏதோ சோகக் கதையைக் கூறுவது போல் தோன்றியது வேந்தனுக்கு. துக்கம் பொங்கியது.

"அத்தை, இந்த மரத்தைக் காப்பாற்ற வழியே இல்லையா?" என்று குரல் கலங்கக் கேட்டான் வேந்தன்.

"உங்க மாமா பிடிவாதம்தான் தெரியுமே..."

வாசலில் யாரோ அழைத்தார்கள். கதிர் சென்று பார்த்து வந்தான்.

"சாமியார் மடத்து கிளிஜோசியக் காரர். அப்பா வரச் சொல்லியிருந்தாராம். வந்திருக்கார். என்ன சொல்லி அனுப்ப?"

"நாளைக்குக் காலையில் வரச் சொல்லி அனுப்பு" என்று அத்தை கூறவும் கதிர் நகர்ந்தான்.

"என்ன அத்தை இது! மாமா கிளி ஜோசியம் கேட்கிறாரா!"

"நீ அஞ்சு வருஷமா இங்கே வரலே இல்லை...அதான் இப்படிக் கேட்கிறே. உங்க மாமா, கிளி ஜோசியம் பாக்காம எந்தக் காரியத்தையும் பண்ண மாட்டார். அவ்வளவு பைத்தியம்."

இந்தப் பூவரசு மரத்தை வெட்ட கிளிஜோசியம் கேட்டாரா?"

'கேட்டாரோ என்னவோ தெரியலே! ஏண்டா இதெல்லாம் கேட்கறே?"

"இரு அத்தை. நான் அந்தக் கிளி ஜோசியக் காரரை உடனே பார்க்கணும். அவர் மனசு வைச்சா இந்த மரத்தைக் காப்பாத்த முடியும். இருங்க வந்து சொல்றேன்" என்று ஓடினான் வேந்தன்.

அடுத்த நாள் காலை. கிளி ஜோசியக் காரர் கிளிக் கூண்டோடு வந்து விட்டார்.

"வாங்க ஜோசியரே. ஊர்ல இருந்து என் தங்கை பையன் வந்திருக்கான். அவனுக்கு மேல் படிப்புப் படிக்கணும். மருத்துவம் தேவலையா இல்லை பொறியியல் தேவலையான்னு நீங்க உங்க கிளிகிட்டக் கேட்டுச் சொல்லுங்க. அதுக்குத்தான் உங்களை வரவழைச்சேன்" என்றார் மாமா.

"இதென்ன மாமா அசட்டுத் தனம்!" என்று முரண்டு பிடித்தான் வேந்தன்.

"இதை நூத்துக்கு நூறு நம்பலாம் வேந்தா. இதைக் கேட்காமல் நான் எதையும் பண்ணுவதில்லை."

"அப்ப, மூன்றாம் கட்டுப் பூவரச மரத்தை வெட்ட இதைக் கேட்டீங்களா?"

"இல்லே" என்று தயங்கினார் மாமா.

"இதுல ஏதாவது சொன்னால் அதன் படி நடக்கணும். இல்லா விட்டால் அதையே அவமானப் படுத்துவது போல் ஆகும். எனக்கோ மரத்தை வெட்டி அங்கே புதுக் கிணற்றைத் தோண்டியாகணும். ஒரு வேலை இது "மரத்தை வெட்டாதேன்னு" சொல்லிட்டா, நான் மீறி எதையும் பண்ண முடியாதே?" என்று குழறினார் மாமா.


"இத பாருங்க மாமா, நிஜமாகவே உங்களுக்கு இதுல நம்பிக்கை இருந்தால் மரத்தை வெட்ட இதனிடம் ஜோசியம் கேளுங்க. நானும் கேட்டுக்கறேன். நான் கேட்கமாட்டேன், ஆனால் நீங்க எல்லாம் கேட்கணும்னு நீங்க என்னை மட்டும் வறுபுறுத்துவது நியாயம் இல்லே" என்றான் வேந்தன் உறுதியாக. வேந்தனின் மறுப்பு நல்ல பயனைக் கொடுத்தது. வாசல் தாழ்வாரத்தில் ஜோசியக் கடையைப் பரப்பினார் கிளி ஜோசியக்காரர். "வேழ முகக் கடவுளே; வந்து அருகில் நிற்கவே" என்று காப்புப் பாடலைப் பாடி ஆரம்பித்தார் ஜோசியக்காரர்.

முதலில், மாமா கேட்டுக் கொண்ட படி, வேந்தனுக்குப் பார்த்தார்கள். மருத்துவம் படித்தால் முன்னுக்கு வந்து புகழ் பெற்று வாழ்வான் என்று ஆசிவழங்கியது கிளி. அடுத்து மாமா முறை.

"அரச மரத்தை வெட்டினால்
அடியோடு குல நாசம்
மறந்தும் இதைச் செய்யாதே
மன்னிப்பே இல்லையப்பா" என்று கிளி கொடுத்த சீட்டைப் பார்த்துப் பாடினார் ஜோசியக் காரர்.

இரவு எட்டுமணி. சாமியார் மடம். கிளி ஜோசியருக்கு முன்னால் வேந்தனும், கதிரும் நின்று கொண்டிருந்தனர்.

"இப்படிப்பட்ட ஒரு வயதான மரத்தை வெட்டாமல் காக்க என் ஜோசியம் பயன்பட்டதை எண்ணி எனக்கு மகிழ்ச்சி பெருமை எல்லாம் இருக்கு தம்பி. அந்த மரத்தில் எத்தனையோ தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நூற்றுக் கணக்கான பறவைகள் நிராதரவாகப் போவதைத் தடுக்க என் ஜோசியத்தால் முடிந்திருக்கிறதே. இது பெரிய சாதனை தானே? இதையெல்லாம் எண்ணி நான் மனதிற்குள் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்குக் காசு தராதே; கூலி கொடுத்து கேவலப்படுத்தி விடாதே" என்று கூறி விடை கொடுத்த ஜோசியரை இருவரும் வியப்புடன் நோக்கினர்.



"என்ன இருக்கு?"

"இட்லி இருக்கு சட்னி இல்லை, சாப்பாடு இருக்கு குழம்பு இல்லை. பூரி இருக்கு மசால் இல்லை, புரோட்டா இருக்கு குருமா இல்லை."

"ஏன்? பேசாம கடையை மூடிவிட்டுப் போக வேண்டியதுதானே?"

"பூட்டு இருக்கு, சாவி இல்லை."

-கே.ரோசலின்

உயர்ந்த உள்ளம்

விநாயக சதுர்த்தி பூஜை முடிந்து, பிள்ளையார் பொம்மைகளைக் கடலில் கரைக்கும் விழா. பம்பாய் கடற்கரையில் நல்ல கூட்டம். போலீசார் வந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது யாரோ ஒருவர், பிள்ளையார் நீரில் அமிழ்த்தப்படும் காட்சியை மற்றவர்கள் காண முடியாத அளவுக்கு, உயரமாக நின்று மறைத்துக் கொண்டிருந்தார்.

அதைக் கண்ட ஒரு போலீஸ்காரர், "யாரையா அது...? இறங்கு கீழே... கல்லின் மேல் ஏறி நின்று மற்றவர்களுக்கு ஏன் மறைக்கிறாய்...?" என்று கூச்சலிட்டார்.

உடனே அந்த நபர் மிகுந்த பணிவுடன், "நான் தரையில் தான் ஐயா நிற்கிறேன். நீங்களே வந்து பாருங்கள்..." என்றார்.

போலீஸ்காரர் அவர் கூறியதை நம்பவில்லை. அவர் அருகில் போய் காலோடு தலை பார்த்து விட்டு, "வெரி... வெரி.. ஸாரி... என்னை மன்னித்து விடுங்கள்..." என்று கூறிவிட்டு அங்கிருந்து போய் விட்டார்.

ஆம் அந்த நபர் தரையில்தான் நின்று கொண்டிருந்தார். ஆனால், மற்றவர்களுக்கு மறைக்கும் அளவுக்கு அவர் நல்ல உயரம். அதாவது அவரது உயரம் 7 அடி, 3 அங்குலம்!

அந்த உயர்ந்த மனிதரின் பெயர் ஷரத் குல்கர்ணி!

ஷரத்தின் வாழ்வில் மேலே கூறப்பட்டது போன்ற சுவையான சம்பவங்கள் நிறைய உண்டு. அவருடைய உடல் மட்டும் உயரமாக வளரவில்லை. அவருடைய உயரம் காரணமாக அவருடைய அன்றாடப் பிரச்னைகளும் வளர்ந்தன.

கடை கடையாக ஏறி இறங்கினாலும், அவருடைய அளவுக்கு ஏற்ற பாண்ட்-சட்டை கிடைக்காது. ஆடையைக் கூடத் துணி வாங்கிக் கொடுத்துத் தைத்துக் கொண்டு விடலாம். ஆனால், கால் அளவுக்குச் செருப்புக்கு எங்கே போவது?

எந்தக் கடையிலும் அவருக்குத் தேவையான அளவு காலணி இல்லை! கடைசியில், செருப்புத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையே அணுகிக் கேட்டுப் பார்த்தார்.

அவர்களிடமும் இல்லை. ஆனால் அவர்கள், "வேண்டுமானால் முன்பணம் கட்டி, அளவு கொடுத்து விட்டுச் செல்லுங்கள்... செய்து தருகிறோம்..." என்றனர்.

"அப்படியா...? சரி... எத்தனை ரூபாய் ஆகும்...?"

"ஆயிரத்துக்கு மேல்தான் ஆகும் தம்பி... பணம் தயார் செய்து கொண்டு வா... செய்து தருகிறோம்..." என்றார் செருப்புக் கம்பெனி மானேஜர்.

ஷரத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'ஏ...அப்பா! காலணிக்கு ஆயிரக்கணக்கிலா.! அத்தனை பணத்துக்கு எங்கே போவது...?'


ஷரத் மனம் ஒடிந்து போனார்.

ஆனால் கஷ்டகாலத்திலும் ஒரு நல்ல

ஜானகி மணாளன்

காலம் போல், அவருக்கு ஒரு நினைவு வந்தது. அவர் மாமா ஒருவர் வெளி நாட்டில் இருந்தார். ஷரத் அவருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டார். தன்னுடைய கால்களின் அளவை வரைந்து அனுப்பி னார்.

ஒரே மாதம்தான். அழகான செருப்பு ஜோடி வந்து விட்டது. இப்போதும்



அவருக்கு ஆறு மாதத்துக்கு ஒரு ஜோடி வீதம் வெளிநாட்டிலிருந்து செருப்பு வந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், ஷரத்தின் பெற்றோர் அவருக்கு ஏற்ற விதத்தில் ஒரு பெண் ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க விரும்பினர். பல இடங்களில் பெண் பார்த்தனர். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. ஷரத்தின் உயரத்துக்குப் பொருத் தமான பெண் எங்கே கிடைப் பாள்? பெற்றோர் மனம் தளர்ந்து போய் விட்ட னர். பெண் தேடும் முயற்சியையே கைவிட்டு விட்டனர்.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந் தது. இன்னாருக்கு இன்னார் என்பது இறைவன் போட்டு வைத்த முடிச்சு... இல்லையா? அப்படியே நடந்தது.

ஒரு சமயம், தனது நண்பன் ஒரு வனின் திருமணத்துக்காக, ஷரத் பம்பாய் போயிருந்தார். கல்யாணம் எல்லாம் முடிந்து, ஷரத் ஊருக்குக் கிளம்பத் தயாரானார்.

அப்போது ஒரு கிழவி அவர் முன் வந்து நின்றாள். அதன் பிறகு தான் அவருக்கே நினைவு வந்தது. காலை முதற்கொண்டே, அவர் எங்கு சென்றாலும், அந்தக் கிழவி அவரையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். எல்லாரும் தன் உயரத்தை அதிசயமாகப் பார்ப்பது போல்தான், கிழவியும் தன்னைப் பார்க்கிறாள் என்று அவர் நினைத்திருந்தார்.

ஆனால், அப்படியல்ல என் பது பின்னால்தான் அவருக்குப் புரிந்தது.

"என்ன பாட்டி வேண்டும்...?" என்றார் ஷரத்.

"உங்களுக்குத் திருமணம் ஆகி விட்டதா தம்பி...?" என்று விசாரித் தாள் பாட்டி.

அந்தப் பாட்டி ஏன் இதைக் கேட்கிறார் என்பது ஷரத்துக்குப் புரியவில்லை. இருப்பினும், "இன் னும் இல்லை பாட்டி. அதற்குத் தான் பெண் பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள்... எல்லாம் தட்டிப் போய்க் கொண்டே இருக்கிறது..." என்றார்.

"ஏன் தட்டிப் போகிறது? உன் உயரம் தான் காரணமா?" என்றாள் பாட்டி விடாமல்.

"ஆம் பாட்டி. என் உயரத்துக்கு ஏற்றவள் கிடைக்கவில்லை..."

பாட்டியிடம் உடனே ஒரு மகிழ்ச்சி, பொக்கை வாய் நிறைய மகிழ்ச்சி பொங் கக் கேட்டாள் : "என் தம்பிக்கு ஒரு மகள் இருக்கிறாள். நல்ல உயரம். அவளுக் கும் இப்படித்தான் திருமணம் தட்டிப் போகிறது. அவளுடைய உயரத்துக்கேற்ற

மாப்பிள்ளை கிடைக்கவில்லை. அவளை நீ மணம் செய்து கொள்கிறாயா?"

"அப்படியா? அவள் உயரம் என்ன?" என்று கேட்டார் ஷரத்.

"ஆறடி மூன்று அங்குலம்..." என்றாள் பாட்டி.

உடனே ஷரத்திடம் மகிழ்ச்சி. அந்தக் கணமே சம்மதித்து விட்டார்.

அதன் பிறகு முறையாக ஜாதகம் பார்த்தார்கள். சரியாக இருந்தது. மணமகள் பெயர் ஸம்ஜ்யோத். ஒரு நல்ல முகூர்த்தத்தில் இருவரும் கணவன் - மனைவி ஆனார்கள்.

ஷரத் இப்போது பூனேயில் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

ஷரத் போன்ற 'உலக உயரமானவர்களின்' பட்டியலில் முதலிடம் பெற்றவர் யார் தெரியுமா? - பாகிஸ்தானைச் சேர்ந்த முகம்மது அல்ஹ்கான் என்பவர்தான். அவர் உயரம் 8 அடி 3 அங்குலம்.

சிலர் இப்படி அளவுக்கு அதிகமாக வளர்வதற்கு என்ன காரணம்? கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் இதை ஆய்வு செய்து, 8 அடிக்கு மேல் உயரமானவர்களில் 7 பேருக்கு அவர்களுடைய நாளமில்லாச் சுரப்பியில் கட்டி ஏற்பட்டிருந்ததைக் கூறுகிறது. அந்தக் கட்டியை நீக்கிவிட்டு, மருந்துகள் மூலம் சிகிச்சையளித்து வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி விட முடியும் என் மருத்துவர்கள் கூறுகிறார்கள். சில உயரமானவர்கள் அக் கட்டியின் காரணமாகவே இறந்தும் போயிருக்கிறார்கள்.

1950ல் ஜெர்மனியில் உயரமானவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதற்கு 'த ட்டால் பீபிள்ஸ் க்ளப்' என்று பெயர். அப்போது அதில் 2000 பேருக்கு மேல் உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர். அதில் உறுப்பினராவதற்கு உயர வரம்பு ஆண்களுக்கு 1.90 மீட்டருக்கு மேல். பெண்களுக்கு 1.80 மீட்டருக்கு மேல். இச் சங்கத்தின் வேலை, உறுப்பினர்களிடையே உயரம் பற்றி எழும் கவலைகளைப் போக்கித் தன்னம்பிக்கையை வளர்த்து, அவர்களைத் தற்சார்புடையவர்களாகச் செய்வது!

வெல்வோம்!

ஒன்றுக்கு இரண்டாக மொழியைக் கற்போம்
ஓயாமல் அதை நன்றாய்ப் படித்துக் கற்போம்
சென்றேநாம் பன்னாட்டுக் கலைகள் எல்லாம்
சேர்த்தேநாம் கொண்டிங்கு குவித்தே நிற்போம்.

அன்றேநம் பாரதியும் அழகாய்ச் சொன்ன
அந்தச்சொல் மாறாமல் காத்தே நிற்போம்
என்றென்றும் மகிழ்வாய்நாம் இருந்தே வாழ
எளிதாக அச்செயலை ஏற்றுச் சிறப்போம்

எண்ணென்றும் எழுத்தென்றும் இரண்டே கண்கள்
என்றிங்கே சொன்னவரை ஏனோ மறந்தோம்
கண்ணிரண்டு உண்டென்றால் கல்வி கற்போம்
கருத்தாக நாள்தோறும் கற்றே நிற்போம்.

பின்னொன்றும் சொல்வேன்நான் பெரிதும் கேட்பீர்
பெரியோரை மதித்தேநாம் வாழக் கற்போம்
அன்பென்று ஒன்றிங்கே இருந்த தென்றால்
அதனாலே உலகினையே வெல்லக் காண்போம்


- பால. நடராஜன்



சேர்த்தால் என்ன வரும்? போட்டி!

இங்கே மொத்தம் ஐந்து தொகுதிகளாக சில படங்கள் தரப் பட்டுள்ளன. மூன்று படங்கள் உள்ள வைகளில், இரண்டிலிருந்து ஒவ்வொரு எழுத்தை எடுத்தால் மூன்றாவது கிடைக்கும். இதே போல் நான்கு படங்கள் உள்ள தொகுதிகளில் மூன்றி லிருந்து ஒரு எழுத்தை எடுத்தால் நான்காவது கிடைக்கும். இதைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் உறவினர் அல்லது நண்பர் முகவரியைத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


1



2




3



4



5



சேர்த்தால் என்ன வரும்? - போட்டி

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 30.9.94

ஏ நீல ரிப்பனே!

எஸ். செல்வம்

எட்டாம் வகுப்பு ஆசிரியை வர வில்லை. உடம்பு சரியில்லை என்று தகவல் வந்ததாகக் கூறினார்கள். 'கிளாஸ் லீடர்' ரமாவை வகுப்பைப் பார்த்துக் கொள்ளும்படி தலைமை ஆசிரியை யிடம் இருந்து தகவல் வந்தது.

ஆசிரியர் இருந்து பாடம் நடத்தும் மேடைக்கு ரமா எழுந்து சென்றாள்.

"இன்னும் முக்கால் மணி நேரத்தை ஓட்டியாகணுமே? யாராவது பாட்டுப் பாடுங்களேன். கதை சொல்லத் தெரிந்த வங்க, விடுகதை போடத் தெரிந்தவங்க முன்னே வாங்களேன்!" - ரமா வேண்டு கோள் விடுத்தாள்.

மாணவிகள் யாரும் அசையக் கூட இல்லை.

"ஒருத்தருக்குக் கூடவா பாடவோ, கதை கூறவோ தெரியாது?" என்று வியப் புடன் கேட்ட ரமா, முன் வரிசையில் இரண்டாவதாக அமர்ந்திருந்த புவ னாவைப் பார்த்தாள்.

"கண்ணாடி, உனக்குக் கூடவா ஒரு பாட்டுக் கூடத் தெரியாது?"

புவனா கண்ணாடி அணிந்திருந்த தைத்தான் ரமா அப்படிக் குறிப்பிட்டுக் கேட்டாள்.

உண்மையில் புவனா, பாட எழுவ தாகத்தான் இருந்தாள். ஆனால் "கண் ணாடி" என்ற ரமாவின் அழைப்பு அவளைத் தடுத்து விட்டது.

கிளாஸ் லீடர் ரமா மிகவும் நல்ல வள். முதல் மூன்று ரேங்குகளில் வரக்கூடியவள். எல்லோருக்கும் ஓடி ஓடி உதவுபவள். இருந்தும் அவளிடம் ஒரு கெட்ட குணம். யாரையுமே பெய ரைச் சொல்லி அழைக்க மாட்டாள். குட்டைப் பின்னல், பிள்ளையார் காது, நெட்டைக் கொக்கு என்று அவர்களிடம் இருந்த குறைபாட்டையோ, தோற்றத்தின் குறைகளையோ சுட்டிக்காட்டி அழைப் பாள். அவளைத் தட்டிக் கேட்கும் துணிவு யாருக்கும் இல்லை. காரணம் எல்லோருமே ஏதாவது ஒரு விதத்தில் அவளிடம் உதவி பெற்றவர்களாக இருந் ததுதான். 'இப்படிப் பெயர் சொல்லிக் கூப்பிடாமல் அழைக்கிறோமே, அவர் களுக்கு எப்படி இருக்கும்? அவர்கள் மனம் எப்படிப் புண்படும்' என் பதையெல்லாம் ரமா எண்ணிப் பார்த் ததே இல்லை.

"சரி, கண்ணாடிதான் எழுந்திருக் கலே. நீல ரிப்பன், உனக்கு என்ன ஆச்சு? பாட்டுப் போட்டியில முதல் பரிசு வாங் கினவதானே நீ?" - ரமா தன் வழக்கப்படி பேச்சினால் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்த செல்வியை அழைத் தாள்.

செல்விக்குப் பொறுக்கவில்லை. எழுந்தாள்.

"வகுப்பு லீடர் ஒருகை வளையல் காரி அவர்களே... நான் என்ன பாட்டுப் பாட வேண்டும் என்று கூறுங்கள் ஒருகை வளையல்காரி அவர்களே... சினிமா பாட்டுப் பாடவா ஒருகை வளையல் காரி அவர்களே? இல்லை கர்நாடக இசை



யைப் பாடவா ஒருகை வளையல்காரி அவர்களே? இரண்டும் வேண்டாம், மெல்லிசைப் பாடல் போதும் என்று எண்ணினால் உடனே உத்தரவிடுங்கள் ஒருகை வளையல்காரி அவர்களே. உடனே பாடி மகிழ்விக்கிறேன் ஒரு கை வளையல்காரி அவர்களே" என்று நொடிக்கு நூறு "ஒரு கை வளையல்காரி" போட்டு முடித்தாள் செல்வி.

ரமா இதை எதிர்பார்க்கவே இல்லை. வகுப்பில் நுழையும் போதுதான் அவளுடைய வலது கை வளையல் உடைந்து போயிருந்தது. செல்வி குறிப்பிட்டது அதைத்தான்.

ஒரு நிமிடம் ஓடியது. பயங்கர அமைதி. ரமா இன்னும் திகைப்பில் இருந்து மீளவில்லை. ஆனால், அவள் கண்கள் கலங்கி விட்டதை எல்லோருமே பார்த்தனர்.

"அருமைத் தோழி ரமா, நான் அப்படிப் பேசியதற்காக என்னை மன்னித்து விடு. நீ ஒரு பத்தரை மாற்றுத் தங்கம். உன்னிடம் உள்ள ஒரே குறைபாடு, யாரையும் பெயர் கூறி அழைக்காது, குறைபாட்டையோ அடையாளத்தையோ கூறி அழைப்பதுதான். எத்தனை பேர் மனம் எப்படியெல்லாம் புண்பட்டிருக்கும் என்பதை இப்பொழுது நீ உணர்ந்திருப்பாய். நம் எல்லோருக்கும் ஒரு பெயர் உண்டு. அதைக் குறிப்பிட்டு அழைத்தால், இன்னமும் நட்பு நெருக்கமாகும். என்னை மறுபடி மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

செல்வி உண்மையாகவே வருந்தி மன்னிப்புக் கேட்டாள்.


"இல்லை செல்வி, என் குறையை நீ உணர்த்திய பிறகுதான் உணர்ந்தேன். அதற்காக எனது நன்றி" என்று கூறிய ரமா, "புவனா, நீ எழுந்து வந்து ஒரு பாட்டுப் பாடேன்?" என்று அழைத்த போது வகுப்பே மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

சிரிப்...




"இதை ஒட்டல் முத லாளியோட செருப்புன்னு எப்படிச் சொல்றே?"
"செருப்பு மீது, 'இது கோவிந்தனிடமிருந்து திருடப்பட்டதுன்னு எழுதி இருக்குடா!"

-வி.சி.கிருஷ்ணரத்தினம்.



"திருடறதுக்கு எங்கப்பா விடம் "டிரெயினிங்" எடுத்துக்கி றாயா...! மாசம் 150 ரூபாய் கொடுத்தால் போதும்...!" ....!

- நெற்குப்பை கி.மனோகரன்.



"இந்த வருஷம் நான் நிச்சயம் பாஸ்."
"அவ்வளவு நல்லா பரிட்சை எழுதியிருக்கியா..."
"இல்லே. இந்த ஸ்கூல்ல ஐந்து வருடத்துக்கு மேல ஒரே கிளாசுல வைச்சிருக்கக் கூடாதுன்னு சட்டமாம்!"

- சீர்காழி ஜே.பலராமன்.



"பாலைவனம்னா ஒட்டகம் இருக்கும், தண்ணி இருக்காது' மெட்ராஸ்ல ஏன் ஒட்டகமே இல்லை...?"
"அப்ப

- சீர்காழி வி.ரேவதி.



"சைக்கிள்ல ஏறினா போய் சேருகிற இடம்வரை விடாம மணி அடிச்சிகிட்டே வேகமா போவானே உங்க மகன், இப்போ என்ன பண்றான்?"
"ஃபயர் இன்ஜின் ஓட்டி கிட்டு இருக்கான்."

- ஜூனியர் தேஜ்.


இதையாவது...

பாலு, கண்ணன் வீட்டுப் படியேறி அழைப்பு மணியை அழுத்தினான். கண்ணன் வெளியே வந்தான்.

"வா பாலு. என்ன விஷயம்? இன்னிக்குப் பள்ளிக்கு வரலையா?" - எல்லாக் கேள்விகளையும் கண்ணன், ஒரு கதவை மூடிக் கொண்டுதான் கேட்டான்.

"எனக்கு இன்னிக்குப் பிறந்த நாள் கண்ணா. எனக்கே அம்மா சொன்னப்புறம் தான் தெரிஞ்சது."

"அப்படியா! என்னுடைய வாழ்த்துக்கள் பாலு" - இடது கையால் கதவை மூடியபடி, வலது கையை நீட்டிக் குலுக்கினான் கண்ணன்.



"இந்தா சாக்லேட்" - பாலு சட்டைப் பைக்குள்ளிருந்து எடுத்து நீட்டிய பிளாஸ்டிக் பையில் இருந்து, ஒரே ஓர் சாக்லேட்டை எடுத்துக் கொண்ட கண்ணன், "நன்றி பாலு. ஒரே ஒரு நிமிஷம் இரு. இதோ வரேன்" - நண்பன் பாலுவை வெளியே நிற்க வைத்து விட்டு கதவை மூடிக் கொண்டு உள்ளே சென்றான்.

பாலுவுக்கு எரிச்சலான எரிச்சல். கண்ணன் எப்பொழுதுமே இப்படித்தான். வீட்டுக்கு யார் வந்தாலும் சரி, கதவைத் திறந்து கொண்டு, தான் மட்டும் வெளியே வந்து, வந்தவர்களை வாசற்படியிலேயே நிற்க வைத்துப் பேசி அனுப்பி விடுவான். அவன் வீட்டுக்குள் அப்படி என்னதான் இரகசியம் இருக்கிறது?

கதவைத் திறந்து கொண்டு கண்ணன் வெளியே வந்தான். அவன் கையில் ஒரு கலர் பாக்ஸ்.

"இந்தா பாலு. என்னுடைய எளிமையான பிறந்த நாள் பரிசு."

"இதையாவது வீட்டுக்குள் அழைத்துத் தரக் கூடாதா கண்ணா?"

கண்ணன் கண்கள் கலங்க பாலுவைப் பார்த்தான்.

"பாலு, மூளை வளர்ச்சி குன்றிய ஒரு தங்கை எனக்கு இருக்கிறாள் என்ற உண்மை யாருக்குமே தெரியாது. அவளைப் பார்த்தால் நீங்களெல்லாம் அருவருப்புக் கொள்வீர்களே என்றுதான் நான் யாரையும் உள்ளே அழைப்பதில்லை."

"என்னை மன்னித்துக் கொள் கண்ணா! நான் உன்னைத் தவறாக எண்ணி விட்டேன்."

நல்ல நண்பனின் மனதைப் புண் படுத்திய வேதனையுடன் மன்னிப்புக் கேட்டான் பாலு.

- கே. யுவராஜ்

உலகு சாலை

த. ஜானகி

சென்ற இதழில்...
சந்தீப்பைப் பள்ளியில் இருந்து கடத்திக் கொண்டு போக ஒருவன் முயற்சிக்கிறான். தனது முன்யோசனையால் சந்தீப் அதிலிருந்து தப்புகிறான்.

2. வலையில் சிக்காத பறவை!

"மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளாய்'

வைகறையில் இனிய பூபாள ராகத்தில் அத்தியூர் கிராமத்தின் கோவிலிலிருந்து ஒலிபெருக்கியின் வழியாகக் குளிர்ந்த காற்றோடு கலந்து வந்த திருப்பாவை பாடலைக் கேட்டு சந்தீப் கண் விழித்தான். பார்வை சுவரின் மீது ஓடியது. மங்கிய ஒளியில் பெரிய முள் ஆறையும் சிறிய முள் நான்கிற்கும் ஐந்திற்கும் இடையில் இருப்பதை அந்த எலெக்ட்ரானிக் கடிகாரம் காண்பித்துக் கொண்டிருந்தது.

சந்தீப்புக்கு உறக்கம் கலைந்தாலும் எழுந்திருக்க சோம்பலாக இருந்தது.

கண்களை மூடியபடி படுத்துக் கிடந்தான். கம்பளிப் போர்வை போர்த்திக் கொண்டிருந்ததால் அந்த மார்கழி மாதப் பனிக்குக் கதகதப்பாக இருந்தது.

"சந்தீப்... எழுந்திரு" - ஹாலில் சுவிட்சைப் போடும் ஓசை. சந்தீப் கண் விழித்தான். ட்யூப் விளக்கின் ஒளியில்,

எதிரே குளித்து மஞ்சள் பூசிய முகத்தோடு பளிச்சென்று பாட்டி மீனாட்சி




அம்மாள் காட்சி அளித்தாள்.

"பாட்டி, இந்தக் குளிர்லே நீங்க எப்படித்தான் குளிச்சீங்களோ?"

மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொண்டான் சந்தீப்.

"இன்னிக்கு மார்கழி மாசப் பிறப்புங்கறது உனக்கு மறந்து போச்சா? பகவான் ஸ்ரீ கண்ணனுக்குப் பிடிச்சமான மாசம். கோவில்லே அபிஷேகத்துக்கு பால் தயாரா இருக்கு. என் ராஜா இல்லே. சீக்கிரம் எழுந்திரு. உம்..." அருகில் இருந்த டேபிளின் மீது பாட்டி எவர்சில்வர் கூஜாவை வைத்தாள்.



" 'ஆவி'யைக் குளிர வைக்க என்னசெய்யணும்னு உனக்குத் தெரியுமா?"

"இது கூடவா தெரியாது? உடுக்கை அடிச்சிப் பாட்டுப் பாடணும்!"

- கு. அருணாசலம்

இனிமேலும் தாமதம் செய்தால் பாட்டிக்குப் பிடிக்காது என்பதை அறிந்திருந்த சந்தீப் எழுந்து விட்டான். பின் பக்கம் சென்று பல் விளக்கி விட்டு ஹாலுக்கு வந்தான். பூஜை அறையில் பாட்டி குத்து விளக்கை ஏற்றிக் கொண்டிருந்தாள்.

"பாட்டி. கோவிலுக்கு நேரமாயிடுத்து. நாளையிலேர்ந்து சீக்கிரமா எழுப்பி விடுங்க. குளிச்சிட்டே போறேன். இன்னிக்கு மட்டும் இப்படியே போறேன்."

கூறிவிட்டுப் பால் கூஜாவை எடுத்துக் கொண்டு வாயிலுக்கு வந்தான் சந்தீப். டைகரும் பின்னாடியே வந்தது.

"தாத்தா கூட ஊர்லே இல்லே. நீ வீட்டிலேயே இரு" என்று சந்தீப் அதை அதட்டினான். ஆனால், டைகர் இன்று என்னவோ சந்தீப் சொல்வதைக் கேட்கும் மூடில் இல்லை. சிறிது நேரம் அப்படியே நின்றது. சந்தீப் தெருவில் நடக்க ஆரம்பித்ததும் அவனுக்குத் தெரியாமலேயே சற்றுத் தள்ளிப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.

மார்கழி மாதப் பனியிலும் பெருவாரியான வீடுகளில் பெண்மணிகள் வாசலில் பெரிய பெரிய கோலங்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். "அடேயப்பா! எத்தனைவிதமான கோலங்கள்!" என்று வியந்தபடியே ஊருக்குக் கடைசியாக உள்ள கோவிலை அடைந்தான் சந்தீப்.

கோவிலுக்குச் சற்றுத் தள்ளி இருந்த அந்தப் பெரிய வேப்பமரத்தடிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த அந்த உருவம் புற்றிலிருந்து பாம்பு மெல்ல தலையை நீட்டி எட்டிப் பார்ப்பது போல சந்தீப் கோவிலுக்குள் நுழைவதைக் கவனித்தது.

"நல்ல காலம்! நான் எதிர்பார்த்தபடி பய தனியாகத்தான் வரான். கப்புன்னு ஒரே அமுக்கு அமுக்கி... வாயிலே தயாரா இருக்கிற கைக்குட்டையை அடைச்சு..." கற்பனையில் மிதந்து கொண்டிருந்தாலும் அந்த உருவத்தின் கண்கள் சந்தீப் திரும்பி வருவதை ஆவலுடன் எதிர்நோக்கியபடி இருந்தன.

இதோ சந்தீப் வந்து விட்டானே!

பாலைக் கொடுத்து விட்டு வேகமாக வேப்பமரத்தைத் தாண்டி தேர்முனையைக் கடக்கும் பொழுது -

திடீரென்று ஒரு முரட்டு உருவம் தன் இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தன் வாயில் ஏதோ திணிப்பதற்கு முயல்வதைக் கண்ட சந்தீப் ஒரு வினாடி அதிர்ச்சியில் அதிர்ந்து விட்டான்.

மறு வினாடி... "ஏய்... யாரது?" என்று கத்தியபடி, தன் பலம் அத்தனையையும் திரட்டி, முரட்டுக்கரங்களின் இரும்புப்



பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் போராட ஆரம்பித்தான். அந்தச் சமயத்தில் "லொள்... லொள்..." என்று குரைத்தபடி. டைகர் அந்த உருவத்தின் மீது பாய...

அவ்வளவுதான்! மறு வினாடி... அந்த உருவம் சந்திப்பைப் பிடித்துக் கொண்டிருந்த தன் பிடிப்பை விட்டு விட்டு அவன் மீது மோதியபடி விராலிமலை செல்லும் காந்தி சாலை வழியாக ஓட ஆரம்பித்தது.

அந்த உருவம் மோதிய மோதலில் காலி பால் கூஜா ஒரு பக்கம் உருண்டு விழ, சந்திப்பும் 'தடால்' என்று கீழே விழுந்து விட்டான். டைகர் அந்த உருவத்தைத் துரத்துவதை விட்டு விட்டு சந்திப்பின் அருகில் வந்து மெல்ல அவனை நாக்கால் தடவிக் கொடுத்தது. சந்திப் தன்னைச் சமாளித்தபடி எழுந்து கொண்டான். உற்றுக் கவனித்த பொழுது அந்த உருவம் இருளோடு இருளாக மறைந்து விட்டிருந்தது. அந்தப் பனியிலும் சந்திப்பின் உடம்பு வியர்த்திருந்தது. உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். மனித நடமாட்டம் தெரியவில்லை. கோவில் மணியோசையிலும், ஒலிபெருக்கியின் பாட்டிலும் இவன் கூச்சல் போட்டதோ, டைகர் குரைத்ததோ யார் காதிலும் விழவில்லை. விடிந்தும் விடியாத காலைப் பொழுதில், ஊரின் எல்லைக்கருகில் அமைந்திருந்த கோவில் பக்கத்தில் மக்கள் நடமாட்டம் இல்லாததால் இங்கு நடைபெற்றதை யாரும் பார்த்திருக்க முடியாது என்பதை சந்திப் உணர்ந்து கொண்டான். சாமி கும்பிடச் சென்ற ஏழெட்டுப் பேரும் கோவிலிலிருந்து இன்னும் வெளியே வரவில்லை.

"டைகர்! என்னை மன்னிச்சுடு. நீ மட்டும் சமயத்திலே இங்கே வந்து எனக்கு உதவி செய்யலே, என் நிலைமை என்ன ஆயிருக்கும்னு சொல்ல முடியாது. போய் கூஜாவைத் தூக்கிக்கிட்டு வா!" என்றான் சந்திப்.

சில வினாடிகளில் கூஜாவை வாயில் கவ்வியபடி டைகர் கொண்டு வந்தது. கூஜாவோடும் டைகரோடும் வீடு திரும்பிக் கொண்டிருந்த சந்திப்பின் உள்ளத்தில் பல கேள்விகள் எழும்பின.

"என்னைத் தாக்க வந்தவன் யார்? எதற்காக என்னைக் கடத்திச் செல்ல வேண்டும்? எங்கிருந்து வந்திருக்கிறான்? அன்றைக்கு, பள்ளிக்கூடத்துக்கே வந்த அந்தக் கறுப்புக் கண்ணாடி ஆள் யார்? ஒருவேளை அன்றைக்கு வந்தவனேதான் இன்றைக்கும் வந்திருப்பானோ? அல்லது இருவருமே வெவ்வேறு ஆட்களாக இருப்பார்களோ?

வினாக்களுக்கு அவனுக்கு பதில் கிடைக்கவில்லை. "பாட்டியிடம் சொல்லாதே... அவன் பயப்படுவான்" என்று தாத்தா சொன்னதால் பள்ளியில் நடந்ததைப் பாட்டியிடம் சந்திப் சொல்லவில்லை.


இப்பொழுது நடைபெற்றதையாவது பாட்டியிடம் சொல்லலாமா? வேண்டாம். ரொம்பவும் பயந்து போவான். பள்ளிக் கூடத்துக்கே போக வேண்டாம் என்று சொல்லி விடுவான். நல்ல காலம் இன்னிக்கு ஸ்கூல் லீவு. தாத்தா மத்தியானம் ஊரிலிருந்து வந்து விடுவார். அவர் வந்ததும் முதலில் இதைத் தெரிவிக்க வேண்டும்.

"எழுதுவதற்கு உதவற ஊர் எது சொல்லு?"

"தெரியலையே!"

"மை"சூர்தான்!"

- ஆர். பத்மநாபன், பட்டீஸ்வரம்.





கை, உடம்பு எல்லாம் வலிக்கிறது. இன்றைக்கு தாத்தா வரும் வரை வீட்டி லேயே இருக்கலாம். வெந்நீரிலே குளிச்சு ஓய்வெடுக்கணும். நாளையிலிருந்து கோவிலுக்குப் பால் கொடுக்கத் தாத் தாவே போகட்டும்.

பலவாறு சிந்தித்தபடி சந்தீப் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

உறவினர் வீட்டில் நடைபெற்ற திரும ணத்தில் கலந்து கொள்ள மதுரை சென்றி ருந்த தாத்தா மேஜர் தேவநாதன் அன்று மதியம் அத்தியூர் திரும்பினார். சாப்பாடு ஆன பிறகு பாட்டிக்குத் தெரியாமல் காலையில் நடைபெற்ற செய்திகளை சந்தீப் தெரிவித்த போது மேஜர் ஒரு வினாடி அதிர்ந்து விட்டார்.

"என் பேரனைக் கடத்த முயற்சிப் பவன் யார்?"

அவர் யோசித்துப் பார்த்தார். பல பல யுகங்கள் ஓடி மறைந்த உணர்வு! சரியான விடை அவருக்குத் தோன்றவில்லை.

பேரனை ஜாக்கிரதையாக இருக்கும் படி எச்சரித்தார்.

"மார்கழி மாதக் குளிர்லே அவனை எழுப்பாதே. நானே இந்த மாசம் முடிய கோவிலுக்குப் பாலைக் கொண்டு கொடுக்கிறேன்" என்று பாட்டியிடம் கூறி விட்டார்.

அப்படியும் மனது கேட்காமல் பத்து நாட்கள் வரை தன் பைக்கிலேயே சந்தீப் பைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று வந்தார்.

"தாத்தா! நீங்க பயப்படாதீங்க. நாங்க நாலு பேரும் சந்தீப்பை கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்" என்று முருகன் கூறியும் தாத்தா தன் பண்ணையாள் கப்புவை காந்தி சாலை முடிய துணை யாக அனுப்பி வைத்தார்.

பதினைந்து நாட்கள் நிம்மதியாகக் கழிந்தன.

அதன் பிறகு...!

(தொடரும்)

நாய்க் குட்டி



எங்கள் வீட்டு நாய்க் குட்டி
என்றன் இனிய நாய்க்குட்டி
தங்கம் போன்ற நிறத்திலே
திகழு கின்ற நாய்க் குட்டி

வாலை ஆட்டும் நாய்க்குட்டி
வந்து சுற்றும் நாய்க்குட்டி
பாலை அருந்தும் நாய்க்குட்டி
பார்க்க அழகு நாய்க்குட்டி.

நன்றி உள்ள நாய்க்குட்டி
நாங்கள் விரும்பும் நாய்க்குட்டி
என்னைத் தொட்ட மனிதரை
எதிர்த்துப் பார்க்கும் நாய்க்குட்டி

காவல் காக்கும் நாய்க்குட்டி
கடிக்க முயலா நாய்க்குட்டி
ஆவல் கொண்டு அதனைநான்
அன்பாய்க் காப்பேன் என்றுமே!


-தமிழ்க் குமரனார்.


இன்பம்

வானவில்லின் ஏழு வண்ணம்
வந்து காண இன்பமே!
வானம்பாடி கானம் பாடும்
வாரும் கேட்க இன்பமே!

கொட்டுகின்ற பனியின் குளுமை
கொள்ளை கொள்ளை இன்பமே!
கொட்டுகின்ற அருவி நீரில்
குளிக்கும் போதில் இன்பமே!

- த. கணேஷ்.





சிட்டுக் குருவி

சிட்டுக் குருவி, சிட்டுக் குருவி
கிட்ட வந்திடு!
அழகுக் கண்ணை உருட்டி உருட்டி
என்னைப் பார்த்திடு!
உன் குரலைக் கேட்க ஆசை
உடனே பாடிடு!
அழகு மேனி அலுங்கிடாம
ஆடிக் காட்டிடு!

- எஸ். தனபால்.

புத்தகம்



நல்ல நல்ல புத்தகம் - இது
நன்மை தரும் புத்தகம்

கதைகள் உள்ள புத்தகம் - இது
கருத்து நிறைந்த புத்தகம்

சிரிப்புக் காட்டும் புத்தகம் - இது
சிந்தனை யூட்டும் புத்தகம்

கல்வி தரும் புத்தகம் - நல்ல
கருத்துக் குவியல் புத்தகம்

அழகு வண்ணப் புத்தகம் - இது
அருமையான புத்தகம்

கோவில் போலப் புத்தகம் - இது
கொள்ளை அழகுப் புத்தகம்

- ந. சிவசுப்ரமணியம்.



வெள்ளம்

பெரு மழையும் வந்தது
பெரிய மரங்கள சாய்ந்தன.
கரைகள் எல்லாம் உடைந்தன
காட்டு வெள்ளம் புகுந்தது!

குடிசை எல்லாம் இடிந்தன
கம்ப மெல்லாம் சாய்ந்தன
வீடு வாசல் கால்நடை
வெள்ளம் கொண்டு போனது!

குடிக்க நீரும் கிடைத்தது.
குடிசை வாழ்வும் இருண்டது.
வாடிவருத்தும் வெள்ளத்தை
வாழ்த்த மனம் இல்லையே!

-ஜெ.ரமேஷ், உறையூர்







கடிகாரம்

என்ன தொல்லை கொடுக்குது
எங்கள் வீட்டுக் கடிகாரம்!
என்னை விரைவில் எழுப்புது
ஏனோ தூக்கம் கெடுக்குது!.

உலகே உறங்கும் நேரத்தில்
உறக்கம் இதற்கு வரவில்லை!
காலைப் பொழுது புலருமுன்
காத்தி ருந்து எழுப்புது!

டிக்டிக் ஓசை போடுது
டில்லி நகரில் பிறந்தது
தூக்கம் இன்றி என்னையே
துன்பப் பட வந்தது!

-ஆர்.பத்மநாபன்,
பட்டீஸ்வரம்

அக்கா


எந்தன் அருமை அக்கா
அன்பின் உருவம் அக்கா.
எந்த நாளும் கடுமை
எதிலும் காட்டா அக்கா!

பகட்டை வெறுக்கும் அக்கா
பண்பின் சிகரம் அக்கா.
இனிக்கக் கதைகள் கூறி
இன்பம் தந்திடும் அக்கா!

சொந்தப் பிள்ளை போல
சிறுவர் எம்மை எண்ணும்
எந்தன் அக்கா போல
எவரே உண்டு உலகில்?

-சி.பூ.இனியவன்,
மேலவாசல்






கழுதையார்

காள் காள் கழுதையார்
காது நீண்ட கழுதையார்
வெள்ளி மூக்குக் கழுதையார்
வெகுண்டு ஓடும் கழுதையார்!

பொறுமை மிகக் கழுதையார்
புரண்டு மகிழும் கழுதையார்
விரும்பும் போது சகுனத்தை
வர வழைக்கும் கழுதையார்!

காலின் மிக்க பலத்தினால்
காடு மலை ஏறுவார்!
காகிதத்தை விரும்பியே
கடித்துச் சுவைத்துப் பாடுவார்!

- எம். ஷேக் உசேன்,
வடகரை



சர்க்கஸ்

சர்க்கஸ் பார்க்க வாருங்க
சாகசம் எல்லாம் காணுங்க
பார்க்கப் பார்க்கப் பரவசம்
புலி சிங்கம் காணுங்க.

கோமாளி செய்யும் வேடிக்கை
குலுங்க சிரிக்க வைத்திடும்.
நம்மை வியக்கச் செய்திடும்
நங்கையர் செய்யும் ஆட்டங்கள்.


குதிரை யானை ஒட்டகம்
குரங்கு நாயும் கரடியும்
கிளிகள் செய்யும் வேடிக்கை
கொள்ளை மகிழ்ச்சி தந்திடும்.

அந்த ரத்தில் ஆடிடும்
அழகு ஊஞ்சல் ஆட்டங்கள்
எந்த வயது ரசிகரும்
என்றும் நினைக்க வைத்திடும்

- என். இராஜலட்சுமி








வரமருள்வாய்

பச்சைக் கிளியே பழம் தருவாய்.
பாடும் குயிலே குரல் தருவாய்.
மல்லிகை மலரே மணம் தருவாய்
மங்கா நிலவே ஒளி தருவாய்.

ஆடும் மயிலே கலை தருவாய்
அழகுப் பசுவே பால் தருவாய்
கடலே கடலே வளம் தருவாய்
கருணை உள்ளம் எனக் களிப்பாய்.


நன்றியை மறவா மனத்தினையே
நாயே நாளும் எனக்களிப்பாய்
தென்றல் போல மகிழ்வளிக்க
தெய்வமே எனக்கு வரமருள்வாய்!


- இ.எஸ். லலிதா.





அர்ச்சுனனுக்குத் தேரோட்டிய அம்பை!
கதை: குமரன்
படம்:
அர்ச்சுனனுக்குத் தேரோட்டியது கண்ணன் மட்டுமல்ல. ஒரு பெண்ணும் கூட! ஆச்சர்யமாய் இருக்கிறதா? கதை இதுதான்: பீஷ்மருடைய மாற்றாந்தாய் மகன் விசித்திரவீரியன்...
தம்பி! விவாக வயது அடைந்து விட்டாய்!
உங்களுக்கு முன்னால் என் திருமணமா? வெட்கமாயிருக்கிறது அண்ணா! ராஜ்யத்தை எனக்காக விட்டுக் கொடுத்ததுடன் இல்வாழ்க்கையையே தியாகம் செய்து அப்பாவிடம் சத்தியம் செய்தீர்கள்...
பழைய கதை எதற்கு! காசிராஜன் புதல்விகளுக்குச் சுயம்வரமாம். மூவரும் பேரழகிகள். அறிவிலும் சிறந்தவர்கள்.
அப்போ போட்டி பலமாயிருக்குமே...!
எனக்கு மாலை யிடவில்லை என்றால் அவமானம்!
சரி! உன் பொருட்டு நானே செல்கிறேன்!
காசிராஜன் அமைத்த சுயம்வர மண்டபம்...
அடேயப்பா! இத்தனை ராஜாக்களா!
அடடே! பீஷ்மர் வருகிறாரே!


சுயம்வரத்தில் பீஷ்மருக்கு என்ன வேலை?
அவர் செய்த பிரதிக்ஞை என்ன ஆவது?
சும்மா வேடிக்கை பார்க்க வந்திருப்பார்!
ஆனால் பீஷ்மர்...
நானும் பெயர் கொடுக்கிறேன்!
ஆ!
இரு ராஜகுமாரிகள் சுயம்வர மண்டபத்துள் நுழைந்தனர்...
மூன்று பெண்களில் இருவர்தானே வருகின்றனர்...?
இருவரும் கிழவரான பீஷ்மனைப் பார்த்துவிட்டு மேலே சென்றனர்...
பீஷ்மருக்கு மகா கோபம்...
ராஜாக்களே! ராஜகுமாரர்களே! வாருங்கள் யுத்தத்துக்கு! யாரானாலும் சரி, என்னை வென்ற பிறகுதான் காசிராஜன் புதல்விகளை மணம் புரிய முடியும்!



பீஷ்மரிடம் மோத பயந்து பலர் ஓடிப்போனார்கள். சிலர்...
இதோ வாளை உருவினேன்!
என் அம்புகளுக்கு பதில் சொல்
மல் யுத்தத்துக்கும் தயார்!
பீஷ்மர் எல்லோரையும் வென்று
உயிர்ப் பிச்சை அளித்தேன். ஓடிப் போங்கள்!
மூன்று அரசகுமாரிகளையும் தேரில் ஏற்றிக் கொண்டு...
கிழவனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமே என்று பயப்படாதீர்கள்! என் தம்பி விசித்திர வீரியனுக்காகத்தான் உங்களைக் கொண்டு போகிறேன்!
ஹஸ்தினாபுரம் செல்லும் பாதையில்...
அட! யாரோ பின் துரத்தி வருகிறார்களே!
சௌபல தேசத்து அரசன் சால்வன்தான் வருகிறார்!
பீஷ்மர் தேரை நிறுத்தி...
சால்வனிடமிருந்து தப்பி ஓட எனக்கு அவசியமில்லை! நின்று போர் புரிவேன்!



இருவருக்குமிடையே பலத்த போர்...
சால்வன் தோற்றான்...
வில் முறிந்தது! அம்புகள் தீர்ந்துவிட்டன!
நிராயுதபாணியாக நிற்கும் அவரைக் கொல்லாதீர்கள்!
இந்தக் கன்னிகைகளின் வேண்டுகோளுக்கு இணங்கி உன்னைக் கொல்லாமல் விடுகிறேன். போ!
அவமானம்! அவமானம்!
ராஜகுமாரிகளுடன் ஹஸ்தினாபுரம் அடைந்தார் பீஷ்மர்...
விசித்திரவீரியா! உனக்காகக் காசிராஜனின் கண்மணிகளைக் கொண்டு வந்திருக்கிறேன் பார்! இனி கல்யாண ஏற்பாடுகளைக் கவனிக்கலாம்!
விவாக மண்டபத்தில், மூன்று சகோதரிகளில் மூத்தவளான அம்பை...
பீஷ்மரே! உங்களை தர்மம் அறிந்தவர் என்று நினைத்தேன் ஹூம்!
என்ன தவறு கண்டாய் என்னிடம்?



நான் சால்வனை என் மனதில் புருஷனாக ஏற்றுவிட்டேன். நீர் பலாத்காரமாக என்னைக் கொண்டு வந்தீர்! இதுதான் சாஸ்திரமா? தர்மமா?
ஓ! அதனால்தான் சால்வன் என்னைப் பின் துரத்தி வந்தானா? இதை ஏன் என்னிடம் நீ முன்பே சொல்லவில்லை?
ஐயா! சுயம்வர மண்டபத்துள் நான் வரவேயில்லையே? என் தங்கைகள் இருவரும் தானே நுழைந்தார்கள்? அப்போதே நீர் ஊகித்திருக்கலாமே?
ஆஹா! சகோதர பாசத்தால் என் அறிவு மங்கிவிட்டது போலும்! உன்னைத் தக்க துணையுடன் சால்வனிடம் அனுப்பி வைக்கிறேன்.
மற்ற இரு சகோதரிகளும் விசித்திர வீரியனை மணந்தனர்...
தீர்க்காயுசுடன் இருப்பாய்!
தீர்க்க சுமங்கலி பவ!


பீஷ்மர் வாக்குறுதியை நிறைவேற்ற, அம்பை சால்வனிடம் வந்தாள்...
பீஷ்மர் தமது தவறு உணர்ந்து என்னை அனுப்பி யிருக்கிறார். என்னை மணந்து கொள்.
ஆனால் சால்வன்...
பீஷ்மர் என்னை வென்று உன்னை அடைந்தார். நீ அவருடைய உடமைதான் திரும்பிப் போ!
என்னை நிராகரிக்காதீர்கள்! மனத்தால் உங்களை வரித்தேன்; நீங்களும் என்னை விரும்பி னீர்கள்!
அது பழைய கதை! இப்போ உன்னை ஏற்றால் அது பீஷ்மர் போட்ட பிச்சையை ஏற்றதாகும்!
அம்பை மனமுடைந்து பீஷ்மரிடம் திரும்பி...
உங்களால் எனக்கு நேர்ந்த கதியைப் பாருங்கள்! என்னை இனி யார்தான் மணப்பார்கள்?
பீஷ்மர் மனம் வருந்தி... விசித்திர வீரியனிடம்...
தம்பி! சால்வன் இவளை நிராகரித்து விட்டான்! அதனால் இனி நீ இவளை மணப்பதில் தடையில்லை.



ஆனால் விசித்திரவீரியன்...
முடியாது! வேறு ஒரு புருஷன் மேல் பிரியம் வைத்த ஒருத்தியை நான் எப்படி மணப்பேன்? அது பண்பாடு அல்ல.
அம்பை வேதனையுடன்...
காசிராஜன் புதல்வி கன்னியாகவே காலமெல்லாம் வாழ்ந்தாள் என்ற பேச்சு வேண்டாம். நீங்கள்தான் இதற்கெல்லாம் காரணம். நீங்களே என்னை மணந்து கொள்ளுங்கள்!
பீஷ்மர் திடுக்கிட்டு...
அதெப்படி சாத்தியம்? நான் செய்த சபதம் என்ன ஆவது? நீ மறுபடி சால்வனிடமே போய் கெஞ்சிக் கேட்டுக் கொள்!
சால்வனிடமும் பீஷ்மரிடமும் மாறி மாறி ஆறு ஆண்டுகள் அலைந்தாள் அம்பை. வழி பிறக்காததால் பல அரசர்களிடம் சென்று...
எனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்குங்கள்!
பீஷ்மரை எதிர்க்க எந்த ராஜாவுக்கும் துணிவில்லை...
பெண்ணே! எமனைக் கூட எதிர்க்கலாம். பீஷ்மரிடம் வாலாட்ட முடியாது. போய்வா!


அம்பை கானகம் சென்று...
முருகா! முருகா! முருகா!...
மயில் வாகனன் தோன்றி...
உன் தவத்தை மெச்சினேன்! தாபத்தை உணர்ந்தேன். இந்த வாடாத தாமரை மாலையை அளிக்கிறேன். இதை அணிபவன் பீஷ்மருக்குச் சத்ரு ஆவான்!
அம்பை மீண்டும் பல மன்னர்களிடம் சென்று...
ஆறுமுகன் கொடுத்த இந்த வாடாத மாலையை அணிந்து பயப்படாமல் பீஷ்மரை எதிர்க்கலாம்!
பல ஏமாற்றங்களுக்குப் பிறகு.. கடைசியாக துருபத தேசத்தில்...
என்னால் முடியாது! நீ தவம் இருந்ததற்கும் இதை முருகன் தந்தான் என்பதற்கும் என்ன அத்தாட்சி?
அம்பை துருபதன் அரண்மனை வாசலில் மாலையைத் தொங்கவிட்டாள்...
இது வாடாமலிருக்கும் என்பதே நான் பொய் சொல்லவில்லை என்பதற்குச் சாட்சி!


அம்பை மனமுடைந்து மறுபடி கானகம் செல்ல, துருபதன் அச்சத்துடன்...
அதை யாரும் தொடாதீர்கள்! தெய்வாம்சம் பொருந்தியது. இரவு பகல் காவலரை நியமியுங்கள்!
காட்டில் அம்பை பல ரிஷிகளிடம் சென்று...
எனக்கு நேர்ந்துள்ள இந்த அவமானத்துக்கு என்ன தீர்வு?
பரசுராமரிடம் போ!
பரசுராமர்...
சால்வனிடம் பேசி உன்னை மணந்து கொள்ளச் சொல்கிறேன். என் சொல்லைத் தட்டமாட்டான்.
ஆனால் அம்பையின் மனம் இதற்குள் இறுகி இருந்தது. கோபம் மிக...
கல்யாணமும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். பீஷ்மனைப் பழி வாங்க வேண்டும். பழிக்குப் பழி!
அரசர்களேயானாலும் அவர்களின் அநீதிகளை எதிர்க்கும் துணிவு பரசுராமருக்கு இருந்தது...
பீஷ்மரே! தர்மத்தை மீறிய எந்த க்ஷத்திரியனும் எனக்குப் பதில் கூற வேண்டும்!


யுத்தம் பல நாட்கள் நடந்தது. தேவர்களும் அதிசயித்தனர்...
ஆகா! சமமான வீரர்கள்!
வாள் போர்! வில் போர்! கதாயுதம் எதிலும் முடிவு தெரியவில்லையே!
கடைசியாக மல்யுத்தம்...
பீஷ்மரே! என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்.
அம்பையிடம்...
அம்மணி! என்னால் முடிந்தமட்டில் போராடினேன்! நீ பீஷ்மனைச் சரண் அடைய வேண்டியதுதான்.
அம்பையின் கோபம் மேலும் கொந்தளிக்க...
சரணடைவதா? சீ! வாழ்க்கையைக் கெடுத்த பீஷ்மனைக் கொன்றே தீருவேன்!
அம்பை மறுபடி கடுந்தவமிருக்க, பரமசிவன் தோன்றி.
நீ இன்னொரு பிறப்பு அடைவாய்! உன்னால் பீஷ்மர் மரணமடைவார்!


உடனே மறுபிறப்பு அடைய விரும்பிய அம்பை...
அக்னியே! என்னை ஏற்றுக் கொள்!
துருபதராஜன் மகளாக மறுபிறவி எடுத்த அம்பை நன்கு வளர்ந்தாள். ஒரு நாள் காவலர் அசந்திருந்த போது...
அழகான தாமரை மாலை! என்ன மணம்!
எடுத்து அணிந்து கொண்டு விட, அப்போது துருபதன் வந்து...
ஐயோ! பீஷ்மரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டுபோம்! இனி குலநாசம் தான்!
பயந்து போய், பழைய கதை கூறி, மகளை வனத்துக்கு அனுப்பிவிட்டான் துருபதன்...
சே! பெண்ணாய்ப் பிறந்தாலே கஷ்டங்கள்தான். நான் தவமிருந்து ஆணாக மாறுவேன்!
கடுந்தவமிருந்து ஆணாக மாறி, சிகண்டி என்ற பெயர் பூண்டாள் அம்பை...
தேரோட்டுவதில் சிகண்டிக்கு நிகர் அவனே தான்!


பாரதப் போர் நடந்த சமயம்...
என்னைத் தேர்ப் பாகனாக ஏற்றுக் கொள்!
அர்ஜுனா! பீஷ்மனைக் கொல்ல வேறு உபாயமில்லை. என் இடத்தில் சிகண்டி அமரட்டும்!
சிகண்டியை முன் இருத்தி அர்ஜுனன் போர் புரிய, பீஷ்மர்...
பெண் ஜென்மமாகிய சிகண்டியை எதிர்க்க மாட்டேன். அம்பு போட மாட்டேன்!
சிகண்டியும் அம்புகள் எய்தான்.
இந்த அம்புகள் அம்பையின் கோபம் தணிக்கும். ஆனால் என் உயிரை வாங்கும் ஆற்றல் இவற்றுக்கு இல்லை.
பீஷ்மர் சும்மா இருந்த நேரத்தில் அவருடைய உயிர் நிலைகளைக் குறிபார்த்து அர்ஜுனன் அம்பு எய்து அவரைச் சாய்த்தான்...
என் உயிர் முடிப்பவை அர்ஜுனனின் அம்புகளே!
அம்பையின் கோபம் தணிந்தது...
கண்ணா! பீஷ்மரின் மரணம் எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. ஆனால் இறுதி குருக்ஷேத்திரப் போரில் தர்மத்தின் வெற்றிக்கு சிறிதளவும் உதவியதில் ஓர் ஆறுதல்.

ஸ்வீப் த டட்டில்!

இந்த ஆண்டு பிப்ரவரி கோகுலத்தில் 'ஸ்விஃப்ட் டட்டில்' என்று வெளியான கட்டுரையை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இந்த வால் நட்சத்திரம் 2116 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் நாளன்று பூமியோடு மோதும் பேரபாயம் உள்ளதைக் கட்டுரை விளக்கியது. அப்படி மோதாமல் இருக்க ஒரு முயற்சியைத் தம் கற்பனையால் வடித்திருக்கும் இந்தக் கதையை இப்பொழுது படியுங்கள்.

ஸ்வீப்ட் டட்டில் பூமியை அழிப்பதற்காக வந்து கொண்டிருந்தது. விஞ்ஞானி ஸ்டாலின் மணியைப் பார்த்தார். "இன்னும் ஐந்து நிமிடம் கழித்து கம்ப்யூட்டரை அணுகலாம்" என்று மனதுக்குள் எண்ணி ஆழ்ந்த பெருமூச்சொன்றை விட்டார். ஸ்வீஃப்ட் டட்டிலை எப்படி சமாளிக்கப் போகிறோமோ என்ற எண்ணம் பெரும் கவலையைத் தந்து நெஞ்சை அழுத்தியது.

"ஹலோ, புரொபசர் ஸ்டாலின்" - கம்ப்யூட்டர் கூப்பிட்டது. புரொபசர் அவசர அவசரமாகச் சென்று இருக்கையில் அமர்ந்தார்.

"விண்வெளியில் இருந்து கலாவும், கிரிதரனும் தொடர்பு கொள்கிறார்கள்."


கம்ப்யூட்டர் அறிவிக்க, "யெஸ்..." என்றார் புரொபசர் ஆவலாக.

"சார், கனெக்ஷன் எல்லாம் சரியா கொடுத்திருக்கோம்... சர்க்யூட்டை அங்கேயிருந்து செக் பண்ணுங்க" என்றனர் இருவரும்.

அவர்கள் கையிலிருந்த கேமரா படமெடுக்க, அதை சாடிலைட் மூலம் கம்ப்யூட்டர் பெற்றுக் கொண்டு திரையில் படத்தைத் தெளிவாகக் காண்பித் தது. கம்ப்யூட்டரின் துணையுடன் அதை ஆராய்ந்தார் ஸ்டாலின்.

விண்வெளியில் மிகப் பெரிய இரும்புப் பாளங்களைச் சுமந்தபடி பூமிக்கு இணையாகச் சுற்றிக் கொண்டிருந்தது அந்த செயற்கைக் கோள். அதிலிருந்து கூர் கம்பிகள் நீண்டிருந்தன. அவை அதிக அளவு மின்சாரத்தை ஈர்க்கக் காத்திருந்தன.

இடி தாங்கியில் கூர் முனை இருக்குமே அது போன்ற கம்பிகள் அவை. அதிக மின்சாரத்தை ஈர்க்கவும் உமிழவும் கூடிய சக்தி கூர் முனைகளுக்கு உண்டு. அதனால்தான் செயற்கைக் கோளில் அவை பொருத்தப் பட்டிருந்தன.



"எல்லாம் சரியாக இருக்கிறது. கீழே வாருங்கள். அடுத்த பணி காத்திருக்கிறது" என்று திருப்தியுடன் சொன்னார் ஸ்டாலின்.

கலாவும், கிரிதரனும் அடுத்த சில மணி நேரங்களில் அவர் முன் நின்றனர். "உங்களுக்கு ஓய்வில்லாமல் வேலை

கொடுக்கிறேன் இல்லையா?" என்றார் ஸ்டாலின் இலேசான வருத்தத்துடன்.

"பூமியையும் இதன் மக்களையும் காப்பாற்ற நீங்கள் செய்யும் முயற்சிகளை விடவா நாங்கள் செய்து விட்டோம்? இந்த அளவுக்காவது உங்கள் பணிக்கு உதவ முடிந்துள்ளதை நினைத்துப் பெருமிதமடைகிறோம்" - ஒரே குரலில் இருவரும் கூறினர்.

"சரி, சென்று வாருங்கள்..." என்று விடை கொடுத்தார் ஸ்டாலின்.


விமானத்தில் பறந்து, கூர் முனை கம்பிகளோடு கூடிய நவீன, எடை குறைந்த கருவிகளை மேகக் கூட்டங் களுக்கு அருகில் பலூன்களோடு இணைத்து மிதக்க விட்டார்கள் இருவரும்.

உலக விஞ்ஞானிகளுக்கெல்லாம் தனது திட்டத்தை அனுப்பியிருந்தார் ஸ்டாலின். பலரும் அதை ஏற்று அவர் சொன்னபடி முன்னேற்பாடுகளைச் செய்திருந்தனர்.

ஸ்விஃப்ட் டட்டிலுக்கு எதிரான நடவடிக்கைகள் "ஸ்வீப் த டட்டில்" (டட்டிலைப் பெருக்கித் தள்ளுவோம்) என்று பட்டப் பெயர் தந்து முடுக்கி விடப்பட்டன. அமெரிக்காவின் ராக் கெட்டுகள் விண்ணில் சீறிச் சென்று ஸ்விஃப்ட் டட்டிலைப் பல துண்டுக ளாகச் சிதற அடிக்கக் காத்திருந்தன. இன்னும் பற்பல திட்டங்கள் செயல் வடிவம் பெற இருபத்தி நான்கு மணி நேரம் மட்டுமே காத்திருக்க வேண்டும்.

"இதில் வெற்றி பெற்றால்தான் பூமியும் நாமும் பிழைக்க முடியும்" என்ற அச்சம் எங்கும் பரவியிருந்தது. ஒரு வேளை உலகமே அழிந்து விட்டால் என்ன செய்வது? அதற்காக பல சிறுவர் சிறுமியரும், ஆண்கள் பெண்களும் நிலவில் குடியேற்றப் பட்டிருந்தனர். பூமியில் இருந்த அத்தனை அறிவியல் கண்டு பிடிப்புகளும் அங்கே குவிக்கப் பட்டிருந்தன. விஞ்ஞானிகள் சிலரும் அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களும் பயந்து கொண்டுதான் இருந்தனர். தங்கள் தாய் கிரகம் பூமி என்னாகப் போகிறதோ என்ற கவலை அவர்களுக்கும் இருக்காதா என்ன?

ஸ்விஃப்ட் டட்டில் குறிப்பிட்ட எல்லைக்கருகில் வந்தவேளையில் அமெரிக்க ராக்கெட்டுகள் அதை மோதித் தகர்த்தன. வானில் பயங்கரப் போர் நடப்பது போல் கனல் பறந்தது. திடீரென்று ஒரு விபரீதம் ஏற்பட்டது. பாதி ஸ்விஃப்ட் டட்டில் மட்டும்தான் தாக்குதலில் தூளாகிப் போனது! அந்த மாபெரும் கோளத்தை முழுக்க சிதற அடிக்க ராக்கெட்டுகளால் முடிய



வில்லை. மீதிக் கோளம் பூமியைத் தாக்க வேகமாகத் நெருங்கத் தொடங்கியது!

ஸ்டாலின் விடாமல் இறைவனையே பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். "இறைவா, மனித குலத்தைக் காப்பாற்று. இதைப் போன்ற கொடிய சோதனை வேண்டாம்..." உள்ளம் உருகி கண்ணீர் வடிய, அதைத் துடைத்தபடி டட்டிலை கவனிக்கத் தொடங்கினார்.

அந்த இக்கட்டான நேரத்தில் திடீரென்று ஓர் அதிசயம் நிழந்தது. பயங்கரமான காற்று வீசியது. மேகங்கள் ஒன்றோடொன்று மோதின. கோடிக் கணக்கான மின்னல் கீற்றுகள் வெளிப் பட்டன.

ஒரு மின்னல் வெளியிடும் மின்சாரம் இந்தியாவிற்கு ஆறுமாதம் தேவைப்படும் மின்சாரத்தைத் தரும் சக்தியுடையது. கூர்முனைகள் அந்தச் சக்தி வாய்ந்த மின் சாரத்தை ஈர்த்து வெளியிட்டன. அதற் காகவே அவை மேகங்களுக்கு அருகில் அமைக்கப் பட்டிருந்தன.

வானில் மிதந்து கொண்டிருந்த செயற்கைக் கோள்களில் இருந்த கூர் முனைகள் கீழிருந்து பீய்ச்சப் பட்ட மின்சாரத்தை ஈர்ந்துக் கொண்டன. மின்சாரம் இரும்புப் பாளங்களுக்கு அனுப்பப்பட்டு அவை மின் காந்தமாக மாற்றப்பட்டன.

ஸ்டாலினும் உலக விஞ்ஞானிகளும் மின் காந்தத்தின் துருவமும் டட்டிலின் துருவமும் ஒன்றாக அமையும் படி செய்தனர். ஒத்த துருவங்கள் சந்தித்தால் என்ன ஆகுமென்று உங்களுக்கு தெரி யுமே அவை ஒன்றை ஒன்று விலக்கிக் கொண்டன. பூமியை நோக்கி இறங்க முயன்ற டட்டில், வெளியில் குப்பை யைப் போலப் பெருக்கித் தள்ளப் பட்டது! அது பின்னோக்கி நகர்ந்து வேறொரு வட்டப் பாதையில் சுற்றத் தொடங்கியது.


எல்லா நாட்டு மக்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். எல்லாரும் இந்திய விஞ்ஞானி ஸ்டாலினையும் அவருடன் பணியாற்றிய கலா, விண்வெளி வீரர் கிரிதரனையும் பாராட்டினர்.

"எங்கள் பணி இதில் மிகக் குறைவே. மேகங்களை சரியான நேரத்தில் மோதும் படி செய்து பலகோடி வோல்ட் மின் சாரத்தை தந்தது இறைவனின் கருணையே. அப்படி நேராது இருந்தால் நாம் இப்படிப் பேசிக் கொண்டிருக்க மாட்டோம். அதனால் நன்றிக்கு உரிய வன் இறைவனே" என்றனர் இருவரும். பூமி, சந்திரனில் இருந்த எல்லோரும் கடவுளுக்கு நன்றி கூறினார்கள். "ஸ்வீப் த டட்டில்" வெற்றிகரமாக நிறைவேறி யது.

— எம்.என். கிருஷ்ணா



போகாதே



கொக்கு ஒன்று காட்டில் வாழ்ந்து வந்தது. யார் வம்புக்கும் போகாது. தினமும் அங்குள்ள குளக்கரைக்குச் சென்று அமர்ந்திருக்கும். அந்தக் கொக்கு வெள்ளை வெளேரென்று பார்க்க மிக அழகாக இருக்கும். அதனால் அந்தக் கொக்கைப் பார்க்கக் குளத்தில் வசித்த மீன்கள் எல்லாம் வரும். அவற்றில் சிறிய மீன்களை விட்டு விட்டுப் பெரிய மீன்களைக் கொக்கு பிடித்துக் கொள்ளும். அருகில் உள்ள ஆலமரத்துக் கிளைக்குச் சென்று உட்கார்ந்து மீனைக் கொத்திச் சுவைத்துத் தின்னும்.

இப்படியாகக் கொக்கு காலத்தைக் கழித்து வந்தது. ஒருநாள் ஆலமரத்தில் வாழ்ந்து வந்த ஓர் அணில் கொக்குக்கு நண்பனாக ஆனது. கொக்கு மிகவும் அன்புடன் பழகியது. கொக்குக்கு அணில் சுவையான பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து கொடுக்கும். கொக்கு அவைகளைச் சுவைத்துத் தின்னும். அணில் தாவித் தாவிக் குட்டிக்கரணமெல்லாம் போட்டுக் காட்டும். அவை களைப் பார்த்து கொக்கு சிரித்து மகிழும். இரண்டும் துணைபிரியாத நண்பர்களாயின.

ஒருநாள் கொக்கு வழக்கம் போல் குளக்கரைக்கு மீன் பிடிக்கச் சென்றது. குளக்கரைக்கு ஒரு வேடன் வந்தான். வேடனைக் கண்டதும் கொக்கு பயந்து ஆலமரத்துக்குத் திரும்பி விட்டது. கொக்கு பதற்றத்துடன் வருவதைக் கண்ட அணில், "என்ன நண்பா? ஏன் பயத்துடன் வருகிறாய்?" என்று கேட்டது.

"வேடன் ஒருவன் குளக்கரைக்கு வந்து இருந்தான். என்னையும் பார்த்து விட்டான். எங்கே என்னைப் பிடித்து விடப் போகிறானோ என்று பயந்து வந்து விட்டேன்" என்றது கொக்கு.

அணில் மிகவும் வருத்தமடைந்தது. "சரி நண்பா, இனி நீ அந்தக் குளக்கரைக்குப் போகாதே. என்னுடனேயே இருந்து விடு. நான் சுவையான பழங்களைப் பறித்து வந்து தருகிறேன்" என்றது.

ஆனால், அந்தக் கொக்கோ தன் நண்பன் பேச்சைக் கேட்காமல் மறுநாள் குளக்கரைக்குச் சென்றது. எப்படியும் அந்தக் கொக்கு மறுபடியும் வரும் என்று வேடன் வலை விரித்து வைத்திருந்தான். அதே போல் கொக்

கும் தனியாகச் சென்று வலையில் அகப்பட்டுக் கொண்டது. வலையில் இருந்து தப்பிச் செல்ல இறகுகளை அடித்துக் கொண்டது.

வலை மேலும் இறுகி கொக்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. கொக்கால் தப்ப முடியவில்லை. வேடன் எப்போது வந்து நம்மை பிடித்துக் கொண்டு போகப் போகிறானோ என்று மனக்கலக்கம் அடைந்தது.

ஆலமரத்தில் அணில் தனது நண்பனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. வெகு நேரம் ஆகியும் கொக்கு வராமல் போகவே நண்பனுக்கு ஏதோ ஆபத்து என்று உணர்ந்து கொண்டது அணில். உடனே கொக்கைத் தேடிக் குளக்கரைக்கு வந்தது. கொக்கு வலையில் மாட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தது.

அணிலைக் கண்டதும் கொக்கு "நண்பா, நீ எவ்வளவு சொல்லியும் உன் பேச்சைக் கேட்காமல் வந்து வலையில் மாட்டிக் கொண்டேன்" என்று அழுதது. அப்போது கொக்கைப் பிடிக்க வேடன் வேகமாக வந்து கொண்டிருந்தான். அணில் சிறிதும் தாமதிக்காது வலையை மிக வேகமாகக் கடித்தது. வேடன் அருகில் வருவதற்கும் வலையில் இருந்து கொக்கு விடுபட்டுப் பறப்பதற்கும் சரியாக இருந்தது.

கொக்கு தப்பித்தோம் என்று பறந்து விட்டது. அணிலும் தன் நண்பனைக் காப்பாற்றி விட்டோம் என்ற சந்தோஷத் தில் துள்ளிக் குதித்தது.

கொக்கைப் பிடிக்கலாம் என்று வேகமாக வந்த வேடன் பெரிதும் ஏமாற்றமடைந்தான். அணில் மேல் கோபம் கொண்டு தன் கையில் வைத்திருந்த கம்பை அணிலின் மேல் வீசி எறிந்தான். அணில் தாவிக் குதித்து ஓடி விட்டது. சிக்கிக் கொண்ட கொக்கு தப்பி விட்டதோடு வலையும் பாழாகி விட்டதே என்று வேடன் கவலையுடன் சென்றான்.

கொக்கும், அணிலும் ஒன்றை ஒன்றை கட்டித் தழுவிக் கொண்டன. தன் உயிரைக் காப்பாற்றிய அணிலுக்கு கொக்கு நன்றி கூறியது. "ஆபத்தில் உதவுவது தான் ஒரு நண்பனின் கடமை அதைத்தான் நான் செய்தேன்" என்றது அணில்.

- த. அ. முஸ்தபா



நண்பா!

விந்திய மலைக் குகையொன்றில் முனிவர் ஒருவர் இருந்தார். மக்கள் அவரிடம் சென்று தங்களுக்கு வேண்டியதைப் பெற்றனர்.

கபிலன் மகாச் சோம்பேறி, எந்த வேலையையும் உரிய நேரத்தில் செய்ய மாட்டான். ஒழுங்காகவும் செய்ய மாட்டான். ஏனோ தானோவென்று செய்வான். அதனாலேயே அவனுக்கு யாரும் வேலை கொடுப்பதில்லை. கபிலன் அரைப் பட்டினி குறைப் பட்டினி கிடந்து காலத்தை ஓட்டினான்.

முனிவரின் சக்தியைக் கேள்விப்பட்ட கபிலன் அவரைத் தேடி வந்து வணங்கினான். "என்ன வேண்டும் மகனே?" என்று கேட்டார் முனிவர்.

"நான் ஏழை. வேலை கிடைக்கவில்லை. கஷ்டப்படுகிறேன். உங்க சக்தியால் என்னைப் பெரிய பணக்காரனாக்கி விட வேண்டும்!- முனிவரை வேண்டினான் கபிலன்.

அவனது அறியாமையை நினைத்து முனிவர் சிரித்தார்.

'ஏன்சாமி சிரிக்கிறீங்க?'

'உனக்குப் பணக்காரனாகும் யோகம் இருக்கிறதா என்று ஞானதிருஷ்டியில் பார்த்தேன். அதான் சிரிக்கிறேன். உனக்குப் பணக்காரனாகும் யோகம் இருக்கு."

"எப்ப என்னைப் பணக்காரனா ஆக்குவீங்க?"

'அவசரப்படாதே கபிலா. அதற்கு ஐந்து ஆண்டுகள் ஆகும். நான் ஒரு மாய உண்டியலைத் தருகிறேன். அதில் நீ தினமும் காசு போட வேண்டும்."

'என் காசைப் போட உங்க உண்டியல் எதுக்கு?'

'அங்கே தான் இரகசியமே இருக்கு. அந்த உண்டியலில் நீ ஒரு காசு போட்டால், அது பத்துக்காசாகப் பெருகி விடும். ஒன்றுக்குப் பத்து. 'உண்டியலை ஐந்து வருடங்களுக்குள் உடைத்தால் நீ போட்ட பணமும் காணாமல் போய் விடும்.

'அப்பாடியப்பா, பொல்லாப் பய உண்டியலா இருக்கும்போல!

கபிலன் மிக்க மகிழ்ச்சியுடன்



தாகுமா?



உண்டியலை வீட்டிற்கு எடுத்து வந்தான். தனி அறையில் வைத்துப் பூட்டினான். சோம்பேறியான அவன் அன்றிலிருந்து சுறுசுறுப்பானான். தினமும் தவறாமல் வேலைக்குச் சென்றான். பொறுப்பாக வேலையைச் செய்து நல்ல பெயர் வாங்கினான். அதோடு மிகவும் சிக்கனமாக இருந்து அனாவசியச் செலவுகளைத் தவிர்த்தான். தினமும் மிச்சப்படும் பணத்தை உண்டியலில் போட்டான்.

ஐந்தாண்டுகள் ஓடின. ஒரு நாள் உண்டியலை உடைத்து எண்ணினான். அவன் போட்ட பணம் மட்டுமே இருந்தது. முனிவர் சொன்னபடி ஒன்று பத்தாகப் பெருகவில்லை.

கபிலனுக்கு முனிவர் மேல் கோபம் வந்தது. முனிவர் தன்னை ஏமாற்றி விட்டதாக நினைத்தான். முனிவரைத் தேடிச் சென்றான்.

“நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள். பணம் பெருகவே இல்லை. நான் போட்ட பணம் மட்டுமே இருக்கிறது சாமி” என்றான் கோபமாக.

‘உழைக்காது வரும் பணம் நெல்லில் பதர் போன்றது. அது பறந்து விடும். உண்மையாக எண்ணிப் பார். இந்த உண்டியலில் இத்தனை பணம் சேரும் என்பதை நீ எதிர்பார்த்தாயா? இதை வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு தொழிலை சொந்தமாகச் தொடங்கு. அது, இந்தப் பணத்தைப் போல் பத்து மடங்காகப் பெருகி வளரும். உழைக்காது யாராலும் பணக்காரனாக முடியாது,” என்று கபிலன் மனதில் பதியுமாறு சொன்னார் முனிவர்.

முனிவர் சொன்னதில் நியாயம் இருப்பதைக் கபிலன் உணர்ந்தான். மறுநாளே ஒரு சொந்தத் தொழிலைத் தொடங்கினான். தொழிலின் மேம்பாட்டிற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டான். விரைவில் மிகப் பெரிய செல்வந்தனானான்.

- அருள் நம்பி

புசுபுசு கரடி!

கே. குப்புராஜ்

தேவைப்படும் பொருள்கள் :

1. உல்லன் நூல் - 8 பண்டில்கள். ஒவ்வொரு பண்டிலும் சுமார் 50 மீட்டர். (கறுப்பு 3 பண்டில், கிரீம் கலர் 5 பண்டில்)

2. பழைய பைண்டு நோட்டுகளின் அட்டைகள்

3. புத்தகம் தைக்கும் கனத்த ஊசி ஒன்று. சின்ன சாதாரண ஊசி ஒன்று.


4. சாதாரண கறுப்பு நூல்கண்டு.


5. சிறிய வெள்ளைப் பொத்தான்கள் இரண்டு. அவைகளின் நடுவில் பொருந்தும்படி சிறிய கறுப்பு பொத்தான்கள் இரண்டு. (பொம்மையின் கண்களாக வைக்க)

6. பழைய சேட்டின் ரிப்பன், அல்லது வண்ண ரிப்பன்கள் அல்லது கலர்த்துணி. (பொம்மையின் வாய்க்குக் கீழே கழுத்தில் அலங்கார புருச்சாக வைக்க.)

8. பிளேடு, பெவிகால்




கண்
கால்களுக்கான
சக்கரம்
மூக்குக்கான
சக்கரம்
காதுகளுக்கான
சக்கரம்
தலைப்பகுதிக்கான
சக்கரம்



• உடம்பு வயிற்றுப் பகுதிக்கான சக்கரம். நூல் பாதி சுற்றிய நிலை.

செய்யும் முறை :

தலைப்பில் உள்ள அழகிய 'புசுபுசு' வண்ண உல்லன் கரடி பொம்மையைப் பாருங்கள். இது பதினோறு பகுதிகளாகச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டது.

1. வயிற்றுடன் கூடிய உடம்பு (Base)
2. வயிற்றிற்கு மேல் தலைப்பகுதி
3. இரண்டு காதுப் பகுதிகள்
4. மூக்கு
5. இரண்டு முன்கால்கள்
6. வால் பகுதி (பின்னல்)
7. இரு கண்கள்
8. கழுத்துக்குக் கீழே அலங்கார புருச்.

கடைசி இரண்டைத் தவிர மீதி எல்லாப் பகுதிகளுமே உல்லன் நூலால் செய்யப்பட வேண்டியவை. இவை களைச் செய்ய இங்கே காட்டப்பட்டுள்ள சக்க்ரங்கள் உதவும்.

இங்குள்ள சக்கரங்களை அப்படியே ஜெராக்ஸ் செய்து கொள்ளவும். முதலில் பெரிய சக்கரத்தை அட்டையில் ஒட்டி வெட்டி வைத்துக் கொள்ளவும். நடுவில் ஓட்டை, படத்தில் காட்டிய அளவுக்கே இருக்க வேண்டும். ஊசியில் கறுப்பு உல்லன் நூலைக் கோர்த்துக் கொண்டு, சக்கரத்திற்கு நடுவே உள்ள ஓட்டையில் இருந்து விளிம்பைச் சுற்றி மறுபக்கம் கொண்டு வந்து ஓட்டைக்குள் நுழைத்து உல்லன் நூலைச் சுற்றவும். நடு ஓட்டை மறைய வேண்டும். இது எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தமாக, கனமாக, அடர்த்தியாக அமைகிறதோ அவ்வளவுக்கு அழ

காக பொம்மை 'புசுபுசு'வாக அமையும். இதில் சுமார் 1½ பண்டில் நூலைச் சுற்றி விடுங்கள். மீதி உள்ள கடைசி நூலை, அறுத்து விடாது வெளியே ஊசியுடன் வைத்துக் கொள்ளவும். இனி பிளேடின் உதவியால் கையில் பட்டுக் கொள்ளாது சுற்றிய நூலை சக்கரத்தின் விளிம்பில் வெட்டி விடவும். இதற்கு இன்னொருவர் உதவி தேவை. இப்பொழுது சக்கரத்தைச் சுற்றியுள்ள நூல், மேல் பகுதியில் கத்தரிக்கப்பட்டு நடுவில் சிறிதாக உடுக்கை வடிவில் இருக்கும். இனி ஊசியோடு வைத்திருக்கும் மிச்ச நூலை, சக்கரத்தின் நடுத் துளையைச் சுற்றி இறுக்கிக் கட்டவும். இதற்கும் இன்னொருவர் உதவி தேவை. கட்டி விட்டு அவிழாது முடிச்சுப் போட்டு அப்படியே வைத்துக் கொள்ளவும்.

இனி, இந்த அட்டைச் சக்கரம் தேவை இல்லை. இதை இன்னொருவர் உதவியுடன் மெதுவாகக் கத்தரித்து எடுத்து விடவும். ஊசியுடன் மிச்சம் இருக்கும் நூலால், பிரியாது இன்னும் இறுகக் கட்டி இறுக்கி விடவும். இந்த உல்லன் சுற்றலை கைகளில் வைத்துக் கொண்டு, மெதுவாக, அதிக அழுத்தம் தராது, பந்து வடிவம் வரும் வரை சுற்றவும். இதே போல் எட்டுச் சக்கரங்களையும் செய்து வைத்துக் கொள்க.

• பெரிய சக்கரம் வயிற்றுப் பகுதிக்கானது

• அதை விடச் சிறியது சிறிய சக்கரம். இது கழுத்துப் (தலைப்) பகுதிக்கானது. இவை இரண்டும் கறுப்பு நூலால் ஆனவை.

• மீதி எட்டும் கிரீம் கலர்.

உடல் பகுதிக்கு மேல் தலைப் பகுதியை வைத்துக் கெட்டியான நூலால் இணைக்க வேண்டும். நூலின் நுனியில் பெரிய கொண்டை முடிச்சைப் போட்டுக் கொண்டு, தலைப் பகுதியில் இருந்து ஊசியை உள்ளே இறக்கி, உடம்புப் பகுதியில் இறங்கும்படி அழுத்தி, நூலைக் கீழ்ப்பக்கம் இழுத்து உள்ளுக்குள் முடிச்சுப் போட்டு, பிரிந்து வராது இருக்க, கொண்டை முடிச்சுப் போட்டு, பிறகு நூலை வெட்டி விடவும்.


இதே போல் இரண்டு கால் பகுதிகள், (பக்கவாட்டில் கீழே), இரண்டு காதுப் பகுதிகள் (பக்கவாட்டில் மேலே), முகத்தின் மத்தியில் வாய்ப் பகுதி, பின்னால் வால் பகுதி ஆகியவற்றை (உல்லன் நூல் உருண்டைகளை) இணைத்து நன்கு இறுக்கவும். வாய்ப் பகுதியின் மேல் பக்கத்தில், சரியான இடத்தில் வெள்ளை, நடுவே கறுப்பு பொத்தான் வைத்துத் தைத்து கண்கள் வைக்கவும். வெள்ளைப் பகுதிக்கு மேல் சிறிது ஆரஞ்சு கலர் காகிதத்தை வைத்தால் உண்மையான கரடி போலவே தோன்றும். இதற்கு ஸ்டிக்கர் பொட்டுக்களையும் வைக்கலாம். சந்தேகம் எழும் போது, தலைப்பில் உள்ள படத்தைப் பார்க்கவும். கடைகளில் eyelet என்று பிளாஸ்டிக் கண்கள் கிடைக்கும். அதையும் வாங்கி கண்களாகப் பயன்படுத்தலாம்.


சாட்டின் ரிப்பனைக் கொண்டு ஒரு அழகான Gift Knot முடிச்சுப் போட்டு, நடுவில் ஸ்டிக்கர் பொட்டு வைத்து, பெவிகாலைக் கொண்டு வாய்க்குக் கீழே, ஒட்டி விடவும். கழுத்தில் இருப்பது போலவே இருக்கும்.

இந்தக் கரடி பொம்மை சரியாக அமைந்தால் கீழே நன்றாக உட்காரும். அப்படி உட்காரவில்லை என்றால் உருண்டைப் பகுதிகளை சரியாக இணைத்து இறுக்கவில்லை என்பது பொருள். மறுபடி உருட்டி எடுத்து மறுபடி இறுக்கி, பாகங்களை இணைக்கவும். ஒரே தடவையில் இது சரியாக அமைவது கடினம். பழகப் பழக சரியாக வந்து விடும்.

"அம்மா, நான் ரொம்பவும் 'வீக்'கா இருக்கேனாம், அதனால டாக்டர் என்னை 'மீன் எண்ணெய்' சாப்பிடச் சொன்னார்..."

- சீர்காழி ஜே. பலராமன்





✱ ஆர். ரவிகுமார், குண்டூர்.

? 'சைனஸ் கோளாறு' என்றால் என்ன டாக்டர்? இது எவ்வாறு உண்டாகிறது? இதனால் உடலில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்? எப்படித் தவிர்ப்பது?

! நம் முகத்திலும் நெற்றியிலும் உள்ள எலும்புகளுக்கு இடையில் 'காற்றறைகள்' (SINUSES) உள்ளன. இவற்றுள் காற்று மட்டுமே இருக்க வேண்டும். சில சமயங்களில் இந்தக் காற்றறைகளில் நோய்த் தொற்று ஏற்பட்டு அவற்றுள் நீர் சேர்ந்து கொள்ளும். இந்த நிலைமையை 'சைனஸ் அழற்சி' (SINUSITIS) என்கிறோம். பொதுவாக, கடுமையான சளி, ஜலதோஷம், மூக்கடைப்பு, செவி அழற்சி நோய்கள், சொத்தைப் பற்கள் போன்றவற்றால் சைனஸ் அழற்சி உண்டாகிறது. இந்த நோயின் பிராதன அறிகுறி தலைவலி. அத்துடன் முகத்திலும், நெற்றியிலும், கண்களின் பின்பக்கத்திலும் கடுமை யான வலி உண்டாகும். மூக்கிலிருந்து அடிக்கடி சளி ஒழுகும். குனிந்து வேலை செய்யும் போது தலைவலி அதிகமாகும். சில சமயங்களில் தலையில் நீர் குலுங்குவதைப் போலிருக்கும். கண்களை அசைத்தால் கூட வலி தோன்றும். மருத்துவர் ஆலோசனைப்படி தகுதியான நுண்ணுயிர்க்கொல்லி (ANTIBIOTIC) மருந்துகளையும், ஹிஸ்டமின் எதிர்ப்பு (ANTI HISTAMIN) மாத்திரைகளையும் உட்கொண்டால் சைனஸ் தொல்லை தீரும். இந்தத் தொந்தரவை ஆரம்பத்தில் கவனிக்காமல் விட்டு விட்டால், காற்றறைகளில் சீழ் சேர்ந்து கொள்ளும். அப்போது அறுவை சிகிச்சை செய்து தான் குணப்படுத்த முடியும். மூக்கில் சொட்டு மருந்து விடுவது, ஆவி பிடிப்பது போன்றவற்றால் சைனஸ் தொல்லை மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்க்கலாம்.

✱ அ. முஸ்தபா, தக்கோலம்.

? உறங்கி எழுந்தவுடன் வாயில் ஒருவித உமிழ்நீர் வருகிறதே... இது எப்படி ஏற்படுகிறது டாக்டர்?

! சாதாரணமாக வாயில் உமிழ்நீர் எப்போதுமே சுரக்கிறது. இந்த உமிழ்நீர் வாய் மூலம் விழுங்கப்படுகிறது. நாம் விழித்திருக்கும் போது உமிழ்நீரை விழுங்குவது தொடர்ந்து நடப்பதால் உமிழ்நீர் வாயில் சேருவதில்லை. ஆனால், உறங்கும் போது உமிழ்நீரை விழுங்குவது குறைந்து விடுகிறது. இதனால் வாயில் உமிழ்நீர் மொத்தமாகச் சேர்ந்து கொள்கிறது. உறங்கி எழுந்தவுடன் அது வெளியேறுகிறது அல்லது உறக்கத்திலேயே தானாகவே அது வழிந்து விடுகிறது.

✱ கே. கமலகண்ணன், ஓசூர்.

? நான் படிக்கும் போதும், வேலை செய்யும் போதும் என் கண்ணிலிருந்து நீர் வழிகிறது. இது எதனால்? இதனைத் தடுக்க வழி முறைகளைச் சொல்லுங்கள், டாக்டர்!

! கண்ணில் 'பார்வைக் குறைபாடு (REFRACTORY ERRORS) இருந்தால்



படிக்கும் போதும், வேலை செய்யும் போதும் கண்ணிலிருந்து நீர் வழியும். ஒவ் வாமை, அழற்சி காரணமாகவும் சில சமயங்களில் இது தோன்றும். கண் மருத்து வரிடம் சென்று உடனடியாக உன் கண் களைப் பரிசோதித்துக் கொள். மருத்துவர் உனக்குத் தேவையான வழி முறைகளைக் கூறுவார்.

✱ ஆர். சித்ரா, (ஊர் பெயர் இல்லை)

? எனக்கு அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. மருந்து சாப்பிடும் போது திணறல் நிற்கிறது. மீண்டும் வந்து விடு கிறது. இதற்கான சிகிச்சை முறை களைக் கூறுங்கள், டாக்டர்!

! மூச்சுத் திணறலுக்குப் பல காரணங்கள் உள்ளன. நுரையீரலில் சளி, ஆஸ்துமா, ஒவ்வாமை, ரத்தசோகை, இருதயக் கோளாறுகள் என்று பெரிய பட்டியலே தரலாம். உனக்கு எந்தக் காரணத்தால் மூச் சுத் திணறல் வருகிறது என்பதைப் பரி சோதித்துத் தெளிவுபடுத்திக் கொள். அதற் குரிய சிகிச்சை முறைகளை மருத்துவர் விளக்குவார். சிகிச்சையை அவ்வப்போது செய்யாமல், தொடர்ந்து முறையாகச் செய் தால் முழுமையாகக் குணமடையலாம்.

✱ எம். கே. வேங்கவேல், சேலம்.

? ஊசி போட்டு வீக்கம் ஏற்பட்டால் சூடு ஒத்தடம் தருவதால் பயன் உண்டா?

! பயன் உண்டு. சூடு ஒத்தடம் தருவதால் அதிலுள்ள வெப்பத்தின் காரணமாக வீக் கத்தில் தற்காலிகமாக வலி மறைந்து விடும். ஆனால், இதற்குப் பதிலாக ஐஸ் கட்டி ஒத்தடம் கொடுத்தால் வீக்கமும் குறையும்; வலியும் பூரணமாகக் குறையும்.


✱ எஸ். நிர்மலா, மதுரை - 1.

? என் உறவினர் மகளுக்கு தினமும் இர வில் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக் கம் இருக்கிறது. இதற்குக் காரணம்

டாக்டர் கு. கணேசன்

என்ன? எப்படித் தடுப்பது?

! பயம், பதட்டம், பரபரப்பு, ஏக்கம், ஏமாற்றம், கோபம், சோகம், பெற்றோரைப் பிரிதல், தோல்வியைத் தாங்க இயலாமை, தன்னம்பிக்கை இல்லாமை போன்ற உள வியல் காரணங்களால் சிறுவர், சிறுமிக ளுக்கு இரவில் படுக்கையில் சிறுநீர் கழிக் கும் பழக்கம் ஏற்படுகிறது. சிலருக்கு பரம் பரை காரணமாகவும், வேறு சிலருக்கு சிறுநீரகப் பாதையில் ஏற்படும் நோய்த் தொற்று காரணமாகவும் இந்தப் பழக்கம் ஏற்படலாம். காரணம் தெரிந்து சிகிச்சை பெற்றால் குணம் கிடைக்கும். இந்தப் பழக்கத்தைத் தவிர்க்க இரண்டு வழிமுறை கள் உதவும். 1. இரவில் தூங்கச் செல்லும் முன்பு ஒருமுறை சிறுநீர் கழித்து விட்டு, இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணிக் குள் ஒருமுறை அலாரம் வைத்து, எழுந்து, சிறுநீர் கழித்து விட்டால் நாளடைவில் இந்தப் பழக்கம் மறைந்து விடும். 2. PAD and BELL என்ற கருவி உள்ளது. இதில் ஒரு விரிப்பும் அந்த விரிப்புக்குள் ஒரு அலாரமும் இருக்கும். இதைப் படுக்கை யில் விரித்து அதன் மேல் படுத்துறங்க வேண்டும். உறக்கத்தில் சிறுநீர் வெளியேறி சில துளிகள் அதில் பட்டதும், பாட் டரியால் இயங்கும் அந்த அலாரம் இயங்கி மணி அடிக்கும். அந்த சத்தம் கேட்டவுடன் விழிப்பு வந்து விடும். உடனே கழிப்பறைக் குச் சென்று சிறுநீர் கழித்து விட வேண்டும். இப்படி இந்தக் கருவியின் உதவியால் படுக்கையில் சிறு நீர் கழிக்கும் பழக்கத்தை சில வாரங்களில் மாற்றி விடலாம். இவை தவிர, மருத்துவர் யோசனையின் பேரில் மட்டும் ஆம்பிடமின், இமிபிரமின் போன்ற மாத்திரைகளில் ஏதேனும் ஒன்றை உபயோகித்து வரலாம். பலன் கிடைக்கும்.



எங்கள் ஊரில் நடந்தது!

நல்ல எண்ணெய்!

என் மாமா ஒரு நாள் எங்கள் வீட்டிற்குக் காலையில் வந்தார். நாங்கள் அவரைச் சிற்றுண்டி சாப்பிடச் சொன்னோம். இட்டிலியையும் கிண்ணத்தில் சட்டினியையும் கொண்டு வந்து என் அம்மா அவர் முன் வைத்தார். கூடவே இட்டிலியின் மீது நல்லெண்ணெய் ஊற்றினார். இட்டிலியின் மேலிருந்த எண்ணெயைத் தடவிவிட்டு அதைப் பிட்டு வாயில் போடப் போன மாமா அதில் முடி இருப்பதைக் கண்டார். இதை நானும் என் அம்மாவும் பார்த்துவிட, சங்கடத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க, அவரோ சற்றும் பதட்டமில்லாமல் "உங்க வீட்டு எண்ணெய் உண்மையிலேயே நல்ல எண்ணெய்தான். அதை இட்லியில் தடவும் போதே அதற்கு முடிவளர்ந்து விடுகிறதே!" என்று கூறி விட்டு அவரோடு சேர்ந்து எங்களையும் சிரிக்க வைத்தார்!

– ஜெ.கிருஷ்ணமூர்த்தி, வந்தவாசி.



நான் இல்லை!

நான் நண்பர்களுடன் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தேன். அந்த இடத்தில் புழுதி கிளம்பியது. அப்போது என் நண்பன் சுரேஷின் தந்தை வரவே, "ஏன்டா இப்படிப் புழுதியைக் கிளப்புகிறீர்கள்?" என்று கேட்டார். "நான் கிளப்பவில்லை அப்பா. என் கால்தான் கிளப்பியது" என்றான் சுரேஷ். உடனே சுரேஷின் தந்தை சுரேஷை "இப்படி மரியாதை இல்லாம எதிர்த்துப் பேசுவியா?" என்று இரண்டு அடி அடித்தார். கூடவே "நான் அடிக்கவில்லை. என் கைதான் அடித்தது" என்று குறும்பாக அவர் கூற, சுரேஷின் முகம் சுருங்கிவிட்டது.

– த.விஜயராஜ், சோழன்மாளிகை.

பூனைதான் காரணம்!

எங்க வீட்டில் புதியதாக ஒனிடா டி.வி. வாங்கினோம் அதற்கு ரிமோர்ட் கண்ட்ரோல் உண்டு. ஒருநாள் வீட்டுக்கு விருந்தாளி வந்திருந்தார்கள். நாங்கள் டெக் வாங்கிப் போட்டுப் பார்த்துக் கொண்டு இருந்தோம். டி.வி.யைப் போட்டு விட்டு ரிமோர்ட் கண்ட்ரோலை பின்னாடி வைத்து விட்டு எல்லோரும் முன்னே சென்று பார்த்து கொண்டு இருந்தோம். திடீர்

என்று டீவி.நின்று விட்டது. நாங்கள் பயந்து விட்டோம். அப்புறம் பார்த்தால் எங்கள் வீட்டுப் பூனை ரிமோட்டைக் காலால் அழுத்தி விட்டுப் போயிருக்கிறது!

– எஸ்.மகேந்திரன், சென்னை–77

நல்லபாட்டி!


ஊரில் எனக்கு ஒரு பாட்டி இருக்கிறாள். என் அப்பா பாட்டிக்கு மாதா மாதம் பணம் அனுப்புவார். அந்தப் பாட்டிக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கவும் தெரியும். ஒரு மாதம், பாட்டிக்கு வழக்கம் போல் அப்பா பணம் அனுப்பினார். பாட்டி பணத்தைப் பெற்றுக் கொண்ட ரசீது வந்தது. அதோடு என் அப்பாவுக்குப் பாட்டியிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. "நீ அனுப்பிய பணம் கிடைத்தது. ரூபா நோட்டு எல்லாமே ரொம்பப் பழசா இருந்தது. இனிமே யாச்சும் நல்ல நோட்டா அனுப்பு" என்று கடிதத்தில் எழுதி இருந்தது. இதைப் படித்ததும் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.


– வி.கே.குமரேசன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

பறக்கும் தட்டு!

ஆங்கில வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பாடம் போர் அடித்தது. பாலமுருகன் என்ற மாணவன், தன்னை மறந்து, குறட்டை விட்டுத் தூங்கி விட்டான். அதைச் சிறிது நேரம் வரை ஆசிரியர் கவனிக்க வில்லை. ஆனால் நேரம் சென்றதும் கவனித்து விட்டார் ஆசிரியர். கோபமான கோபம் வந்தது அவருக்கு. அந்தக் கோபத்தில் கையில் இருந்த புத்தகத்தை அவன்மீது எறிந்தார். தூக்கக் கலக்கத்தில் பாலமுருகன் அலறியடித்துக் கொண்டு எழுந்தான். "என்ன அது?" என்று முணங்கினான். உடனே ஆசிரியர் "பறக்கும் தட்டு!" என்று கூறினார். அனைவரும் அன்று முழுக்கச் சிரித்தோம்.

– இ.சிவா, போரூர்.







மூன்லைட்

எங்கள் வகுப்பிற்கு வரலாறு பாடம் எடுக்க ஒரு புது ஆசிரியர் வந்தார். வந்த முதல் நாளன்றே எங்கள் ஒவ்வொருவர் பெயரையும் சொல்லச் சொன்னார். முதலாக அவரே "என் பெயர் சிவகுமார். அதவாது சிவனுடைய குமாரன் 'முருகன்' என்று பொருள்" என்று கூறித் தொடங்கி வைத்தார்.

நாங்களும் ஒவ்வொருவராக எங்களது பெயரைச் சொல்லி அதன் அர்த்தத்தையும் சொல்லி வந்தோம். 'நிலவொளி' என்ற மாணவியின் முறை வந்தது. உடனே அவள் "என் பெயர் நிலவொளி அதாவது மூன்லைட் என்று பொருள்" என்று சொல்லி முடிக்க, உடனே ஒரு குறும்பு மாணவன் "இல்லை ஸார்... நிலவொளி என்றால் டியூப் லைட்" என்று இரு பொருள் படச் சொல்ல... வகுப்பே சிரிப்பலையால் மிதந்தது.

– ஸ்ரீநிவாஸ் பிரபு, சென்னை–90.

இடம் இல்லா விட்டால் என்ன?

நான் 10ம் வகுப்பு படித்துக் கொண்டு

இருந்தேன். என் தங்கை அடுத்த வருடம் 6ம் வகுப்புப் படிக்க வேறு பள்ளியில் சேர வேண்டும். அங்கு நுழைவுத் தேர்வு வைப்பார்கள். அதன் அடிப்படையில்தான் சேர்த்துக் கொள்வார்கள். அதனால் தங்கையிடம் 'இப்போதிருந்தே நன்றாகப் படி இல்லா விட்டால் அந்தப் பள்ளியில் இடம் கிடைக்காது' என்று அறிவுரை கூறினேன். அதற்கு அவள் "இடம் கிடைக்கா விட்டால் என்ன அக்கா. நான் கீழே உட்கார்ந்து கொள்கிறேன்' என்றாள். எங்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பு. எங்கள் சிரிப்புக்குக் காரணம் தெரியாது திகைத்தவள் தங்கை ஒருவளே!

– எம்.வி.சுஜாதா, திருச்சி-14.

மணி எத்தனை?

நான் பத்தாம் வகுப்புப் படிக்கின்றேன். எங்கள் தமிழ் ஆசிரியர் டெஸ்ட் வைத்தார். மறுநாள் விடைத்தாளைக் கொடுத்தார். ஒவ்வொருவராக மார்க்கைக் கேட்டுக் கொண்டே வந்தார். என் முறை வந்தது. அடுத்து மணி என்ற மாணவியின் முறை.' "மணி, எத்தனை?" எனக் கேட்டார் ஆசிரியர். உடனே ஒரு குறும்புக் காரப் பையன் எழுந்து, "சார் மணி 11.50" என்றான். வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.

– பி.தனபாக்கியம், சித்தம்பூண்டி

மணி அடித்ததும்!

என் நண்பனுடைய குட்டித் தம்பி சரவணன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவனை முதல் வகுப்பில் சேர்த்த அன்று அவனுடைய தாத்தா "சரவணா, இன்றுதான் முதல் நாளா பள்ளிக்கூடம் போறே. ஆசிரியரிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டும்" என்று புத்தி சொல்லி விட்டு "அது சரி, மணி அடித்ததும் என்ன செய்வே?" என்று கேட்டார். உடனே அவன், "இது தெரியாதா தாத்தா! உடனே திருப்பி அடிப்பேன்" என்று சொல்ல ஒரே சிரிப்புத்தான்.

– எஸ்.தட்சணா மூர்த்தி, நாகலூர்.





கத்திச் சண்டை

நானும் என் தம்பியும் நண்பர்களும் மாலை நேரத்தில் எங்கள் வீட்டு முற்றத்தில் விளையாடுவோம். விளையாடும்பொழுது உரத்துச் சத்தம் போடுவோம்.

ஒருநாள் நாங்கள் விளையாடும்போது எங்கள் அம்மப்பா(தாத்தா) எங்களைப் பார்த்து, "ரெண்டு பேரும் கத்திச் சண்டை போடாமல் விளையாடுங்க" என்றார். எனது தம்பி (வயது7) "அம்மப்பா, நாங்க கத்திச் சண்டை போடறதில்லே. வாய்ச்சண்டைதான் போடுவோம்" என்றான். அதைக்கேட்டு அங்கிருந்த நண்பர்கள் எல்லோரும் சிரித்தனர். அம்மப்பாவும் சிரித்தார்.

– த.ஆதவன், கொழும்பு-6,

(இந்தியாவில் தொடர்பு முகவரி தரப்படவில்லை)

கிளி எங்கே?

"சென்ற வருடம் நான், தங்கை, அம்மா

ஆகிய மூவரும் எங்கள் ஊரில் இருந்து மயிலாடுதுறைக்குச் சென்றோம். திரும்பி வரும்போது பஸ்ஸில் கூட்டம் அதிகம். ஆனாலும் என் தங்கை சிறியவளாக இருப்பதால் முதலில் ஏறி பஸ்ஸில் இடம் பிடித்து விட்டாள். இருவர் அமரும் சீட்டில் உட்கார்ந்து இன்னொரு இடத்தையும் ரிசர்வ் பண்ணிக் கொண்டாள். அம்மா ஏறுவதற்கு தாமதமானதால் அருகில் நின்று கொண்டிருந்த பெண்மணி "ஒருவர் உட்கார இடம் இருக்கிறதே. நான் அமர்ந்து கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார். என் தங்கையோ "ம்ஹூம். இது எங்கம்மாவுக்கு நான் போட்ட இடம். யாரும் உட்காரக் கூடாது" என்றாள். என்னையும் கூட உட்கார விட வில்லை. என் அம்மாவும் வந்து அமர்ந்தபின்தான் அவள்



சீட்டில் இடம் பிடிக்க வைத்திருந்த கையை எடுத்தாள். உடனே அந்தப் பெண்மணி "இவ்வளவு சமத்தாப் பேசறியே. உங்காதில் போட்டிருக்கும் கிளிக் கூண்டுல கிளியைக் காணோமே. ஏமாந்து போயிட்டியே" என்றார். அதாவது தங்கை அணிந்திருந்த தோடில் கிளிக் கூண்டு போன்ற அமைப்பு இருக்கும். பெண்மணி குறிப்பிட்டது அதைத்தான். என் தங்கை "நீங்க தவறா புரிஞ்சு கிட்டீங்க. இப்போ காலை வேளைதானே? அதனால கிளி இரைதேடப் போயிருக்கு. சாயந்திரம் ஆன உடனே அது தன்னால கூண்டுக்குத் திரும்பி வந்துடும்" என்று ஒரு போடு போட்டாள். எல்லோரும் மனம் விட்டுச் சிரித்தார்கள். அவள் புத்தி சாதுர்யத்தை எண்ணி வியந்தனர்."

– ஜெ.சுஜாதா, செம்பனார் கோவில்.

எங்கள் சாமி பிள்ளையார்

அன்புமழை பொழியும் தெய்வம்
எங்கள் சாமி பிள்ளையார்.
அன்னைபோல அருள் தருவார்
தங்க சாமி பிள்ளையார்.

வேப்பமரக் காற்று ஆவார்
எங்கள் சாமி பிள்ளையார்.
வீசும்தென்றல் மழை ஆவார்
தங்க சாமி பிள்ளையார்.



குளத்தின் கரையில் குடியிருக்கும்
எங்கள் சாமி பிள்ளையார்.
குளிர்தருவின் மலர் ஆவார்
தங்க சாமி பிள்ளையார்.

தோப்புக்கரணம் போட வைப்பார்
எங்கள்சாமி பிள்ளையார்.
துதிக்கையினால் வாழ்த்திடுவார்
தங்கசாமி பிள்ளையார்.

(வரகூர். நாரணமணிவண்ணன்)

ஓடிப்போன பேய்!

மங்களபுரத்தில் ஏழிசை வல்லி என்று ஒரு பாடகி இருந்தாள். பெயர்தான் ஏழிசைவல்லியே தவிர அவள் வாயைத் திறந்து பாடினால் காதை மூடிக் கொள்ளும்படி இருக்கும்! அத்தனை இனிமையான குரல்! அது மட்டுமா அவள் பாட்டில் அபஸ்வரம்வேறு இருக்கும்.

ஏழிசைவல்லி தினமும் அதிகாலையில் சாதகம் பண்ணுவாள். சாதகம் என்றால் பாடிப் பழகுவது. அவள் சாதகம் பண்ணினால் எல்லோரும் ஓடிப் போய் விடுவார்கள். இந்தக் காரணத்தினாலேயே அவள் அடிக்கடி வீட்டைக் காலி பண்ணும்படி இருந்தது. பாட்டால் அவள் பெயர் பிரபலமானதைவிட, அதிகாலை சாதகத்தால் பிரபலமானதே அதிகம். மங்கலபுரத்தில் யாருமே அவளுக்கு வீடுதர மறுத்தார்கள். எல்லாத் தெருக்களிலும் அவள் குடியிருந்து விட்டாள். அவள் குடிஇருக்காத தெருவே மங்களபுரத்தில் இல்லை.

ஏழிசைவல்லி வீடு கிடைக்காது பட்ட துன்பத்தைவிட அவளுடைய கணவன் மாணிக்கபூபதி பட்ட துன்பம்தான் சொல்லில் அடங்காது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை புது வீடு வாடகைக்கு பிடிக்க வேண்டிய நிலை என்றால் யாரால் தாங்க முடியும்? மாணிக்கபூபதி கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். ஊருக்கு வெளியே இருந்த ஆலமரத்திற்கு அருகே ஒரு சிறிய நிலத்தைக் குத்தகைக்கு வாங்கினார். அதிலே ஒரு குடிசை போட்டுக் கொண்டு மனைவியுடன் குடியேறினார். தினமும் அதிகாலையில் ஏழிசைவல்லி, அந்த ஆலமரத்தின் அடியில் வந்து உட்கார்ந்து கொள்வாள். மூன்று மணி நேரம் தனது எருமைக் குரலில் பாடிப் பழகி சாதகம் பண்ணுவாள்.

அந்த ஆலமரத்தில் ஒரு பேய் இருந்தது- அது போவோர் வருவோரை அடிக்கடி பயப்படுத்தும். யாரையாவது போய்ப் பிடித்துக் கொள்ளும். இப்படி ஊர் மக்களைப் பயப்படுத்தி வாழ்ந்து வந்த பேயையே, அரண்டு நடுங்க வைத்தாள் ஏழிசைவல்லி. அது, அவளுடைய பாட்டைக் கேட்டு நிலை குலைந்து போனது. தினமும் இந்தப் பாட்டைக் கேட்டுக் கேட்டு பைத்தியம் பிடித்த நிலைக்கு ஆளாவதை விட பேசாமல் வேறு எங்கேயாவது ஓடிப்போய் விடலாமா என்று கூட பேய் யோசித்தது.

ஆனாலும் அந்த ஆலமரத்தை விட்டு ஓடிப்போக அது விரும்பவில்லை. ஏனென்றால் அந்த மரத்தில் அது எத்தனையோ ஆண்டுகளாக வசதியாக மகிழ்ச்சியாக வசித்து வந்தது. பழகிய

சின்னபாபு



இடத்தைவிட்டுப் போக யாருக்குதான் மனம் வரும்? கடைசியில் யோசித்து யோசித்து ஏழிசை வல்லியையே அந்தக் குடிசையில் இருந்து வேறு இடத்துக்குக் கிளப்ப அது ஒரு தந்திரம் செய்தது.

அடுத்தநாள் காலையில் வழக்கப்படி ஏழிசைவல்லி சாதகம் பண்ணிக் கொண்டு இருந்தாள். குடிசை வாசலில் மாணிக்க பூபதி காதைப் பொத்திக் கொண்டு அமர்ந்திருந்தார். பேய் அவர் முன்னால் போய் நின்றது. மாணிக்க பூபதி அதைக் கண்டு கொள்ளவே இல்லை!

"எல்லோரும் என்னைப் பார்த்ததும் பயந்து நடுங்குவார்கள். நீ இப்படித் துளியும் பயப்படாது, என்னைக் கண்டு கூடக் கொள்ளாது இருக்கிறாயே! உன் தைரியத்தை மெச்சுகிறேன்" என்றது பேய்.


"என் மனைவியின் பாட்டை ஒரு மாதம் கேட்டால் போதும். எத்தனை பேய் வந்தாலும் பயப்படாத துணிவு தானே வந்துவிடும்" என்றார் மாணிக்க பூபதி அலட்சியமாக.

பயப்படக் கூடியவனாக இருந்தால், பயப்படுத்தி விரட்டி விடலாம். இப்படி அலட்சியமாக இருக்கும் ஒருவனை எப்படி அந்த இடத்தை விட்டுக் கிளம்ப வைப்பது? பேயின் திட்டம் ஏதும் அங்கே பலிக்கவில்லை. மீண்டும் ஒரு முயற்சி பண்ணியது பேய்.

"மாணிக்கபூபதி, உனக்குக் கோடீஸ்வரனாக வேண்டும் என்ற ஆசை இருக்கிறதா?" என்று கேட்டது.

"யாருக்குத்தான் கோடீஸ்வரனாகும்





ஆசை இருக்காது!'' என்றார் பூபதி.

"நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதன்படி நடந்தால் நீ கோம஡஼ஸ்வரனாகலாம்."

''உன்னுடைய பேய்த்திட்டம் எல்லாம் என்னிடம் பலிக்காது'' என்றார் பூபதி துணிவுடன்.

'என் திட்டம் என்னவென்றுதான் கேளேன்,'' என்று குழைந்தது பேய்.

"சரி, சொல்லித் தொலை"

"நான் போய் இந்த ஊர் ராஜகுமாரியைப் பிடித்துக் கொள்கிறேன். ராஜா என்னென்னவோ பண்ணுவார். எதுவும் பலிக்காது. கடைசியில் "பேயை விரட்டி என் பெண்ணைக் குணப் படுத்துபவனுக்கு கோடிப் பொன் பரிசு தருகிறேன்" என்று அறிவிப்பார்! நீ வந்து மந்திராவதி மாதிரி நடி. நான் ஓடிப் போய் விடுகிறேன்."

"சரி, என்னைக் கோடீஸ்வரனாக்குவதில் உனக்கு என்ன இத்தனை ஆசை?"

''காரணமாகத்தான். நீயும் உன் மனைவியும் இந்தக் குடிசையைக் காலி பண்ணிக் கொண்டு போய் விட வேண்டும். திரும்ப இந்தப் பக்கமே தலை வைக்கக் கூடாது."

மாணிக்க பூபதி, தன் மனைவியிடம் பேய் கூறியதைக் கூறினார். கோடீஸ்வரனாக எளிய வழி கிடைப்பதை யார்தான் மறுப்பார்கள்? ஏழிசைவல்லியும் ஒப்புக் கொண்டாள்.

திட்டப்படி பேய், அந்த ஊர் ராஜகுமாரியை போய்ப் பிடித்துக் கொண்டது. எத்தனையோ மந்திரவாதிகள் வந்து முயன்று, அடிபட்டுத் திரும்பினர். கடைசியில் ராஜா, கோடிப் பொன் பரிசளிக்கும் திட்டத்தை அறிவித்தார். மாணிக்க பூபதி, பெரிய பரம்பரை மந்திரவாதி போல் நடித்து பேய் ஓட்டப் போனார். 'ஷூம் ஷூம்' என்று சத்தம் போட்டார்.

"சும்மா அலட்டிக்காதே பூபதி. நம்ம ஒப்பந்தப்படி நான் இந்த ராஜகுமாரியை விட்டுவிட்டுப் போகிறேன். நீ கோடீஸ்வரன் ஆவாய். குடிசையைக் காலி பண்ணிக் கொண்டு போய்விடு. இனிமேல் நான் வேறு யாரையாவது பிடித்து, நீ அங்கே பேய் ஓட்ட வந்தால் உன்னை விழுங்கி விடுவேன்! கவனம்" என்று எச்சரித்து விடை பெற்றது பேய்.

திட்டப்படி ராஜகுமாரி குணமடைய, மாணிக்க பூபதிக்கு அரசர் கோடிப் பொன் பரிசளித்து, அரசாங்க மந்திர வாதியாக அமர்த்திக் கொண்டார். மாட மாளிகை, தேர், ஆள் வசதி எல்லாம் வந்தது.

ராஜகுமாரியை விட்டு விட்டு ஓடிப் போன பேய், பக்கத்து ஊர் ராஜ குமாரியைப் போய்ப் பிடித்துக் கொண்டது. பேயை விரட்ட ராஜா எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்காது போகவே, "உங்கள் அரசாங்க மந்திர வாதியை அனுப்பி உதவுங்கள்" என்று அவரிடம் இருந்து மங்களபுரி ராஜாவுக்கு வேண்டுகோள் கடிதம் வந்தது உடனேயே மாணிக்க பூபதியைக் கிளம்பு மாறு வேண்டிக் கொண்டார் ராஜா.

'வந்ததே ஆபத்து!' என்று கலங்கிப் போன மாணிக்கபூபதி, மனைவியிடம் விஷயத்தைக் கூறினார். "இனிமேல் இங்கு தங்கினால் ஆபத்து. நான் போனால்,பேய் என்னை விழுங்கி விடும். பேய்க்கு இரையாவதைவிட, நாம் வேறு ஊருக்கு ஓடிவிடுவது நல்லது" என்று அவசரப் படுத்தினார்.

"நீங்கள் ஏன் பேயைக் கண்டு பயப்படுகிறீர்கள்? நான் ஒரு யோசனை கூறுகிறேன்" என்றாள் ஏழிசைவல்லி.

மறுநாள் இருவரும் அடுத்த இராஜ்ஜியத்திற்குப் பயணமானார்கள். மாணிக்க பூபதிக்கு ஏக உபசாரம். அடுத்த நாள் காலை மாணிக்க பூபதி கையில் வேப்பிலை, விபூதியுடன் ராஜகுமாரியை நெருங்கினார்.

"மாணிக்க பூபதி. நம் ஒப்பந்தத்தை மறந்து விட்டாயா? கிட்டே நெருங்கி னால் விழுங்கி விடுவேன். ஓடிப் போ உடனே" என்று மிரட்டியது பேய்.

"ஐயைய, நான் உங்களை விரட்ட வரலீங்க.. உங்களுக்கு ஓர் எச்சரிக்கை தரவே வந்தேன்" என்றார் மாணிக்க பூபதி.

"என்னது! எனக்கா எச்சரிக்கை!" என்று கனைலக் கக்கியது பேய்.

"ஆமாங்க. இந்த ராஜகுமாரிக்கு என் மனைவி ஏழிசைவல்லி நாளையில இருந்து தினமும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பாட்டு சொல்லித் தரப் போகிறாள். அதைச் சொல்லி உங்களை எச்சரிக்கவே வந்தேன். நீங்க தாராளமா இருங்க. உங்களை யார் போகச் சொன்னது? என்றான் பூபதி அமைதியாக.

"ஐயோ!" என்று அலறிய பேய் தலைதெறிக்க ராஜகுமாரியை விட்டு விட்டு ஓடிப்போனது!

(நாடோடிக் கதையின் தழுவல்)

சிறையிலிருந்த சிறுவன்!



அந்தச் சிறுவனிடம் கடுமையாகக் கோபித்துக் கொண்ட அவன் தந்தை ஒரு கடிதத்தைக் கொடுத்து "இதை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய்க் கொடு!" என்று கட்டளையிட்டார். ஏன், எதற்கு என்று விளங்கிக்காத அந்தச் சிறுவன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று இன்ஸ்பெக்டரிடம் கடிதத் தைக் கொடுத்தான்.

இன்ஸ்பெக்டர், சிறுவன் கொண்டு வந்திருந்த கடிதத்தை வாங்கிப் படித்து விட்டு உடனே அவனை 'லாக்கப்'பில் அடைத்து, "உன்னுடைய தொல்லை தாங்க முடியவில்லையாம். அதனால் சிறையில் அடைத்து வைக்கச் சொல்லி உன் தந்தை கடிதம் எழுதியுள்ளார்!" என்று விளக்கினார்.

நாள் முழுவதும் 'லாக்கப்'பில் இருந்து விட்டுச் சிறுவன் வீடு திரும்பினான். அன்று முதல் போலீஸ்காரர்கள் என்றாலே அந்தச் சிறுவனுக்குப் பயம்! அவன் வளர்ந்து பெரியவன் ஆனதும் மக்களைத் திகிலில் ஆழ்த்தும் படங்களை எடுத்துப் பெரும் புகழையும், ஏராளமான பணத்தையும் சேர்த்தான். அப்படிப் புகழ் பெற்ற அந்தச் சிறுவன் வேறு யாருமில்லை, ஆல்பிரட் ஹிட்ச்சாக்'தான்!

சி.மணி,
புத்தனாம் பட்டி.

கேளுங்கள் சொல்லப்படும்

புத்தர் எந்த மொழியில் பேசினார்...?

• அடைய முடியாத, வெகு தொலைவில் உள்ள பொருள்களின் உயரத்தை மட்டும் குறிப்பிடுகிறார்களே! இது எப்படி? - வெ. புண்யகோடி, மாயூரம்.

'செக்ஸ்டண்ட்' என்ற ஒரு கருவி இருக் கிறது. இதன் உதவியால் இருந்த இடத்தில் இருந்தே வெகு தொலைவில் உள்ள பொருள்களின் உயரத்தைக் கணக்கிட்டுக் கூறுகிறார்கள்.

• உடலில் முடியே இல்லாத பாலூட்டிகள் ஏதாவது இருக்கிறதா? - மு. கன்னிகா, புவனகிரி.

இல்லை. நீரில் வாழும் பாலூட்டிகளான நீலத் திமிங்கலம், டால்வின் உட்பட எல்லாமே உடலில் முடி உள்ளவையே.

• Tiger Horse என்பது என்ன விலங்கு? இது இப்பொழுது உயிருடன் இருக்கிறதா? - வெ. பரிமளம், வந்தவாசி.

பண்டைய ரோம் நகர வரலாறு படிக்கிறீர்களா? அதில்தான் இந்த 'டைகர் ஹார்ஸ்' என்ற விலங்கு குறிப்பிடப்படுகிறது. இது வரிக்குதிரைக்கு ரோமானியர்கள் இட்ட பெயர். அவ்வளவே.

• சூரிய குடும்பத்தில் உள்ள நிலாக் களில் மிகப்பெரியது எது? இது எதைச் சுற்றி வருகிறது? - மு. கதிர்வேல், பவானி.


'டைட்டன்' என்ற நிலாதான் சூரியக் குடும்பத்தில் உள்ள நிலாக்களில் மிகப் பெரியது. இது சனி கோளைச் சுற்றி வருகிறது.


• மனிதனைக் கடிப்பது பெண் கொசுவே என்கிறார்களே, இது ஏன்? ஆண் கொசு ஏன் கடிப்பதில்லை? - க. அந்தோணிசாமி, வில்லியனூர்.

பெண் கொசுவுக்குத்தான் முட்டையிட வேண்டிய கடமை இருக்கிறது. முட்டையிட அதற்கு புரோட்டீன் தேவை. இந்த புரோட்டீன் தேவைக்காகவே பெண் கொசு மனிதர்களையும் விலங்குகளையும் கடித்து இரத்தம் எடுத்துக் கொள்கிறது.

• யானை குட்டி போட எத்தனை மாதங்கள் ஆகும்? - கு. ஷர்மிளா, ராணிப்பேட்டை.

சராசரியாக 22 மாதங்கள் ஆகும். இது காட்டில் சுதந்திரமாக வாழும் போது, கூடலாம். பாலூட்டிகளில் யானையின் கர்ப காலமே











மிக அதிகமானது.

• **சத்யஜித்ரே சிறுவர்களுக்காக எடுத்த முதல் திரைப்படம் எது? இது எதைப் பற்றியது? - மு. பாபுராஜ், காங்கேயம்.**

"கூபிகைன் பாகாகைன்" என்ற வங்க மொழி படமே சத்யஜித் ரேயின் முதல் சிறுவர் படம். இது போரைத் தவிர்க்கும் நினைப்பை இளைய தலைமுறையினர் மனத்தில் ஊன்ற வைக்கும் கதை. இதன் மூலக்கதையை எழுதியவர் 'ரே'வின் தா த்தா உபேந்திர கிஷோர் ரே. இது வெளி வந்த ஆண்டு 1969.

• **அண்டார்க்டிகாவில் எல்லைப் பிரச்னை உண்டா? - கமலநாதன், சித்தூர்பேட்.**

எல்லைப் பிரச்னை இல்லாத பகுதி களும் இருக்கிறதா என்ன? பிரிட்டன் அண்டார்க்டி காவில் தன் வசம் வைத்துள்ள பகுதிகளைக் குறித்து சிலி நாடு பிரச்னை எழுப்பியுள்ளது.

• **கற்சட்டி என்று கிராமங்களில் பயன்படுத் தப்படும் பாத்திரம் எதனால் செய்யப்படுகிறது? எம். காந்திமதி, நெல்லை - 3.**

கற்சட்டி என்பது உலோகம் அல்ல. இதன் இன்னொரு பெயர் மாக்கல். மேக்னீசியம் சிலிக் கேட் அடங்கிய இது ஒரு மிருதுவான கனிமம். தீ, அமிலம் போன்ற எதுவுமே இதைப் பாதிக்காது.

• **புத்தர் எந்த மொழியில் பேசினார்? சமஸ்கிருதமா, பாலியா? - வா. மோகனராக, சாத்தூர்.**

இரண்டும் இல்லை. புத்தர் பேசியது, போதித் தது, எல்லாம் பிராகிருத மொழியின் கிளை மொழியான 'மகதி' மொழி (Magathi) யில்தான். புத்தர் காலத்'ற்குப் பிறகு அவரது போதனைகள் பாலி மொழியில் பெருமளவுக்கு பிரபலப்படுத் தப்பட்டன.

• **உலகப்புகழ் பெற்ற தாஜ்மஹாலை வடி வமைத்துக் கட்டிய கட்டடக் கலைஞரின் பெயர் என்ன? - தூ. பன்னீர் செல்வம், அடியக்கமங்கலம்.**

இம்மாதியான அரிய கட்டடங்களைக் கட்டிய கலைஞர்களின் பெயரை மறைத்து விடு வதே வழக்கம். கட்ட ஏற்பாடு செய்த மன்ன ருக்கே பெருமை போய்ச் சேர வேண்டும் என்பதே நோக்கம். ஆனால், தாஜ் மஹாலை வடிவமைத்துக் கட்டிய கலைஞனின் பெயர் நமக்குத் தெரிகிறது. இவரது பெயர் உஸ்தாத் இசா என்பது. பாரசீகத்தைச் சேர்ந்த இவர் தாஜ் மஹாலைக் கட்டி முடிக்க 21½ ஆண்டு ஆயிற்று!

• **டெரிலின் துணியும், லினன் துணியும் எப்படித் தயாரிக்கப்படுகின்றன? - வெ. முத்துக் குமரன், வைத்தீஸ்வரன் கோவில்.**

டெரிலின் என்பது செயற் கையான நூல் இழை. குருட் ஆயில் என்ற கச்சா எண் ணெயிலிருந்து வடிக்கப்படும்

சேரநம்பி







எத்திலீன் கிளைக்காலுடன், டெரிதாலிக் அமிலத்தைக் கலந்து இந்த செயற்கை இழையைத் தயாரிக்கிறார்கள். இதிலிருந்து நெய்யப்படும் துணியே டெரிலின். இது முழுக்க முழுக்க செயற்கையானது. லினன் என்பது ஜூட் என்றும் சணல் செடியின் இழையில் இருந்து எடுக்கப்படுவது. உயர் ரக சணலின் மென்மையான இழையையே லினன் என்கிறார்கள்.

• திருட்டுக் கலையைப் பயில ஏதாவது நூல் இருக்கிறதா? - மா. பொன்னம்பலம், மேலக் கடல்.

இருந்திருக்கிறது என்பதை பஞ்ச தந்திரம் கூறுகிறது. அதிவருணா என்ற ஒரு குருநாதரிடம் சுகுமாறன் என்ற மாணவன் திருட்டுக் கலையைப் பயின்றான் என்று பஞ்ச தந்திரம் கூறுகிறது.

• இந்திய சரித்திரத்தில் முக்கிய இடம் பெறும் மொகஞ்சதாரே இப்பொழுது நம்மிடம் இல்லையா? - வா. முகமது சுக்கூர், கோணாம்பட்டு.

ஆமாம். பாகிஸ்தான் பிரிந்த போது நம்மிடமிருந்து மொகஞ்சதாரோ போய்விட்டது. இது இப்பொழுது பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் லார்கானா என்ற மாவட்டத்தில் இருக்கிறது.

• இந்துப் புராணங்களில் வரும் அக்னிக் கடவுளுக்கு மனைவி உண்டா? - தூப்புள் சென்ன கேசவன், தும்கூர்.

அக்னிக் கடவுளுக்கும் மனைவி உண்டு. பெயர் "ஸ்வாகா". அக்னியை விடப் பெருமை மிக்க தெய்வம் இந்தத் திருமதி அக்னி! அக்னிக்குப் போக வேண்டியவை எல்லாம் இந்தத் திருமதி வாயிலாகவே போய்ச் சேர வேண்டும். அதனாலேயே யாகங்களில் கூட "ஸ்வாகா" என்று இந்த அம்மையாரை அழைத்து கௌரவிக்கிறார்கள்.

• ஹெலிகாப்டரை யார் உருவாக்கினார்கள்? - வா. பெரியநாயகி, திருத்துரைப் பூண்டி.

இன்று நாம் காணும் ஹெலிகாப்டரை "ஹைறகோ ஸைகார்ஸ்க்கி" என்ற ரஷ்ய நாட்டுக்காரர் உருவாக்கினார். ஆண்டு 1919.

• உர்(ரு)து மொழியில் இராமாயணம் எழுதப்பட்டிருக்கிறதா? - வெ. நவாஸ் கான், அரிசிக்கரை.

எழுதப்பட்டிருக்கிறதே. முன்ஷி ஜெகன்னாத குஷ்டார் என்பவர் எழுதியிருக் கிறார். இதன் பெயர் "ராமாயண குஷ்டார்" என்பது.

• குற்றங்களுக்கு தண்டனை வழங்கும் போது இ.பி.கோ. சட்டம் என்று குறிப்பிடுகிறார்களே, இதை யார் இயற்றினார்கள்? - சைமன் பாக்கியநாதன், பட்டுக் கோட்டை.

பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் மெக்காலே பிரபுவின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவே இந்த இந்தியன் பீனல் கோட் சட்டத்தை இயற்றியது. இது 1862, ஜனவரி முதல் நாளான்று அமுலுக்கு வந்தது.

புலி 16 அடியா?

ரேவதி

ஜீப் நின்றது. அருள்சாமி தனது உதவியாளர்களுடன் கீழே இறங்கினார். கடைசியாக மாணிக்கம். எல்லோரும் கறுமை கலந்த காக்கி உடையில் இருந்தனர். பெரியசாமி எல்லோருடைய கிட்டையும் எடுத்துக் கொடுத்தார். அருள்சாமி ஜீப்பை ஓரமாக நிறுத்திப் பூட்டினார்.

சுற்றிலும் உயர்ந்த மலைகள். பசுமை கொஞ்சியது. எங்கோ அருவி விழும் ஓசை. மற்றபடி ஒரே அமைதி.

கைத் துப்பாக்கியை உயரே பிடித்துச் சுட்டார் அருள்சாமி.

"டுமீல்...! டுமீல்...! டுமீல்!"

வெடிச் சத்தத்தைக் கேட்டு அதிர்ந்த பறவைகள் 'சடசட'வென்று ஒலியெழுப்பிப் பறந்தன.

"எம்பா வானத்தைப் பார்த்துச் சுட்டீங்க?" என்று புரியாமல் கேட்டான் மாணிக்கம்.

"நாம்ப போக வேண்டிய கிராமம் இந்தக் காட்டுக்குள்ளே இருக்கு. நாம்ப வந்துட்டோம்கறதை அவங்களுக்குத் தெரிவிக்கத்தான் சுட்டேன். நமக்கு வழி தெரியாதே. அவங்க வந்து கூட்டிக்கிட்டுப் போக வேண்டாமா? அதுக்குத்தான் சுட்டேன்" என்றார் அருள்சாமி.

அரைமணி நேரம் ஓடியது. "கிணிங் கிணிங்" என்று சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. மரங்களும் புதர்களும் மண்டிக் கிடந்த பகுதியில் இருந்து கிராமவாசிகள் நான்கு சைக்கிள்களில் வந்து இறங்கி அருள்சாமிக்கு வணக்கம் போட்டனர்.

பதிலுக்கு வணங்கிய அருள்சாமி, "இன்னிக்கி புலி சமாச்சாரம் ஏதாவது உண்டா?" என்று கேட்டார்.

"நேற்றைக்கு, கிணற்றில் தண்ணி எடுக்கப் போன ஒரு பெண்ணைத் தாக்கியிருக்கு. அதனோட கூச்சலைக் கேட்டு எல்லோரும் ஓடி வந்து விரட்டவே உறுமிக்கிட்டே ஓடிப் போயிடுத்து. பொண்ணுக்கு கழுத்துல நல்ல காயம். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போய் ஊசி போட்டிருக்காங்க" என்றார் கடுக்கன் போட்டிருந்த ஒரு கிராமவாசி.

கிராமவாசிகள் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு முன்னே சென்று வழிகாட்ட



அடர்ந்த காட்டுக்கு இடையே எல்லோரும் நடந்தனர்.

"எல்லாப் புலிகளுமே மனிதர்களைச் சாப்பிடுமா?" என்று கேட்டான் மாணிக்கம்.



"சாதாரணமாகப் புலி மனிதர்களைத் தாக்குவது கிடையாது. பொதுவாகப் பசிக்கும் போதுதான் இரை தேடும். கண்ணில் பட்டதை எல்லாம் தாக்கும். வெட்டுக்கிளி, அணில் குஞ்சு, மைனா, குரங்கு, முயல் என்று எல்லாவற்றையும் பாரபட்சம் இல்லாமல் வேட்டையாடும். பசியாக இருக்கும் போது மனிதன் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான். ஆனால் ஒருமுறை மனிதனைப் புலி ருசி பார்த்து விட்டால் ஆபத்துதான். அது மனிதனைத் தாக்கும் புலியாக மாறி விடும். காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு வருவதால், புலிகளுக்கு உணவு கிடைக்கும் வாய்ப்பும் குறைந்து கொண்டே வருகிறது. இரையாக எதுவும் கிடைக்காத போது மனிதர்களைத் தாக்கத் துவங்குகிறது" என்றார் அருள்சாமி.

"நீங்க சொல்றது உண்மைதாங்க. ஒரு காலத்துல எனக்கு நினைவு தெரிஞ்சு இந்தக் காட்டில ஐம்பது புலிங்க இருந்த துங்க. இப்ப பத்துப் புலிக கூட இல்லே" என்றார் கடுக்கன்.

"புலிகள் வாழ வசதியுள்ள பகுதிகள் குறைஞ்சு போச்சு. அதனாலேயே புலிகளின் எண்ணிக்கை குறைஞ்சது. அதோட திருட்டுத்தனமா புலிகளை வேட்டையாடி அழிக்கிறதும் அதிகமாயிடுச்சு."

"புலிகளை வேட்டையாடி என்ன பண்ணுவாங்க அப்பா?" என்று வியப்புடன் கேட்டான் மாணிக்கம்.

"புலிகளின் தோல், எலும்புகள், இறைச்சி, உறுப்புகள், இரத்தம் போன்ற எல்லாவற்றிற்கும் மருத்துவக் குணம் இருப்பதாக ஒரு நம்பிக்கை. இது அறிவியல் அடிப்படையில் உறுதிசெய்யப்படவில்லை. இந்தியப் புலிகள் கம்பீரத்திற்கும் அழகுக்கும் பெயர் போனவை. அதனாலேயே இவை பெருமளவுக்கு திருட்டுத்தனமாக வேட்டையாடப்பட்டு அழிக்கப்படுகின்றன" என்றார் அருள்சாமி.

"இப்போ நீங்க புலியைச் சுடப் போறீங்களே...

இதுக்கு அனுமதி வாங்கியிருக்கீங்களா?"

"புலிகளை வேட்டையாடுவது சட்டப்படி குற்றம். இதற்குக் கடுமையான தண்டனை உண்டு. மனித வாடையை சுவை கண்டுவிட்ட புலியை ஆட்கொல்லிப் புலி (MAN EATER) என்பார்கள். அதாவது இது கொல்லப்பட வேண்டிய புலி என்பதை அந்தப் புலி உள்ள பகுதியைச் சேர்ந்த அரசு அதிகாரி அறிவிப்பார். அப்படி அறிவிக்கப்பட்ட புலிகளைக் கொல்ல, பாதிக்கப்பட்ட கிராம மக்கள் என்னைப் போன்ற ஷிகாரிகளை அழைத்துக் கேட்பார்கள். நாங்கள் ஒப்புக் கொண்டால், அரசு அனுமதி பெற்று புலியை வேட்டையாடுவார்கள். இந்த அனுமதி அந்தக் குறிப்பிட்ட ஆட்கொல்லிப் புலியை மட்டும் அழிக்கத்தான். கூடவே வேறு புலிகளை வேட்டையாடி விட்டால் தண்டனை உண்டு. அதோடு, வேட்டையாடும் புலியின் உடலை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் தண்டனை உண்டு" என்று சிரித்தார் அருள்சாமி.

"புலி, புலியையே தின்னுமாமே! உண்மைங்களா?" என்று கேட்டார் ஒரு கிராமவாசி.

"உண்மைதான். புலிகள் சுத்தமான அசைவம். பசிக்கும் போது, அதனிடம் ஏமாறும் எல்லாமே அதற்கு இரைதான். இது காட்டு விதி. குட்டி போட்டதும், அப்பா புலியை அம்மாப் புலி விரட்டி விடும். ஏமாந்தால், அப்பா தன் குட்டிகளையே சாப்பிட்டு விடும். இந்த விஷயத்தில் அம்மாப் புலி படு உஷாராக இருக்கும். அருகே நெருங்கவே விடாது. அது வாயைத் திறந்து உறுமும் போது பயங்கரமாக இருக்கும்."

"பிறந்ததும் புலிக் குட்டிக்குக் கண் தெரியாதாமே! உண்மைங்களா?" என்று கேட்டார் கடுக்கன்.


"ஆமாம். இதுக்காகத்தான் இவைகளை அம்மாப் புலி அடிக்கடி இடம் மாற்றித் தூக்கிக் கொண்டு போகும். பூனை செய்யுதே. அதே மாதிரிதான். ஆனால் பதினைந்து நாட்களில் கண்கள் திறந்து விடும்."

"புலியும் பூனைக் குடும்பமாமே!"

"ஆமாம். பலவிதங்களில் இது பூனையுடன் தொடர்புடையது. கண்கள், குட்டியைத் தூக்கிக் கொண்டு அலைவது, நாக்கால் நக்கி உடலைப் பளபளப்பாக வைப்பது, பதுங்கிப் பதுங்கி இரைக்கு அருகே சென்று பாய்வது எல்லாமே பூனை மாதிரிதான். பூனைக்கு இருப்பது போலவே இதன் காலடிகள் மெத்து மெத்தென்று இருக்கும். நடந்தால் ஓசை கேட்காது. நகத்தை இழுத்துச் சுருக்கிக் கொள்ளும் அமைப்பு கூட வீட்டுப் பூனையைப் போலத்தான்."

"அது ஏங்க புலி வேட்டையை மட்டும் இரவில் வைச்சுக்கறாங்க?"

"புலிக்கு வெளிச்சத்தைக் கண்டால் கூச்சம். அதனால் இது இரவில்தான் வேட்டையாடும். இது வெளியே வரும் போதுதானே இதை வேட்டையாட முடியும்?"



அறிவியல் உண்மைகள்

- பூனைக் குடும்பத்தில் சிங்கத்திற்கு ஈடான வலிமையுள்ள பாலூட்டி புலிதான்.
- புலியின் பார்வை குறித்து அறிவியலாரிடையே ஒருமித்த கருத்து இல்லை. சிலர் கூரிய பார்வை உடையது என்கிறார்கள். சிலர் கிட்டப்பார்வைக் குறைபாடு உடையது என்கிறார்கள்.
- மோப்ப சக்தி அதிகமில்லை. ஆனால் செவிப்புலன் கூர்மையானது.
- நீந்தும். 18 அடி உயரம் தாண்டும். சிறுநீரைக் கழித்து எல்லையை வரையறை செய்து கொள்ளும்.
- அசைவமாக எதை வேண்டுமானாலும் தின்னும். தின்றது போக மீதியை மறைத்து வைத்திருந்து அடுத்த நாள் தின்னும். கெட்டுப் போய் இருந்தால் கூடப் பொருட்படுத்தாது.
- பயப்படுத்தி, பட்டினி போட்டுப் பணிய வைக்கலாம்.
- நக்கி நக்கி உடலைப் பளபளப்பாக்கி சுத்தமாக வைத்திருக்கும்.
- இரையை வெகுதூரம் துரத்தாது. திரும்பி விடும்.
- உடலில் உள்ள வரிகள், பஞ்சுக் கால்கள் இயற்கை அளித்துள்ள கொடை. இவற்றைக் கொண்டே இது இரையை நெருங்கிப் பிறகு பாய்கிறது.
- இந்தியப் புலிகள் அழகுக்கும் கம்பீரத்திற்கும் பெயர் போனவை.
- ஆசிய வனவிலங்குகளில் அழியும் பட்டியலில் முதலில் இடம்பெற்றிருப்பது இந்தியப் புலிகளே.

"புலியும் சிங்கமும் சண்டை போட்டால் எது ஜெயிக்கும்?"

"இரண்டும் சமமாக இருக்கும். சிங்கத்திற்கு ஈடான வலிமையுடையது புலி."

"புலி துரத்தும் போது மரத்தில் ஏறியோ, நீந்தியோ தப்பிக்கலாமாங்க?"

"புலி, உயரவாட்டில் 18 அடி வரை தாவும். நீரில் நல்லா நீந்தும்!"

புதர்களை விலக்கிக் கொண்டு இவர்கள் முன்னேறிய போது எதிரே இன்னொரு கிராமவாசிக் கூட்டம், அவசரம் அவசரமாக வந்து கொண்டிருந்தது. அருள்சாமியைக் கண்டதும், அதில் ஒருவர் முன்னே வந்து, "ஐயா, அந்த ஆட்கொல்லிப் புலி ஒரு பாழுங்கிணற்றில் விழுந்துட்டதுங்க!" என்றார் பரபரப்புடன்.

"எப்படி! அதிசயமா இருக்கே?"

"புலி ஒரு செம்மறியாட்டைத் துரத்தி இருக்கு. அது ஓடிப் போகும் போது தவறி பாழுங்கிணற்றில் விழுந்திருக்கு. புலியும் அதன் பின்னாலேயே தாவி இருக்கு. இரண்டும் இப்போ கிணற்றுக்குள்."

"கிணறு ரொம்ப ஆழமமான கிணறுங்க. முப்பதடிக்கு மேல் ஆழம் இருக்கும்."

"இப்ப என்னப்பா பண்ணப் போறீங்க? புலியைச் சுடப் போறீங்களா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"இல்லை. இவங்க சொல்றதைப் பார்த்தால் புலி தப்பிக்க முடியாத கிணற்றில் விழுந்து விட்டதாகவே தோன்றுகிறது. துப்பாக்கிக் குண்டுக்கு வேலை இருக்காது. மயக்கம் வரக் கூடிய மருந்து உள்ள குண்டு இருக்கிறது. அதை வைத்துச் சுட்டால் புலி மயங்கி விடும். உடனே அதைக் கூண்டில் அடைத்து உயிர்க் காட்சி சாலைக்கு அனுப்பி விட லாம்" என்றார் அருள்சாமி.

தூரத்தில் புலி உறுமும் சத்தம் கேட்டது.

"ஏங்க, என்னவோ புலியைப் பதினாறு அடி வேங்கைன்னு சொல்றாங்களே... அது ஒன்பது அடி கூட இல்லே போல இருக்கே!"

"பதினாறு அடி என்பது புலியின் நீளத்தைச் சொல்றது இல்லீங்க. அது தாண்டக்கூடிய நீளத்தைங்க!" என்று சிரித்தார் அருள்சாமி.

பெயரென்ன?

இங்கே பத்து உயிரினங்களின் படங்களும் சிறுவர் படங்களும், அவர்கள் பெயரோடு உள்ளன. சிறுவரின் பெயரில் உள்ள முதல் எழுத்து, ஓர் உயிரினத்தின் முதலெழுத்தாகும். உதாரணம் நாராயணன் - நாய். இனி மற்றவைகளை நீங்களே கண்டுபிடியுங்கள்.



விடை : காந்திமதி - காகம், ஆதிமூலம் - ஆமை, யாமினி - யானை, கண்ணன் - கரடி, புகழேந்தி - புலி, மரகதம் - மயில், சித்ரா - சிங்கம், வாசுகி - வாத்து, கோபால் - கோழி.



‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை!’ ‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே!’ - இவை இரண்டும் உப்பின் பெருமையைக் கூற வந்த பழமொழிகள்!

நமது உணவிற்குச் சுவையூட்டக் கூடிய உப்பில் 40 சதவீதம் சோடியமும், 60 சதவீதம் குளோரினும் அடங்கியுள்ளன! உயிர்கள் முதலில் தோன்றியது உப்பு நீரிலிருந்துதான்! கடலிலிருந்து நிலத்திற்கு வந்த பின்னும் உயிர்களின் வளர்ச்சிக்கு உப்பு இன்றியமையாததாகிவிட்டது!

உப்பும் உலக நாகரீகமும் சேர்ந்தே வளர்ந்திருக்கிறது எனலாம்! உப்பிற்காக நடந்த போர்களும் உண்டு! நமது நாட்டு விடுதலை இயக்கத்திற்கு உப்பு சத்தியாக்கிரகம்' ஒரு முக்கிய திருப்புமுனை என்பது யாவரும் அறிந்ததே! பைபிளில் உப்பு ஒப்பந்தம்' இதன் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துகிறது.

முன்பு ரோமப் படை வீரர்களுக்கு ஊதியமாக உப்போ அல்லது அதை வாங்கத் தகுந்த அளவு பணமோ கொடுத்தனர்! அந்தப் பணத்திற்குத்தான் ‘சாலரியம் அர்ஜெண்டம்’ என்று பெயர்! அது மருவித்தான் இன்றைய ‘சாலரி’ (Salary) ஆயிற்று!

உப்பை, நட்பிற்கு அடையாளமாகக் கொண்டிருந்தனர் அரேபியர்கள்! இஸ்ரேலில் உப்பு வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் உண்டு! நம் நாட்டிலும் நவக்கிரகங்களில் ஒன்றிற்கு உப்பு நிவேதனம் செய்யும் பழக்கம் உள்ளது!

உப்பு, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று! உணவு செரிக்க, நரம்புகளின் செயல் திறனை அதிகரித்து, உமிழ் நீரைச் சுரக்க வைக்க உப்பு உதவி செய்கிறது! உயிரணுக்களின் வளர் சிதை மாற்றத்திற்கு உப்பு தேவைப் படுகிறது. உடலிலுள்ள நீரோட்டத்தையும் இரத்த ஓட்டத்தையும் ஒழுங்குபடுத்துவது இதுதான்!

அளவுக்கு மீறினால் உப்பும் நஞ்சுதான்! உடலில் உப்பு அளவிற்கு அதிகமானால் வியாதி வரும்! அதே சமயம் குறைந்தாலும் நோய் தோன்றும்!

பெரும் பகுதி உப்பு கடல் நீரிலிருந்து தான் எடுக்கப்படுகிறது! உப்புச் சுரங்கங்கள்



விருந்தும் கணிசமான அளவு வெட்டி எடுக்கப்படுகிறது!

இந்தியாவில் பஞ்சாபிலும், இமய மலைப் பகுதியில் மண்டி, கூமா, தரங், மைகால் முதலான இடங்களில் உப்புச் சுரங்கங்கள் உள்ளன!

குறைந்த செலவில் எளிதாக எடுப்பது கடல் உப்பு ஆகும்! வெப்பமிகு நாடுகளில் கடற்கரையோரம் பாத்திகள் கட்டி அதில் நீரைப் பாய்ச்சுவார்கள்! இதிலுள்ள நீர் ஆவியானதும் உப்பு மீந்து இருக்கும். அதை எடுத்துச் சென்று தூய்மைப்படுத்துவார்கள்! நம் நாட்டில் மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில்தான் உப்புக் காய்ச்சுவது ஒரு குடிசைத் தொழிலாக வளர்ந்திருக்கிறது.

உப்பு பல தொழில்களில் பயன்படுத்தப்படுகிறது. விவசாயம், ரசாயனம், உணவுத் தொழில், உலோகங்களில் இருந்து மருந்து தயாரிக்க, துணிகள், ரிப்ரிஜெரேட்டர்கள், பீங்கான் தொழில் முதலியன அவற்றுள் சில!

சோடியம் கார்பனேட் உப்பின் ஒரு வகை. இது சலவைச் சோடா, கண்ணாடி கள் தயாரிக்க, பற்பசை செய்ய, சோப்புக்கள் தயாரிக்க உதவுகிறது.


சோடியம் சல்பேட் காகிதம் தயாரிக்க உதவுகிறது. காஸ்டிக் சோடா, உயர் ரக சோப்புக்கள் செய்யவும், ரேயான் இழைகள் தயாரிக்கவும், பெட்ரோலியம் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.


மற்றும் தோல் பதனிட, சாயம் காய்ச்ச, புகைப் படத் தொழில், நீரைத் தூய்மைப் படுத்த, செயற்கை ரப்பர், வெடி மருந்து, செயற்கைத் துணிகள், பூச்சிக் கொல்லி மருந்து முதலியவைகள் செய்யவும் இதைப் பயன் படுத்துகிறார்கள்!

உப்பின் உபயோகம் ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல! ஏராளம்! ஏராளம்!

- அ. சுப்பையன்.

உப்போ உப்பு!





ராமசாமி ஜோதிடத்தில் புலி. அவர் எது சொன்னாலும் பலிக்கும் என்ற நம்பிக்கை மக்களின் மனத்தில் இருந்தது. அதனால் தினமும் ஜோதிடம் பார்க்க அவர் வீட்டில் கூட்டம் நெரியும். எக்கச்சக்கமான வருமானம். இதன் காரணமாக ராமசாமிக்குத் தலைக்கனம் அதிகமாயிற்று.

"என்னைப் போல ஜோசியம் சொல்ல யார் இருக்கிறார்கள் இந்த ஊரில்?" என்று மனைவியிடமும் மகனிடமும் கர்வத்தோடு கூறிக் கொண்டார்.

ராமசாமிக்கு ஒரு மகன். பெயர் ராமு. தந்தை இப்படி கர்வியாக இருப்பதை அவன் வெறுத்தான். ஒருநாள் இரவு தந்தை தன்னைப் பற்றிப் புகழ்ந்து தற்பெருமை பேசிக் கொண்டிருந்த போது ராமு குறுக்கிட்டான்.





வல்லவனுக்கு வல்லவன்

"அப்பா, வல்லவனுக்கு வல்லவன் உலகில் கண்டிப்பாக இருப்பான். ரொம்பவும் உங்களை நீங்களே உயர்த்திப் பேசிக் கொள்ளாதீர்கள்" என்றான் ராமு.

"எங்கேடா அந்த வல்லவன்? இருந்தால் அவனை வரச் சொல்லி என்னைப் போல ஜோசியம் சொல்லச் சொல்லுடா?" என்றார் ராமசாமி கர்வமும் கோபமும் தலைக்கு ஏற.

"இதோ நான்தான் அந்த வல்லவன்" என்று கைகட்டிப் பணிவாக தந்தையின் முன்னால் வந்து நின்றான் ராமு.


"என்னடா பயலே! நீயா?" என்று ஏளனமாகச் சிரித்த ராமசாமி, "ஜோசியத்தைப் பற்றி உனக்கு என்னடா தெரியும்?" என்று கேட்டார்.


"உங்களைவிட அதிகமாகத் தெரியும்" என்றான் ராமு பணிவாக.

வாசற் கதவை யாரோ தட்டினார்கள். ஜோசியம் பார்க்க எந்த நேரமும் மக்கள் ராமசாமியின் விட்டுக்கு வருவதுண்டு.

"டேய் பயலே, இந்த இருட்டு நேரத்தில், யாரோ ஜோசியம் பார்க்க வருகிறார்கள். நீயே போய் கதவைத் திற. வந்திருப்பவர்களுக்கு ஜோசியம் பார்த்து அனுப்பு. நான் இங்கே இருந்து உன் திறமையைக் கவனிக்கிறேன்" என்று மகனை அனுப்பி வைத்து மறைந்து கொண்டார் ராமசாமி.

ராமு போனான். விளக்கை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தான். வந்தவரை உள்ளே அழைத்து வந்தான். உட்கார





"குடிக்க முடியாத ரசம் எது?"

"பாதரசம்...!"

– கி. சிவா

வைத்தான்.

"நீங்க தென்மேற்கு திசைப் பக்கத்தில் இருந்துதானே வருகிறீர்கள்?"

"ஆமாம்!"

"உங்கள் பெயர் கருப்பன்தானே?"

"அட, ஆமாம்!"

"பொழுது விடிந்து ஜோசியம் பார்க்க வந்திருக்கக் கூடாதா? உங்கள் மனைவிக்கு என்ன இப்படி அவசரம்? இந்த இருட்டில் சூறாவளிக் காற்று வீசும் இரவில் அனுப்பி வைத்திருக்கிறார்களே?"

"எல்லாத்தையும் இத்தனை சரியாச் சொல்றீங்களே தம்பி! தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் பாங்க. அது உண்மையாப் போச்சு. அப்பா இல்லையானால் பரவாயில்லை. எனக்கு நீயே ஜோசியம் பாருப்பா," என்று குழைந்தார் வந்தவர். ராமு ஜோசியம் கூறி வந்தவரை மனநிறைவு கொள்ள வைத்து அனுப்பினான்.

வந்தவர் போனதும், ராமசாமி ஓடி வந்து மகனை அணைத்துக் கொண்டார்.

"தென்மேற்குத் திசைக்காரர் என்பதை எப்படிக் கண்டுபிடிச்சே?"

"அவரோட முடி பின்பக்கம் கலைந்து முன்பக்கம் விழுந்திருந்தது. இப்ப அடிக்கும் பெருங்காற்று இந்தத் திசையில் இருந்துதான் அடிக்கிறது."

"பெயரைக் கருப்பன்னு எப்படிக் கண்டுபிடிச்சே?"


"அவர் குடையை மடக்கினப்போ குடையில் கே. ஆர். பின்னு எழுதியிருந்தது."

"அவர் மனைவி அனுப்பி வந்தவர்னு எப்படிச் சொன்னே?"

"இத்தனை கடுமையான காற்று அடிக்கும் இரவில் யாரும் ஜோசியம் பார்க்கத் தானாக வர மாட்டார்கள். பிறருடைய தொந்தரவு தாளாமல்தான் வருவார்கள். அது பெரும்பாலும் அவரது மனைவியாகத்தான் இருக்கும். மற்றவர்களாக இருந்தால் சமாதானப்படுத்திவிட்டு காலையில் வந்திருப்பார் என்றுதான் யோசித்து ஊகத்தின் அடிப்படையில் சொன்னேன்."

"நீதாண்டா எனக்கு வல்லவனுக்கு வல்லவன்" என்று மகனை அணைத்து மகிழ்ந்தார் ராமசாமி.

- எம். பத்மப்ரியா,
விஷ்ணுபுரம்.



"உன்னைத் துருவித் துருவிக் கேட்டாங்களே, அப்படி என்ன திருடினே?"

"தேங்காய்தான்!"

- எஸ். தட்சணாமூர்த்தி,
நாகலூர்.



லால் & லால் மாயாஜால்!

உலகப் புகழ்பெற்ற மாஜிக் நிபுணர்களான கே.லால், ஜுனியர் லாலின் ''மாயாஜால்'' மந்திரக் காட்சி சென்னையில் நடந்தபோது, காட்சி முடிந்த பிறகு கோகுலத்தின் சார்பில் நான்கு சிறுவர் சிறுமியர் அவர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டனர்.

அரவிந்த்: அங்கிள்! உங்க மேஜிக் புரோகிராம் சூப்பர்!பாட்டலில் நிறைய சாக்லேட் வரவழைச்சுக் கொடுத்தீங் களே! நீங்க தூக்கிப் போட்ட சாக் லேட்டை நான் கூட கரெக்டா காட்ச் பிடிச்சிட்டேன்.

காயத்ரி: ஆனா, ஒரு பெண்ணை வெட்டினது ரொம்ப பயங்கரம்.

சீனியர் லால்: அந்தப் பெண்ணை வெட்டவே இல்லையே! நிஜத்தில் தினமும் அப்படி வெட்டினால், என்ன ஆகும்?

பரணி: அப்படின்னா, நீங்க நிஜமா வெட்ட மாட்டீங்களா?

சீனியர்: கிடையாது. வெட்டுவது போல ஒரு பிரமையை ஏற்படுத்துகிறேன். அதாவது அது ஒரு மாயத்தோற்றம் (இல்யூஷன்) அவ்வளவுதான்.





கார்த்திக்: வாயி விருந்து, பளபளன்னு பந்து வரவழைச்சது?

ஜூனியர் லால்: எல்லாமே தந்திரம் தான்.

அரவிந்த்: மேஜிக்கை எப்படிக் யார் கிட்ட கத்துக்கிட்டீங்க?

சீனியர் லால்: ஆறு வயதுச் சிறுவனாக இருக்கும்போது மாமாவுடன் கல்கத்தாவில் ஒரு எக்ஸிபிஷனுக்குப் போனேன். அங்கே கணபதி சக்ரவர்த்தி என்பவரின் மாஜிக் நிகழ்ச்சி. அதைப் பார்த்து விட்டு, மேஜிக் நடத்தியவரைப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்க, வேறு வழியில்லாமல் மாமா என்னைக் கூட்டிக் கொண்டு போனார். நான் அவர் செய்த மேஜிக் சிலவற்றை, இப்படித்தானே செய்தீர்கள் என்று விளக்கினவுடன், அவர் என் மாமாவிடம் "இந்தப் பையன் பிறவி மேஜிக் நிபுணன்" என்று பாராட்டி, "இந்தப் பையனை என்னிடம் விட்டு விடுங்கள். நான் இவனுக்கு மேஜிக் சொல்லிக் கொடுத்து, பெரிய ஆளாக்குகிறேன்" என்றார். முதலில் என் வீட்டில் சம்மதிக்க வில்லை. அப்புறம் ஒரு வழியாக அனுமதிக்க பலவிதமான தந்திரங்களை என் குரு கற்றுக் கொடுத்தார்.

பரணி: நீங்கள்தான் உங்கள் மகன் ஜூனியர் லாலுக்கு குருவா?

ஜூனியர் லால்: இல்லை: எனக்கு மேஜிக் கற்றுக் கொடுக்கக் கூடாது என்று என் அம்மா, எங்க அப்பாவிடம் (சீனியர் லாலிடம்) கண்டிப்பாகக் கூறிவிட்டார். அதோடு இருபது வயதுக்கு பிறகுதான் எனக்கே மேஜிக்கில் ஆர்வம் வந்தது. பெற்றோருக்குத் தெரியாமல் வேறு ஒருவரிடம் ரகசியமாய்க் கற்றேன். ஒரு நாள் என் அப்பாவுக்கு சில மேஜிக் காட்சிகளைச் செய்து காட்டி அவரை



அசத்தினேன்.

அம்மாவுக்கு விஷயம் தெரிந்ததும், வாக்குறுதியை மீறி, அப்பாதான் எனக்கு மேஜிக் கற்றுக் கொடுத்து விட்டதாகத் தவறாக நினைத்துக் கொண்டு கோபப் பட்டார். விஷயத்தை விளக்கிச் சொன்னபின் சமாதானமடைந்தார்.

பரணி: நீங்கள் இருவருமாய்ச் சேர்ந்து எங்கெல்லாம் மேஜிக் ஷோ நடத்தியிருக்கிறீர்கள்?

சீனியர்லால்: அமெரிக்கா, ஜப்பான், ஸ்ரீலங்கா, ஐரோப்பிய நாடுகள் இப்படி நிறைய நாடுகளில் நடத்தியிருக்கிறேன். இந்தியாவின் பெரிய நகரங்களில் எல்லாமே என் நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இது வரை 'மாயாஜால்' நிகழ்ச்சி, சுமார் பதினைந்தாயிரம் முறைநடைபெற்றிருக்கிறது. இந்த சாதனைகின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் தகுதி படைத்தது.

காயத்ரி: நீங்கள் வேறு ஒரு மேஜிஷியனின் நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, இதை அவர் இன்ன டிரிக்கைப் பயன்படுத்தி, இப்படிச் செய்கிறார் என்று கண்டுபிடித்து விடுவீர்களா?

சீனியர்லால்: ஓ எஸ்! அமெரிக்காவின் மிகப் புகழ்பெற்ற மேஜிக் நிபுணர் டேவிட் காப்பர் ஃபீல்டு. அவருடைய இருபது நிமிட நிகழ்ச்சி யொன்றை நான் பார்த்தேன். அப்போது நான் பார்த்த இரு மேஜிக் காட்சிகளை இப்படித்தான் செய்திருப்பார் என்று யூகித்து, அதை இன்னும் 'இம்ப்ரூவ்' செய்து நான் வடிவமைத்தவை தான் ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம் கொண்ட சின்னஞ்சிறு பெட்டிக்குள் ஒரு பெண்ணை வைப்பது, ஒரு பெண்ணின் தலையைப் பிடித்து, கிறு கிறுவென்று 'ஸ்குரு' போலச் சுழற்றுவது இரண்டும்.

கார்த்திக்: ரொம்ப ஆச்சரியமாக இருந்தது!

பரணி: அந்தப் பெண்ணுடைய கழுத்தைப் பிடித்து கிறுகிறுவென்று சுழற்றிய போதும், உடல் மறைந்திருந்த பெட்டியைத் திறந்து, அவருடைய உடம்பைத் துவைத்துப் பிழிந்த துணிபோல சுருண்டு இருந்ததைக் காட்டிய போதும், எனக்குத் தலை சுற்றுவது போல இருந்தது.



அரவிந்த்: நீங்கள் உங்களுக்குத் தெரிந்த மேஜிக்கை வேறு மேஜிக் நிபுணருக்கு சொல்லிக் கொடுத்து விட்டு, பதிலுக்கு அவரிடமிருந்து ஒரு புதிய மேஜிக்கைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவீர்களா?

லால்: ஓ! அப்படியும் செய்து கொள்ளுவது உண்டு. ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு மேஜிஷியன், மேடையில் பெண்களின் உடைகளை நிமிஷத்துக்கு நிமிஷம் மாற்றுகிற மேஜிக்கைத் தனக்குத் கற்றுக் கொடுத்தால், ஐந்து லட்சம் ரூபாய் கொடுப்பதாய் கூறினார். ஆனால், நான் எனக்கு ஐந்து லட்சம் ரூபாய் வேண்டாம். அதற்குப் பதிலாக எனக்குத் தெரியாத ஒரு மேஜிக்கைக் கற்றுக் கொடுங்கள் என்று கூறிவிட்டேன். அதன்படி நான் அவருக்கு மேஜிக் சொல்லிக் கொடுத்து விட்டு, அவரிடமிருந்து ஒரு புது மேஜிக் ஐட்டத்தைக் கற்றுக் கொண்டேன்.

காயத்ரி: நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து தானே மேஜிக் நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள்? திடீரென்று ஒருவருக்கு உடம்பு சரியில்லாமல் போனால் என்ன செய்வீர்கள்?

ஜூனியர்லால்: அப்படிப் பட்ட சூழ்நிலை ஏற்பட்டு விட்டால், இன்னொருவரே முழு நிகழ்ச்சியையும் நடத்தி விடுவோம். இரண்டு பேருக்கும் எல்லாம் பழக்கமே!

கார்த்திக்: ஒரு பெட்டிக்குள் பெண் ஒருவரை வைத்துப் பூட்டிவிட்ட, சில விநாடிகளில், அவர் வெளியில் வந்து விடுகிறார். வெளியில் நின்று கொண்டிருக்கும் நீங்கள் உள்ளே போய் விடுகிறீர்களே! எப்படி?

லால்: (இருவரும் சிரித்தபடி): அதுதான் மேஜிக். இந்த மாதிரி மேஜிக்கைக் கண்டு பிடித்தவர் ஹூடினி என்ற மேஜிக் நிபுணர். அமெரிக்காவின் வெகு பிரபலமான மேஜிக் நிபுணர்களில் இவரும் ஒருவர்.

கார்த்திக்: பாதிமேஜிக்கின் போது, அலிபாபா கதை மாதிரி மந்திரம் மறந்து போனால் என்ன பண்ணுவீர்கள்?

ஜூனியர்லால்: மேஜிக் செய்பவருக்கு எந்த விதமான மந்திர சக்தியும் சூப்பர் சக்தியும் கிடையாது. மேஜிக் என்பது தந்திரத்தாலும், பிரமை

(இல்யூஷன்) யாலும், நடக்காத ஒன்றை நடப்பது போலவும் இல்லாத ஒன்றை இருப்பது போலவும் காட்டுவதுதான். எந்த மனிதருக்கும் சூப்பர் சக்தி கிடையாது.

காயத்ரி: எங்களுக்கு, ஈஸியாய்க் கற்றுக் கொண்டு, செய்யும் படி ஒரு சின்ன மேஜிக் சொல்லிக் கொடுங்களேன்.

சீனியர்லால்: மற்றும் ஜூனியர்லால்: ஓ எஸ்! சொல்லிக் கொடுக்கிறோமே!

பரணி: *(ஜூனியர்லாலிடம்)* உங்கள் தந்தை மேஜிக் நிபுணர். அவருடைய வாரிசான நீங்களும் மேஜிக் நிபுணர். உங்கள் மகனும் மேஜிக் நிபுணராக வருவாரா?

ஜூனியர்லால்: இப்போ யாருக்கும் ஆர்வம் இல்லை. ஒரு வேளை என்னைப் போல இருபது வயதில் வருமோ என்னவோ?

எல்லோரும் சிரித்தனர். தங்கள் மேஜிக் நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் அடங்கிய வண்ணப் படங்கள் நிறைந்த புத்தகத்தில் சீனியர் லால், ஜூனியர்லால் இருவரும் ஆட்டோ கிராப் போட்டு, நினைவுப் பரிசாய் வழங்க, நால்வரும் மகிழ்ச்சியோடு கைகுலுக்கி விட்டு, விடை பெற்றனர்.

தீப்பெட்டி மேஜிக்

லால் சொல்லிக் கொடுத்த தீப் பெட்டிக்குள் பூதம்!

ஜூனியர் லால், மூன்று தீப்பெட்டிகளை மேஜை மீது வைத்தார். காலிதான் அவை என்று நான்கு பேரும் திறந்து பார்த்து உறுதி செய்தனர். அடுத்து ஒவ்வொரு பெட்டியாய் ஒரு கையில் எடுத்து ஆட்டிக் காட்டினார் லால். சப்தம் ஏதும் வரவில்லை. இப்போது உன்னிப்பாய்க் கவனியுங்கள் என்று கூறிவிட்டு, ஒரு பெட்டியை எடுத்து லேசாக ஆட்ட, தீப் பெட்டிக்குள் கற்களைப் போட்டு ஆட்டுவது போலச் சப்தம் வந்தது!

மூன்று பெட்டிகளையும் மற்றவர் ஆட்டியபோது சத்தம் வரவில்லை. மேஜிக் நிபுணர்கள் ஆட்டினதும் சத்தம் வந்தது! மற்றவர்கள் ஆட்டும்போது வராத சத்தம் ஜூனியர்லால் ஆட்டும் போது மட்டும் வருகிறதே! இது எப்படி?

சீனியர்லால், ஜூனியர்லாலின் முழுக்கை சட்டையை மெதுவாக மேலே நகர்த்த, ஜூனியர்லாலின் மணிக்கட்டில், இன்னொரு தீப்பெட்டி. ரப்பர் பேண்டால் டைட் ஆகக் கட்டப் பட்டிருந்தது! லால் கையை அசைக்க, மணிக்கட்டில் கட்டப் பட்டிருந்த தீப்பெட்டிக்குள்ளிருந்து சப்தம் வந்தது. அதைத் திறந்து காட்டினார்லால். உள்ளே சிறியதாய் ஒரு கோலிகுண்டு. இதை நீங்களும் செய்து காட்டி நண்பர்களை அசத்தலாமே!"


நிகழ்ச்சி ஏற்பாடு: பிரபாத் கல்கரல் ஆறுமுகம், மற்றும் அப்பாஸ் ஜெயராமன்.


தொகுப்பு: **எஸ்.சந்திரமௌலி,**
படங்கள்: **சோமு.**

"மழை பெய்வதால் ஏற்படும் நன்மை ஒன்றை சொல்...?"

"ஸ்கூல் லீவ் விடுவாங்க சார்!!"

- ப. கணேஷ்ராகவன்





"அவன் பக்கத்தில் உட்கார்ந்தால் தும்மல் வருகிறதே ஏன்?"

"அவன் "மிளகாய்" வியாபாரியோட மகனாச்சே!"

- வே. பூங்குன்றன்

உங்கள் நூலகம்

அடிமையின் விடுதலை, புவனை கலைச் செழியன், பக். 64. ரூ. 12- கலை இல்லம், கிரப் பாளையம், தெ.ஆ. மாவட்டம் - 608 602.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறுவர் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தி வரும் ஆசிரியரின் மொழிபெயர்ப்பு நூல் இது. உலகப் புகழ்பெற்ற ஹாரியட் பீச்சர் ஸ்டோவ் எழுதிய Uncle Tam's Cabin ஐப் பலர் தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். அவைகளுள் இது தனி இடத்தைப் பெறுகிறது. காரணம், ஆசிரியரும் திறமையான சிறுவர் இலக்கியப் படைப்பாளி. நூலும் மிகச் சிறந்த சிறுவர் நூல். சட்டப்படி, அடிமைத் தளையை அறுப்பதில் ஆபிரஹாம் லிங்கன் எடுத்த முயற்சிகளுக்கு மக்களைத் தயாராக்கித் தந்த பெருமை பெற்ற சிறுவர்க்கான நாவல். இதன் நடை, முதல் நூல் இல்லை மொழி பெயர்ப்பே என்பதை ஆங்கிலப் பெயர்கள் தான் நினைவூட்டுகின் றன. சிறப்புக்கு வேறு என்ன வேண்டும்?



நகையைச் சுவையுங்கள், கரடிக்குளம் ஜெயா பாரதிப் பிரியா, பக். 200. ரூ. 27.50, மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் செட்டி தெரு, தி. நகர், சென்னை - 600 017.

பல பத்திரிகைகளிலும் ஜோக்குகளை எழுதி, வாசகர்களைச் சிரிக்க வைப்பதில் வெற்றி கண்ட திறமைமிக்க ஜோக் எழுத்தாளரின் ஜோக் தொகுப்பு நூல். 90% பெரியவர்களுக்கானவை. சிறுவர்க்காக வும் இருக்கின்றன. மாதிரிக்கு இதோ :

"அப்பா நான் பரீட்சைக்குப் போயிட்டு வரேன்!"

"விஷ் யூ ஆல் த பிட்ஸ்!" - பக். 75

இந்த மாதிரித் தொகுதிகளில் சிறுவர்க்கானவை என்று பிரித்துக் கடைசியில் தனியாகக் கொடுத்தால், குழந்தைகளுக்குத் தைரியமாகப் படித்துக் காட்டி, அவர்களையும் மகிழ வைக்கலாம். ஜோக் எழுதுவது என்பது எத்தனை கடினமான பணி என்பதை அறிந்தவரே உணர்வார்கள். அரிய தொகுப்பு.

ஊக்கமே உயர்வுக்கு வழி, சி. நற்சோணை, பக். 64 ரூ. 8/-, டி. எஸ். புத்தக மாளிகை, 6, ஜெய்சங்கர் தெரு, மே. மாம்பலம், சென்னை - 600 033.

குறள் கூறும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட ஆசிரியையின் பதிமூன்று மணியான சிறு கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொன்றும் ஓர் அறிவு புகட்டல். குழந்தைகளுக்கான சூழ்நிலையில், அவர்களுக்குப் பழக்கப்பட்ட பிரச்னைகளை வைத்தே கதைகளைப் பின்னியிருப்பது பாராட்டத்தக்கது. சிறுவர் இலக்கியம் படைக்க அதிக அளவு பெண் எழுத்தாளர் முன்வருவதில்லை என்ற குறையை இது போக்கி வைக்கிறது.

மாண்டலின் வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், எஸ். பாலசந்த்ர ராஜு", பக். 176, ரூ. 25/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் செட்டி தெரு, தி. நகர், சென்னை - 17.

இத்தாலி நாட்டுத் தந்தி இசைக் கருவியான மாண்டலின் ஐரோப்பாவின் புகழ்பெற்ற வாத்தியம். வயலினை கர்நாடக இசைக் கருவியாக்கி வெற்றிகண்ட மாதிரியே இதையும் மிகச் சிறந்த கர்நாடக இசைக் கருவியாக்கி வெற்றி காண்பதில் இந்தத் தலைமுறைக் கலைஞர்கள் வெற்றி கண்டுள்ளனர். மாண்டலின் கற்கப் பல பள்ளிகள் இருப்பினும், அதைக் கர்நாடக இசையாக்கிக் கொள்ளப் பயிற்சி தருவோர் மிகக் குறைவு. அந்தக் குறையை இந்த நூல் நிறைவு செய்கிறது. மாண்டலின் கண்டுபிடிப்பு, பரவிய விதம், பெற்றுள்ள சிறப்பிடம், அதன் நவீன கால அமைப்பு, கையாள வேண்டிய விதம், தனிக் கற்பனைகளுக்கு இடமளிக்கும் இடங்கள், அதைப் பாதுகாக்கும் விதம், வாசிப்பை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகள், ஸ்வரப்படுத்தப்பட்ட கீர்த்தனைகள் என்று இதில் முழுநேர மாண்டலின் ஆசிரியரே அடக்கம். பாராட்டத்தக்க, பயன் மிக்க படைப்பு.

உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர்க்கான நூல்களும், அறிவியல், பொது நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். மற்றவைகளைத் தயவு செய்து அனுப்ப வேண்டாம். மதிப்புரைக்கான நூல்களின் இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை.



சார் தபால்!

★ பிரான்சின் டிரெக்கின் வீரதீரங்கள் படங்களுடன் சேர்ந்து டி.வி. பார்க்கும் உணர்வைக் கொடுத்தன. படங்கள் பொருத்தமாக இருந்தன. – மேலப்பாதி என். நாகராஜன், நாகூர் கி. தமீம் அன்சாரி, திருச்சி எஸ். வி. பார்த்தசாரதி, திருமங்கலம் ஸ்ரீராம், மற்றும் பலர்.

★ பவித்ராவை கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டியதைப் படித்த போது, கோகுலம் வாசகர் என்பதால் பெருமைப்பட்டேன்! – திருவாரூர் த. கலைதியாகராஜன், திருவண்ணாமலை என். சண்முகம், கோட்டக்கரை இ. இராமசாமி மற்றும் பலர்.

★ புதிய தொடர்கதை அடுத்த இதழுக்காக ஏங்க வைத்து விட்டது! – சிவகங்கை இரா. கண்ணன், கும்பகோணம் வெற்றிச்செல்வி, அரியலூர் எம். என். பாலசுப்ரமணியன், வடமதிமங்கலம் வே. பூங்குன்றன், ஆனைகல்மேடு சி. மகேஸ்வரன், கொண்டராம்பாளையம் எம்.எஸ். பெருமாள் நண்பர்கள், சக்கார் கொல்லைப்பட்டி பெரு. இளங்கம்பன், குடியாத்தம் ஏரிப்பட்டறை சி. எஸ். லலிதா, நாகூர் இ. தமீம் அன்சாரி, கோட்டக்கரை இ. ராமசாமி, சி. தனபால் நண்பர்கள் மற்றும் பலர்.

★ எமனையும் ஏய்க்கும் விடும் புரா எத்தனை விஷயங்களைத் தருகிறார்! சென்னை கோளரங்கைக் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது! – திருக்கண்ணங்குடி ஏ. ராகவேந்திரா, சாத்தூர் பா. காமதி, திருக்கண்ணபுரி வே. லலிதா, சுந்தரம் பாண்டியம் எம். ரமணன் மற்றும் பலர்.

குழம்புவார்களே!

★ காசு தராமல் கோகுலம் வாயிலாகவே வைத்தியம் பார்க்கிறார்– டாக்டர் கு. கணேசன், கோனாப்பட்டு ரி. ஆர். செந்தில்குமார் நண்பர், கோட்டக்கரை இயற்கைப் பிரியன், மேலகிருஷ்ணன் புதூர் கே. எஸ். புனிதா, சுந்தருவி, மற்றும் பலர்.

★ ஏற்கெனவே வெளியான ஜோக்குகளையே மறுபடி போட ஆரம்பித்து விட்ட உங்களை மன்னிக்கவே மாட்டோம்! – எலவனாசூர் கோட்டை ம. வேல் முருகன், நாகை க. சங்கர்தயாள், போரூர் கி. சிவா மற்றும் பலர்.

★ "பல்லி பெரிசா? யானை பெரிசா?" என் பய உணர்வைப் போக்கியது. – திருச்சி எஸ். வி. பா. சாரதி, வடமதிமங்கலம் வே. பூங்குன்றன், திருவெற்றியூர் ப. கணேஷ்.

★ லாராவின் சாதனை அற்புதமான தொகுப்பு! – தக்கோலம் எம். என். முன்தபா, அரக்கோணம் ஜி. புவனேஸ்வரன்.

★ மலைப் பாம்பில் இத்தனை செய்திகளா! – ஜோதிநகர் ப. கணேஷ், கோட்டக்கரை இ. இராமசாமி, சி. தனபால், இஞ்சிக்கொல்லை ரங்கநாதன் மற்றும் பலர்.

★ சுதந்திரதினம் வெறும் "விடுமுறை நாள்" என்ற உணர்வை "சும்மாவா கிடைத்தது?" மறக்க வைத்து பக்தி கொள்ள வைத்தது. – சிங்காரப்பேட்டை, மு. ஜானகி, அம்பாசமுத்திரம், மா. தனபால், சிதம்பரம் ஸ்ரீவித்யா காளிதாஸ் மற்றும் பலர்.

★ "வள்ளியப்பா நினைவுப் போட்டி" நான் மாணவனாக இல்லையே என்று ஏங்கவைத்துள்ளது. பாபநாசம் வி. சந்திரன், குலசேகரபுரம் வே. ரஹ்மான், தூத்துக்குடி வா. செனய்யா, காவேரிப்பட்டணம் சோம்ஸ், ஏழு கிணறு எஸ். பாலாஜி, மற்றும் ஏராளமானோர்.

★ கண்ணகி வழக்குரைத்தது மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியன் சபையில் அல்லவா? மீட்டூர் மு. தேவ்வானையின் கடிதத்தை அப்படியே போட்டு விட்டீர்களே! படிக்கும் குழந்தைகள் குழம்புவார்களே? – புதுவை எம். எஸ். காந்திமேரி.
(உண்மைதான். தவறுக்கு வருந்துகிறோம். – ஆசிரியர்.)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

REGISTERED NO. TN MS (S) 28
Registered as Newspaper in Srilar

DIAMOND COMICS

PRESENTS


AN UNENDING SERIES OF THE MOST RENOWNED COMICS IN THE WORLD, LIKE...




PHANTOM
A typical character of the comic surviving in his own life for hundred of years like one soul in a series of bodies. He has taken a pledge to efface all evil from the world. Although he dwells in the dense jungle, his field of action covers the whole world. He is the most helping friend for the needy distressed persons for his adversaries but a vemitable death.



MANDRAKE
The most widely reac comic character in world, who can hypotise anyone merely by lookin him. His enemie determied to er existence but time not he b they who lo before his mighty ma



SPIDER MAN
An unbelievable existence who in reality is a very jovial handsome youth, hating all that is criminal and evil in the world. When he comes in his deadly Spider-Form his enemies cannot stand before his illimitable power No place is inaceesible for him. even that too which is beyond the imagination.



JAMES BON
An ace British detective knowr his daredevilry love for all goo things of life including th young beau An expert masqurad who new fails in h missio how s ever dang bus

NEW DIAMOND COMICS (JUNE 94)

Pran's—Chacha Chaudhary & Bing Ben	8.00
Pran's—Pinki's New Frock	8.00
Agniputra Abhay & Khardulla	8.00
Mahabali Shaka & Ghosts in Uniform	7.00
Tauji & The Tiny Magician	7.00
Sprider Man-4	8.00
Phantom-33 (Digest)	15.00
Rasana Genie & Tarvil	7.00
James Bond-23	7.00
Mandrake-20	8.00

NEW DIAMOND COMICS (JULY 94)

Pran's - Shrimatiji On Hill Station	8.00
Pran's - Raman & Dish Antenna	8.00
The Explosion (Dynamite Series)	8.00
Chacha Bhatija & The Vengeance of a Snake	8.00
Fauladi Singh in the Trap of Enemy	7.00
James Bond-24	7.00
Mandrake-21	8.00
Phantom-24 (Digest)	15.00

DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut